
# மணியன்

மாத இதழ்

விலை ரூ.1.20

மார்ச் 1982



மணியன்
மாத இதழ்

மலர் 3 மார்ச் - 1982 இதழ் 11

நாவல்:
கல்யாண முருங்கை
சாதனை:
ஜெயகாந்தன்

டிட் - பிட்ஸ்

அட்டையை அலங்கரிப்பவர்!
திரு. பாலகுமாரன்

கடைசி அட்டையில்!
திரு. ஜெயகாந்தன்.

வண்ணப்படங்கள்: ஜே. டி. ஜான்

விலை ரு. 1-20

தி இதயம் பிரிண்டர்ஸில், அச்சிடுபவர்: ஜி.எம். குளத்து
இதயம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்: மணியன்.
ஆர்ட் டைரக்டர்: மாயா.
உதவி ஆசிரியர்கள்: சுபாஷிணி, நித்யானந்தம்.
முகவரி: 98, மவுண்ட் ரோடு, தபால் பை எண்: 1159
கிண்டி, சென்னை-600 032.

# கல்யாண முருங்கை

**பாலகுமாரன்**

## 1

கல்யாண சத்திரத்து நடுக்கூடத்தில் கல்லுப்பிள்ளையார் உட்கார்ந்திருந்தார். பிள்ளையாருக்கு இரண்டு பக்கமும் இரண்டு பெண்கள். கட்டான உடலமைப்போடு பிள்ளையாரைப் போலவே சட்டையின்றி உட்கார்ந்திருந்தனர். சித்தி – புத்தி என்று பெண்களுக்குக் கீழே பெயர் போட்டிருந்தது. பெண் என்பது இங்கு உண்மையிலேயே பெண் இல்லை. சித்தியும் – புத்தியும் ஒருவித குணு; ஒருவித சக்தி. சக்தியை பெண்ணைச் சொல்வது நமக்கு வழக்கம். புத்தி என்பது என்ன... தெரிகிறது. ஆனால் சித்தி...? ஞானமா? புத்தியோடுகூடிய ஞானமா? புத்தி இல்லாமலும் ஞானம் வருமா? அறிவுக்கூர்மையுடன் தேடித் தேடி அலைந்து அறிந்து கொள்வது இல்லாமல் சித்தி ஏற்படுமா?–நந்தனார்க்கு ஏற்பட்டது போல. வெகுளித்தனமே விவேகமாயும் அமைந்து விடுமா? ஒருவேளை பிள்ளையார் அப்படி இல்லை போலும்! அலைந்து, ஆராய்ந்து அறிந்து கொள்வதே உயர்வு என்று பிள்ளை

யார் சொல்கிறார் போலும்! தேடித் தெரிந்து கொள்வதே நியாயம் என்று உணர்த்துகிறார் போலும்!

என்னை நமஸ்கரிக்கச் சொன்னார்கள். நான் பொம்மை மாதிரி நமஸ்கரித்தேன். எழுந்து, ''ஹலோ, சித்தி... ஹலோ, புத்தி'' என்றேன். பிள்ளையாருக்கு ஹலோ சொல்லவில்லை. ஆண்களுக்குச் சட்டென்று ஹலோ சொல்ல முடியாது. கைகூப்பும்போது 'சௌக்யமா' என்று மட்டும் அவரை விசாரிக்கத் தோன்றிற்று. 'நாளைக்கு எனக்குக் கல்யாணம். நீங்க முன்னே இருந்து நடத்தி வைக்க வேண்டும்' என்று ஒரு வேண்டுதல் வந்தது. உள்ளே போய் புடவை மாற்றிக் கொள்ளச் சொன்னார்கள். நான் மட்டும் தனியே பின்பக்கம் நடந்தேன்.

''யப்பா...இப்பதான்டீ உன் மூஞ்சில கல்யாண களையே வந்திருக்கு!'' — கூடவே வந்த என் தோழி சுகுணா இடுப்பைக் கட்டிக் கொண்டாள்.

''நம்ம பொட்டியெல்லாம் உள்ள வந்துடுத்தா பாரேன். நான் சத்திரத்தை சுத்திப் பார்த்துட்டு வரேன்!'' — நான் இடுப்பை விடுவித்துக் கொண்டேன்.

நாலு கட்டு சத்திரம். அகலம் அகலமாய் அறைகள்: என் கல்யாணம் போல் நடக்க வேண்டுமென்றால் நாலு கல்யாணம் பண்ணலாம். என் கல்யாணத்திற்கு வந்தது எண்ணி பதினாறே பேர். உறவாகப் போகும் அவரைத் தவிர மற்ற எல்லாரும் சிநேகிதர்கள்.

வரும்போது இவர் சொன்னார்: ''இவ்வளவுதான் வருவாங்கன்னு தெரிஞ்சிருந்தா மெட்ராஸிலேயே கல்யாணம் பண்ணிண்டிருக்கலாம். அங்க கொஞ்சம் கூட்டம் சேர்ந்திருக்குமோ?''

''என்ன... கூட ஒரு பதினாலு பேர் சேர்ந்திருப்பாங்க!''

''அப்பவும் உன் சிஸ்டர்ஸ் வருவாங்கன்னு தோணலியா?''

''தெரியலே. வந்தாலும் வரலாம். வராம போனாலும் போகலாம்...''

''ஆள் கூட்டம் இல்லாதபோது இப்படி ஊர் விட்டு ஊர் வந்து கல்யாணம் பண்ணிக்கறதுதான் நல்லது. ஒரு சின்ன பிக்னிக் மாதிரியும் இருக்கும்.''

நான் அவரைத் திரும்பிப் பார்த்தேன்—

''கல்யாணம் பிக்னிக்கா இருப்பது கஷ்டமா இருக்குமா?''

''நல்லா இருக்குன்னு சொல்ல வரேன். கல்யாணம் சடங்குன்னாக்கா கவனமா இருக்கணும். வெறும் டிக்ளரேஷன்-அறிவுப்புங்கறபோது இப்படி செய்யறதுதான் நல்லது. நாற்பது வயசில பண்ணிக்கற கல்யாணம் சடங்கு மாதிரி இல்லாம இருக்கறதுதான் நல்லது. ஒருத்தரையொருத்தர் நல்லா தெரிஞ்சுட்டுப் பண்ணிக்கிற கல்யாணம் டிக்ளரேஷனா இருக்கறதுதான் மரியாதை. உறவு மனசுக்குள்ள நல்லா பதியணும்; ஆழமா, புனிதமா விழணும்னுதான் இத்தனை சடங்கு. பதிஞ்சு போனவளுக்குச் சடங்கு எதுக்கு? முதியோர் கல்வி மாதிரி பாந்தமில்லாம நிக்கும்;



அம்பது வயசுக் கிழவன் சிலேட்டும், பலப்பமுமா சம்மணம் போட்டு உட்கார்ந்து எழுதினா லேசா சிரிப்பு வரத்தான் செய்யும்; இது தப்புன்னு சொல்லலே. பாந்தமில்லேன்னுதான் தோணறது...'' — ரங்கா பிரசங்கம் செய்தார்.

இது சமாதானம். மனசை சமனப்படுத்திக் கொள்ளும் வெற்றுச் சமாதானம். தன்னைத்தானே நியாயப்படுத்திக் கொள்ளும் புத்தி. உலகம் சந்தோஷமயமானது என்று அடித்துச் சொல்லும் அகோரம். தனக்கு விளைவது எல்லாம் நல்லதுதான் என்று ஒளிந்து கொள்ளும் முயற்சி. அபிப்பிரா்யமற்று இருக்க யாருக்குமே தெரியவில்லை. புத்திசாலித்தனம். அதிகரிக்கிறபோது அபிப்பிராயங்களும் அதிகரிக்கின்றன. உதிர்வதற்குப் பதிலாய் இன்னும் கூடவே கொள்கைகள் ஒட்டிக் கொள்கின்றன. குழந்தைத்தனமும் இழந்து, முதிர்ச்சியும் வராது, இரண்டும்கெட்டானாய் போய்விடுகிறது. எனக்கு என் கல்யாணம் இப்படி நடக்கிறது என்பது பற்றி எந்த அபிப்பிராயமும் இல்லை. என் கல்யாணம் எப்படி நடக்க வேண்டும் என்று கனவு கண்டதுமில்லை. 'கல்யாணம் எதுக்கு? வெறுமே சேர்ந்திருப்போம்' என்று இவர் சொல்லியிருந்தால் நான் மறுப்பு ஏதும் சொல்லியிருக்க மாட்டேன்.

''சே...சே! நாளைக்கு நமக்குக் குழந்தை பொறந்தா நமக்குக் கஷ்டமாயிடும் விஜயலெக்ஷ்மி... குழந்தை தாலிக் கொடியோடா பொறக்கறது... தொப்புள் கொடியோடுதானே!''

''நீங்க அப்பான்னு கூப்பிடச் சொன்னேள்னா அதுக்கு அப்பா...இல்லேன்னா இல்லே.''

''அது புரியறது, விஜயலெக்ஷ்மி... நமக்கும் அவனுக்கும் உள்ள உறவு ஒண்ணும் குழப்பமில்லை. மூணாவது மனுஷங்க நம்மைப் பத்தி அபிப்பிராயம் சொல்றபோது அந்தக் குழந்தை குழம்பிடப்படாது.''

''குழந்தை பிறந்த பிறகு கல்யாணம் பண்ணிக்கலாமா?'' — நான் சீண்டினேன்.

''பண்ணிக்கலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனா இது பத்தி அவன் கேள்விப்பட்டாலும் குழம்பத்தான் செய்வான்; அப்நார்மலா ஒரு சிச்சுவேஷனை அந்த குழந்தைக்குக் கொடுப்பானேன்? நம்ப புத்தி, முரட்டுத்தனத்தை வச்சிண்டு நார்மலா இருக்கற சூழ்நிலையை வேண்டாம்னு தடுப்பானேன்? சின்ன வயசிலேயே உறவுக் குழப்பம் ஏற்பட்டு அவன் மறுகக் கூடாது, இல்லையா? கல்யாணம் ஒரு சடங்கா இருக்கறதுக்கு ஒரு முக்கியமான காரணம் கல்யாணம் பண்ணிக்கறவங்க மட்டுமில்லை. அப்படி செஞ்சுக்கறவங்களோட குழந்தைகள் பத்தின கவலையும்தான்... அதுகளுக்கு ஒரு நல்ல சூழ்நிலை கொடுக்கணுங்கற கவனம்தான்.''

''அப்ப சரி... பண்ணிக்கலாம்.''— நான் சம்மதம் சொன்னபோது என் உடம்பில் பொட்டுத் துணி இல்லை. என் இடுப்புக்கருகே தளரக் கட்டின லுங்கியும், வெற்று மார்புமாய் இவர் உட்கார்ந்திருந்தார்.

''நான் கொஞ்சம் தூங்கறேன், ரங்கா... டயர்டா இருக்கு.''

''சரி...தூங்கு. எனக்கும் தூக்கம் வருது.''

''உங்களுக்கும் டயர்டா இருக்கா?''

''நீ கல்யாணத்துக்குச் சரின்னவுடனேயே தூக்கம் வ துடுத்து. எனக்கு சந்தோஷமா இருந்தாக்கூட தூக்கம் வந்துடும்!' – கழுத்தைக் கட்டிக் கொண்டு குழந்தை மாதிரி தூங்கிப் போ விட்டார்.

எனக்குத்தான் அயர்ச்சியாய் இருந்தபோதும் தூக்க வரவில்லை. தூங்க வேண்டும் என்று பிடிவாதமாய் கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் தூக்கம் வருவதில்லை. அயர்ந்து தூங்க வேண் டும் என்பதே போய்விட்டது. கோழித் தூக்கமாய், துண்டு துண் டாய் அரைமணிக்கு ஒரு முழிப்பாய்தான் உறக்கம் வருகிறது புதிய இடம், புதிய தலைகாணி, புதிய புடவை இவை எது இரு தாலும் தூக்கம் வராது. புதிசாய் நல்லதாய் புத்தகம் படிச்ச லும் தூக்கம் வராது. விடிகிற நேரத்தில் இரண்டு மணி நேர தூங்குகிறேனே அதுதான் நல்ல தூக்கம். அதுகூட இல்லா பளீரென்று எழுந்து விடுவதும் உண்டு. இன்றைக்கும் அப்படி தான் நேரப் போகிறது.

சங்கரன், வரதாச்சாரி, அகஸ்டின், கண்ணபிரான் செல்வநாயகம், ராமன், சுகுணு, சரஸ்வதி, விஸ்வநாதன் வள்ளிநாயகம், ஜெயராமன், மகாலிங்கம், சொர்ணத்தம்மாள் வெங்கடேஷ், அப்பு வாத்தியார், கிருஷ்ணமணி சாஸ்திரிகள் நான், அவர்... அவ்வளவு பெரிய சத்திரத்தில் அறைக்கு இரண் பேராய் டிபன் முடித்து சரியத் துவங்கினோம். எனக்கருகே சுகுண படுத்துக் கொண்டாள். படுத்துக் கொண்ட பத்து நிமிஷத்தில் தூங்கிப் போனாள்.

நான் பெட்டியைத் திறந்து சற்றுநேரம் படிக்கல மென்று பாசுரத்தை எடுத்தேன். நேற்று அத்தை இதை தூ துடைத்துக் கொடுத்தாள். 'மனசுக்குக் கஷ்டமா இருந்தா, ஸ்வா பேரா படிச்சுண்டு போ. கொஞ்சம் விட்டாப்பல இருக்கும்.' நான ரொம்ப மனசுக்குள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாக அத்தை ஏன் நினைக்கிறாள் என்று புரியவில்லை. முப்பத்தாறு வயசுப் பெண் நாற்பது வயசு ஆணை கல்யாணம் பண்ணிக்கறது மகா கஷ்ட தான் என்று அத்தை நினைத்திருப்பாள் போலிருக்கிறது. 'இப்பவா னும் பகவான் கண் திறந்தாரே' என்று அத்தை சொன்னாள் நாலஞ்சு தடவை தொறந்துட்டார்ன்னு பதில் சொல்லத் தோன் றிற்று. ஆனால் அத்தை தாங்க மாட்டாள். அவனையும் கடவுளை யும் ஒன்றாக இழிவுபடுத்தினால் பொறுத்துக் கொள்ளவே மாட் டாள். 'அடி அவுசாரி' என்று உடனே வைவாள். இந்த முப்பத் தாறு வயசில் நான் முன்பின்னாக இருந்தது அத்தைக்கு ஜாடை மாடையாய் தெரியும். இப்பவாவது பகவான் கண் திறந்தாரே என்பதற்கு அர்த்தம், 'இனிமேயாவது ஒழுங்கா இரு' என்பதுதான் நான் அதற்குத் துடுக்காகப் பதில் சொன்னால், கல்யாணம் பண்ண யும் அவுசாரி வசவுதான் கிடைக்கும். 'கல்யாணத்துக்கு வ வேளா அத்தை' என்று கேட்டபோது, 'நான் எப்படீடீ வரமுடியும்.. ஆனா என் மனசு உன் கூடவே இருக்கும்' என்று அனுப்பினாள் எனக்கென்னமோ அத்தையின் வசவு வார்த்தைகள்தான் கூடவே



வந்து கொண்டிருக்கின்றன. ஒருவேளை அதுதான் அவள் மனசோ என்னவோ!

நான் பாசுரத்தைப் பிரித்து ஆண்டாளைத் தேடினேன். 'வாரணமாயிரம்' படிச்சுண்டு போ. சகலமும் நல்லபடியா முடி யும்.' இதுவும் அத்தை சொன்னதுதான். ஆனால் எனக்கு ஆண் டாளின் 'குயில் பத்து' மிகவும் பிடித்துப் போயிற்று...

'சார்ங்கம் வளையவலிக்கும் தடக்கை சதுரன்
பொருத்தமுடையன்
நாங்களெமிலிருன் தொட்டியகச் சங்கம்
நானுமவனுமறிதும்
தேங்கனிமாம் பொழில் செந்தளிர்கோதும்
சிறுகுயிலே, திருமாலை
ஆங்கு விரைந்தொல்லை கூகிற்றியாகி லவனை
நான் செய்வன காணே!'

அடர்த்தியான தோப்புக்குள் கோவிந்தனைக் கூட்டிக் கொண்டு வரச்சொல்லி ஆண்டாள் குயிலைத் தூது விடுகிறாள்... சின்னப் பெண்ணின் ஏக்கம் பத்துப் பாட்டிலும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. பதிமூனு வயசுப் பொண்ணு...? இன்றைக்குள்ள பெண்ணுயிருந்தால் எட்டாவது படித்துக் கொண்டிருக்கும். உடம் பும், கண்ணும் வயசும், மனசும் மலரப் புதிதாய் விழிக்கின்ற பருவம். தனித்திருக்கப் பிறக்கவில்லை; யாருடனோ சேர்ந்திருக் கவே பிறந்திருக்கிறோம். அப்படி சேர்ந்திருப்பது ஆணாய், அழக னாய், கட்டி காபந்து செய்கிறவனாய், என்ன வந்தாலும் கவலை வேண்டாம் நானிருக்கிறேன் என்று சொல்பவனாய், தயை நிரம் பியவனாய், புருஷனாய் ஒரு நபரைத் தேடத் துவங்கிவிட்ட சமயம்... துணை என்பது இதுவே என்று கற்பிதம் செய்து கொள்ளும் பரு வம். உறவும் – உலகமும் இதை சொல்லிக் கொடுப்பதற்கு முன் னால் உடம்பிலுள்ள ஹார்மோன்களும் இந்தத் தேடலை அறிவிக்க ஆரம்பித்து விடுகின்றன. ஆண்டாள் அதீதமாய் கவலைப்பட்டிருந் திருக்கிறாள். கவிதை என்று எழுதின அத்தனை வரியிலும் கலங் கித் தவித்திருக்கிறாள். 'என் துணை, என் துணை, என் துணை' என்று புலம்பியிருக்கிறாள். பிச்சியாய் அலைந்திருக்கிறாள். அந்த வயசு அப்படிப்பட்டது. தேடல் என்கிற விஷயமே நம்பிக்கையை அடிப் படையாகக் கொண்டது. கிடைக்கும் என்பதால்தானே தேடு கிறோம்...? என் பதிமூனு வயசும் ஆண்டாள் மனசு மாதிரி ரம்மி யமாகத்தானிருந்தது. 'நான் அவனை செய்வன காணே' என்று என் மனசும் ஆசைப்பட்டது. வீட்டில் யாரும் ஆளே இல்லாதபோது – ஒரு தட்டை வைத்து, ஓரத்தில் கறி வைத்து–சாதம் பரப்பி–குழம்பு ஊற்றி – குடிக்க ஜலம் வைத்து, தோளைப் போர்த்திக் கொண்டு சுவரருகே நின்று, 'ம்ம்... சாப்பிடுங்கோ. இன்னும் கொஞ்சம் குழம்பு ஊத்தட்டுமா' – வெற்று நிலத்தைப் பார்த்து நான் சொல்லியிருக்கிறேன. யப்பா...இப்போது நினைத்தால் வெட்க மாகவும் கொஞ்சம் வேதனையாகவும் இருக்கிறது. பதிமூனு வயசு படுத்துகிறபாடு அது! என் பதிமூனாவது வயசிலேயே என் கற் பனை கைநழுவியும் போய்விட்டது. அம்மா எதேச்சையாய் இதைப் பார்த்துவிட்டு துடைப்பத்தால் அடித்தாள். 'நாற்பது வயசுக்

காரி நானே கட்டாந்தரையில் படுத்துக்கறேன். உனக்கு ஆம்படையான் கேக்கறதா...கொழுப்புடீ உனக்கு' என்று தொடையில் அடித்தாள். அதற்குப் பிறகு எவனுக்கும் நான் மனசால் கூட சோறு போட்டதேயில்லை. உணவு பரிமாறுதல் பெண்களின் குணங்களில் ஒன்று என்பதை உள்மனசு எதிர்க்கத் துவங்கியது. எதிரும், புதிருமாய் தட்டு வைத்துக் கொண்டு எல்லாப் பாத்திரங்களும் சூழ சமதையாய் சாப்பிடுவதே பிடித்திருக்கிறது. சோறு பரிமாறுவது மட்டுமில்லை... எனக்கு இஷ்டப்பட்டவர்களிடம் என்னைப் பரிமாறிக் கொண்டதும் இவ்விதம் சமதையான உணர்வுடதான். அம்மா ஓர் இடத்தை நொறுக்கினாள். நான் இங்கு இயல்பு என்று சொன்ன பல விஷயங்களை நொறுக்கினேன். அம்மா கோபப்பட்டு எதிர்த்தாள். நான் யார் மீதும் எந்த கோபமும் இல்லாமல் எதிர்த்தேன். அம்மா தன் தனிமைக்கு வெதும்பி என்னை தண்டித்தாள். நான் தயவு, தண்டனை என்ற உணர்வுகளையெல்லாம் தாண்டி இதை இயல்பாக்கிக் கொண்டேன்.

'நீ அவனை இங்கு கூவுதீயாகில்
நான் அவனை செய்வன காணே!''

—வலிவுமிக்க கோவிந்தனை ஏதாவது செய்துவிட வேண்டுமென்று ஆண்டாளுக்கு ஆசை வந்திருக்கிறது! எனக்கு யாரையும் எவ்விதமாகவும் செய்ய ஆசை இல்லை. மற்றவரைத் தன் விருப்பத்திற்கு மாற்றுவதான எண்ணம் படிப்படியாய் விழுந்து போயிற்று. 'உனக்கேத்தபடி நல்ல புருஷனாய் நான் இருப்பேன். இருக்க என்னால் முடியும்' என்று இவர் சொன்னபோது சிரிப்பு வந்தது. பதிமூனு வயசில் இப்படி என்னிடம் சொல்ல ஆளில்லாமல் போய்விட்டது. சொல்லியிருந்தால் பாடிப் பறந்திருப்பேன். 'ஆராஅமுதன் அயோத்திய வேந்தன்' என்று நானும் கிளர்ந்திருப்பேன். கிளரும் பருவம் கருகிப் போய்விட்டது. பேதை–பெதும்பை எல்லாம் தாண்டி முதிர்கன்னியாய் நிற்கிற வயசில் கல்யாணம் நடக்கிறது. தேவைகளுக்கு அப்பாற்பட்டு துணை தேடுகிற வயசு இது. கொடி, கொழுக்கொம்பு என்கிற மாதிரியெல்லாம் இல்லை. காற்றில் சாய்ந்துவிடுகிற கல்யாணமுருங்கையைக் கயிறு கட்டி இழுத்து வைப்பார்களே...அந்தமாதிரிதான் இது. பார்க்கப் பசேலென்று கிடந்தாலும், இரண்டு உள்ளங்கை அகலத்துக்கு இலை இருந்தாலும், இரத்தச் சிவப்பாய் புஷ்பித்துக் கிடந்தாலும் இந்த கல்யாண முருங்கை காற்று தாளாது! இது மரமுமில்லை; செடியுமில்லை: இயற்கை படைப்பில் வித்தியாசமாய் வளர்ந்துவிட்ட தாவரம்: ஒடித்து விறகாக்கவும் முடியாது; இழைத்துப் பொருளாக்கவும் முடியாது. பசேலென்று குடைவிரிக்கும். தீயாய் பூ பூக்கும். அந்த அழகும், அடர்த்தியும் சின்ன புயலுக்கும்கூட சரிந்துவிடும். நான் கயிறு கட்டிக் கொள்ளுவது என்னுள் பொங்கிவிட்ட சந்நியாசப் புயலுக்குப் பயந்துதான்... உத்தியோகம், உறவு, ஊர் அத்தனையும் விட்டுவிட்டு தெருவோடு எங்கயாவது நடந்து போய் விடுவோமோ என்கிற பயத்தை உத்தேசித்துதான். இன்னும் பத்து வருஷம் கழித்துப் போய்விடலாம். நாப்பத்தாறு வயசானால் இப்படி நடந்து விடலாம். இந்த முப்பத்தாறு ஓர் இரண்டுங்கெட்டான் பருவம். செடியுமில்லாமல், மரமுமில்லாமல் கல்யாண



முருங்கை மரம். தெருவோடு நடந்து போக வயசும் உடம்பும் தடை சொல்கிறது. திரட்சியான மாரும், குழையும் வயிறும், திமிறி நிற்கும் பிருஷ்டமும் இடைஞ்சலைத்தான் சேர்க்கின்றன. துணையே வேண்டாமென்று ஔவை மறுத்திருந்தால் ஊர் கேட்டிருக்காது. பந்தத்திலிருந்து தப்பிக்க, ஊர் ஊராய் திரிய, எந்த பயமுமற்று தனியே நடக்க, 'என்னைக் கிழவியாக்கிவிடு' என்று ஔவை கதறியிருக்கிறாள். இளமையோடு ஒரு பெண் தனிவழியே போவது இடைஞ்சல் என்று அவளுக்குத் தெரிந்திருக்கிறது. கட்டுடலோடு கால் போன போக்கில் போனால் கவிதை சொல்ல முடியாது என்று அந்தப் பெண்ணுக்குத் தெரிந்திருக்கிறது. கிழத்தனத்தை அந்தப் பெண் வரமாகக் கேட்டாள். எனக்குத் தெரிந்து கிழத்தனத்தை வரமாகக் கேட்ட பெண் ஔவைதான். எனக்கும் கேட்க ஆசை. கொடுக்கத்தான் ஆள் இல்லை! இந்த முருங்கைப் பயணத்தைக் கடக்க வேறுவழியின்றி கல்யாண ஏற்பாடு செய்திருக்கிறேன். தேவைகளற்று ஒரு துணையைத் தேடிக் கொள்கிறேன். ஆசைகள் பூர்த்தியான பிறகு ஆதரவுக்காக ஒண்டிக் கொள்கிறேன். எனக்குப் புருஷனாய் யார் வேண்டுமானாலும் இருக்கலாம். இதில் சிரமம் ஏதுமில்லை. இவர் எனக்கு வாய்த்திருப்பது பற்றி மகிழ்ச்சியோ துக்கமோ இல்லை. இவருக்கு ஏதாவது தேவைப்படலாம். முடிந்தவரை என்னாலும் கொடுக்க முடியும். முடியாதபோது இல்லை என்று குழந்தையாய் கைவிரிக்கவும் முடியும். இப்படி நிதானமாய் வெட்க விசாரங்களின்றி குறுகுறுப்பின்றி கல்யாணம் பண்ணிக் கொள்வது எனக்குப் பிடித்திருக்கிறது.

''கார்த்தால யாராவது வரவேண்டியிருக்காளா?''
—ஹாலில் வெங்கடேஷ் குரல் கேட்கிறது.

''யாருமில்லை. வந்தால் நாதசுரக்காரன்தான் வரணும்.''
—இவர் பதில் கேட்கிறது.

எவர் வருகையையும் எதிர்பார்க்காத திருமணம் என்னுடையது. பாவம்! வந்திருக்கிற பதினாறு பேருக்கும்தான் சிரமம். காப்பி–டிபன் சாப்பிட்டுவிட்டு அட்சதை போடுவதைத் தவிர வேறு வேலையே இல்லாத சிரமம். கல்யாண பரபரப்பும் அவசரமும் அதட்டலும் இல்லாத சிரமம். நாதசுரக்காரன் வந்ததும் தான் இந்த பதினாறு பேரும் பரபரப்பார்கள். பழக்கம் காரணமாக துரிதப்படுத்துவார்கள். கூட்டமாய் தன்னை ஆட்கள் வாசலுக்கு வந்து வரவேற்பதைப் பார்த்து நாதசுரக்காரன் மிரட்சியுறுவான். 'இருந்து சாப்பிட்டுட்டுப் போங்கோ' என்று அவனைத் தான் சொல்ல முடியும். சாப்பிடாமப் போகக்கூடாது என்று அவனைத்தான் விரட்ட முடியும். அவனும் பயத்தோடு தலையாட்டுவான். சந்தேகத்தோடும் பயத்தோடும் வாசலில் நிற்கிற நாயனக்காரனை நினைத்து எனக்குள் சிரிப்பு பொங்கிற்று. நான் எழுந்து உட்கார்ந்து வாய்விட்டுச் சிரித்தேன். சுகுணா பதறியடித்துக் கொண்டு எழுந்து, 'என்னடீ...' என்று என் தோளைப் பிடித்தாள்.

இன்னும் சிரித்தேன்.

'ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே' — எனக்கு அந்த இரவே கல்யாணம் முடிந்து விட்டதைப் போன்ற நிம்மதி பரவிற்று. இரவில் இப்படி நினைத்து நினைத்துச் சிரித்துக் கொண்டி

ருந்தால், காலையில் தாலி கட்டுகிற போது தூக்கம் வந்தாலும் வரும்... கொஞ்ச நேரம் கண்ணை மூடிக் கொண்டாவது இருக்க வேண்டும். நான் புடவையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுக்கையில் சரிந்தேன்.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே—உள்ளே நாயனக்காரன் இன்னமும் வாசித்துக் கொண்டிருந்தான். என் சந்தோஷம் என்னைப் பற்றியில்லை, என் கல்யாணத்தைப் பற்றியில்லை. என்னைச் சுற்றி நடப்பவைகளே எனக்கு சந்தோஷமான விஷயங்களாகிக் கொண்டிருக்கின்றன. நான் சீக்கிரமே சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறேன் என்பதற்கு என் இன்றைய நிலையும் உதாரணம்.

## 2

'கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில் வேங்கடமலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையேனாவேனே!'

தாலிக் கட்டிக் கொண்ட மூன்றாவது மணி நேரம் ஸ்வாமி சந்நிதிக்கு வந்தாயிற்று. கரும்பச்சை போர்த்த மலைகளூடே குளிர்காற்றுக்குப் போர்த்திய வண்ணம் காரில் உட்கார்ந்து வருகையில், இப்படி ஒரு பிரயாணம் வாழ்க்கை முழுதும் வேண்டும் என்று தோன்றிற்று. சுடரும் ஆழியுமாம் புகை சூழ்ந்த அறைக்குள்ளே நிற்கும் உருவத்தைப் பார்த்துக் கண்மூடி நின்ற போதும், அந்த மலைகளும்—மரங்கள் மூடிய போர்வையும்தான் ஞாபகத்திற்கு வந்தன. முன்னும் பின்னுமாய் நெருக்கியடிக்கிற கூட்டம்...அடிவயிற்றிலிருந்து குரல்கொடுத்துக் கதறுகிற கூட்டம்... ஆள் ஆளுக்கு ஆயிரம் வேண்டுதல், ஆயிரம் அவஸ்தை. விடுதலை தேடுகின்ற வேட்கை. தப்பு ஏதாவது பண்ணியிருந்தா மன்னிச்சுக்கோ என்கிற தாபம். இனி 'தப்பு பண்ணாம பார்த்துக்கோ' என்கிற பிடிவாதம். பயம், கலவரம். கதறி அழுகின்ற ஆற்றாமை... உள்ளே நகர நகர எனக்குள் வெறுமை தட்டிற்று. இனி மெல்ல மெல்ல கோவிலுக்குப் போவதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றிற்று.

மலைகளையும், வானத்தையும்—பஞ்சுப் பொதி மேகத்தையும் விட்டுவிட்டு இப்படி ஓர் அறைக்குள் புகுந்து அரற்றுவது என்னால் முடியாத காரியம். இந்த பள்ளத்தாக்கும், சுனையுமே கடவுள். புல் நெடியோடு வீசுகிற காற்றே கடவுள். இந்த இடத்தின் சுகந்தமறிந்து யாரோ ஓர் அரசன் கோவில் எழுப்பியிருக்கிறான். எழுப்பியதை இன்னொருவன் சீர்திருத்தியிருக்கிறான். பரிவாரங்களுடன் தங்கி மனசு மலர்ந்திருக்கிறான். இந்த சுனையையும், சின்ன கோவிலையும் பார்த்துவிட்டு அந்தத் திருமங்கை மன்னனுக்கும் கல்லாய் தம்பகமாய், குருகாய், மீனாய் எந்நேரமும்



இயற்கையோடு இருக்கும் விஷயமாய், கற்பிதங்களையெல்லாம் விட்டுவிட்டு தனியனாய் இருக்கத் தோன்றியிருக்கிறது... உறவு பாரம் அழுந்த அழுந்த எங்கேயாவது ஓடிவிடலாமா என்றுதான் எல்லாருக்கும் தோன்றுகிறது. ஓடமுடியாதபோது அழுகை வருகிறது. தான் தனித்துப் போகவும் யாரையாவது துணைக்கழைக்க வேண்டியிருக்கிறது. இங்கே ஒட்டாமல் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். உறவு ஏற்படும்போதே பிரிவு பற்றி ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

'ரங்கா, நீ எனக்கு புருஷன். ஆனால் என்னைவிட எந்த விதத்திலும் பெரியவனில்லை. நீ எனக்கு துணைவன். ஆனால் உன்னை நம்பியே நான் இருக்கப் போவதுமில்லை. இப்படி துணையோடு இருப்பது இங்கு இயல்பு என்பதாலேயே, பரஸ்பர உதவிகளுக்கும் உபசரணைகளுக்கும் ஆண் என்பதாலேயே இந்த உடன்படிக்கைக்கு ஆசைப்பட்டேன். இது பண்டமாற்று. அத்தை சொல்வாள்: 'அரிசி கொடுத்து பருப்பு வாங்கி; கோலி கொடுத்து குழி வாங்கி' என்று கல்யாணம் பற்றி சொல்வாள். இது சின்ன வியாபாரம். வியாபரத்தில் நாணயமாய் இருத்தல் நலம். ரங்கா, நான் ஒரு நாணயமுள்ள வியாபாரியாய் இருப்பேன். இதுமட்டுமே இப்போதைக்கு என்னால் சொல்ல முடியும்.'

''ரொம்ப அற்புதமான தரிசனம். கண்ணு முன்னாடியே நிக்கறது...!''—ரங்கா ஒவ்வொருவராய் கூப்பிட்டு சொல்லிக் கொண்டிருந்தார். கேட்பவர்கள் அத்தனை பேரும் தரிசித்தவர்கள் தான். ரங்காவின் பேச்சுக்குத் தலையசைத்துக் கொண்டிருந்தார்கள். காரில் ஏற்றி எங்களை காட்டேஜில் இறக்கி விட்டு, ''ஆல் த பெஸ்ட்'' என்று கைகுலுக்கி நகர்ந்து கொண்டார்கள். இருட்டத் துவங்கியபோது டூரிஸ்ட் டாக்ஸி டிரைவர் பயணக் களைப்போடு உள்ளே படுத்துத் தூங்கி விட்டான். மலை முழுக்க நியான் விளக்குகள் சரம் கோர்த்து சிரித்தன. கான்டீனுக்குப் போய் சாப்பிட்டு விட்டு நானும் ரங்காவும் திரும்பினோம்.

''என்ன விஜி, ரொம்ப டயர்டா இருக்கா? அலுப்பா இருந்தா படுத்துண்டுடேன்...''

ஆணின் உபசரிப்பு ஆரம்பமாகும் இடம் இது! சாதாரணப் பெண்கள் சுலபமாய் இடறி விழும் முதல் கல். 'ஆமாம்' என்று சொன்னால் அயோக்கியத்தனம். 'அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று சொன்னால் அசிங்கம். கெட்டிக்காரப் பெண்கள் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பதிலைத்தான் சொல்வார்கள்: ''அலுப்பாத்தான் இருக்கு. ஆனாலும் பாவம் நீங்க...'' உனக்காக விட்டுக் கொடுக்கிறேன் என்கிற பாவனையான வார்த்தைகள். ஆணை இடறவைக்கும் எதிர் கல்.

'சே! சே! நிஜம்மா சொல்றேன். டயர்டா இருந்தா தூங்கும்மா...' வேகமாய் விட்டுக்கொடுக்கிறவன் நிச்சயம் குப்புற விழுவான்! எனக்கு சிரிப்புதான் வந்தது.

''ஏய்...எதுக்கு சிரிக்கறே?''—ரங்கா இடுப்பை அணைத்துக் கொண்டு கேட்டார்.

'அலுப்பா உடம்பெல்லாம் திமுதிமுன்னு இருக்கு'—நிஜத்தை சொல்லி விடலாமா? 'இந்த குளிருக்கு நீங்க வேணும்

போல இருக்கு' – பளிச்சென்று பேசி விடலாமா? சே! பாவம், நிஜம் கேட்ட பயத்தில் இது சோர்ந்து போய்விடக் கூடாது. இவள் அளவுக்கு நான் தயாராயில்லையே என்று நடுக்கம் வந்து விடக் கூடாது. நான் ஒட்டுமொத்தமாய் பேச்சை மாற்றினேன்:

''யூ லுக் வெரி யங் டுடே... நாற்பது வயசுக்கு ஒரு நரைகூட இல்லையே, அது எப்படி?''

உடனே என்னை விட்டுவிட்டு கண்ணாடி முன்னே போய் நின்றுகொண்டார்.

''நிஜம்மாவா... காலைல வெங்கடேஷ்கூட சொன்னான். நான் 'டை' எதுவும் போட்டுக்கறதேயில்லை. 'டை' போட்டுக்கறதாத்தான் எல்லாரும் நினைக்கறாங்க. சிராசனம் பண்ணினா போறும், நரைக்காது.''

''எனக்கு நரைச்சுடுத்து, ரங்கா... எண்ணை தேச்சு குளிச்சா நெறையவே தெரியும்!''

''நீ 'டை' போட்டுக்கறதேயில்லையா விஜி?''

''இதுவரை போட்டுக்கலே. இனி எதுக்குப் போட்டுக்கணும்?''

''போட்டுக்கறதிலே ஒண்ணும் தப்பில்லையே...''

''தப்பு ரைட்டுன்னு உண்டா? அவசியம் என்ன, 'டை' பூசிக்கறதுக்கு...''

''கொஞ்சம் வயசான மாதிரி தெரியுது; அதான் சொன்னேன்...''

''வயசான மாதிரி என்ன... முப்பத்தாறு முடிஞ்சு போச்சே!''

''அதில்லை. என்னைவிட வயசான மாதிரி தெரியுது. அதான் சொன்னேன்.''

''நிஜம்மாவா?''

''உன் நரை பத்தி வெங்கடேஷ்தான் சொன்னான். உனக்கு அவசியம்னு பட்டா பூசிக்கோ. நான் கட்டாயப்படுத்தலே.''

இது வற்புறுத்தல்தான். சிநேகமாய் கைகுலுக்கும் போது நொறுங்கப் பிடித்து வலுவு காட்டுகிற தீரம்தான். 'நோ' என்று சொல்லி விட்டால் நோகும். 'சரி' என்று சொல்லி விட்டால் பெரிதாய் மலரும். மலரட்டும்!

''இங்கே மலைல, 'ஹேர் டை' கிடைக்குமோ?''

''சே...சே...நாளைக்கே பூசிக்கணுமா? ஊருக்குப் போய் பார்த்துக்கலாம். அதுவும் உனக்கு இஷ்டமிருந்தா பூசிக்கோ. நான் பூசிக்கச் சொன்னதில் வருத்தமில்லையே விஜி?''

எனக்கு வருத்தமுமில்லை. சந்தோஷமுமில்லை.

''நம்ம கல்யாணம் நடந்த விதம் உனக்குப் பிடிச்சிருக்கா? உங்க வீட்லருந்து யாருமே வரலேன்னு வருத்தம் உண்டா? உன் கடைசித் தங்கையாவது வருவான்னு நினைச்சேன். அவ வீட்டுக்கு நீ போய் வர்றது உண்டுல்ல...?''

மனசுள் என் கடைசி தங்கை சரோஜினி குரல் கேட்டது:

'என்னதான் போகவர செலவுன்னு எடுத்துண்டாலும்கூட, நானும் அவரும் குழந்தைகளுமா வந்தா எப்படியும்



று ரூபா பழுத்துப் போயிடும்! இங்க எங்கயாவது திருநீர்மலை, டபழனின்னு வெச்சுக்க மாட்டியோ?'–அந்த நூறு ரூபாய் செலவையும் நீயே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஜாடையாய் ன் தங்கை சொன்னபோது, அந்த க்ஷணம் ஏற்றுக் கொள்ள னம் வரவில்லை. மெல்லியதாய் உடைந்து போயிற்று. நூறு பாய் செலவு சரோஜினிக்கு அதிகபட்சம்தான். வந்தபிறகு கட்டிருந்தால் மறுத்திருக்க மாட்டேன். குருவி மாதிரி சேகத்து நானே பண்ணிக் கொள்ளும் இந்த வைபோகத்தில் இவள் செலவுக்குப் பின்வாங்கியிருக்க மாட்டேன். ஒரு வைதீகரைப்போல் ரோஜினி செலவு கணக்கு பண்ணி தன் வருகைக்கு அச்சாரம் கட்டபோது, 'சரிதான்போ' என்று விட்டுப்போயிற்று... இவள் ல்யாண செலவுக்கு நான் கடன் வாங்கி அடைத்த எட்டாயிரம் ண்முன்னே ஓடிற்று. அப்போதும் கோபம் வரவில்லை. சரோஜினி இவ்வளவுதான் என்கிற தீர்மானம் வந்தது.

''என்ன... திடும்னு எங்கோ போய்ட்டே?'' – ரங்கா தோள்மீது கை வைத்தார்.

''விளக்கெதுக்கு...வேணுமா?''

''அட இது என்ன... புதுசா விளக்கைப் பார்த்து வெட்கம்! நிஜம்மாவே கல்யாணப் பொண்ணாயிட்டயா?''

''சே! சே! மலைப் பிரதேசம். பூச்சியா சுத்தறதே, அதுக்காகத்தான்.''

ரங்காவின் குதூகலம் லேசாய் சறுக்கிவிட்டது போலும்!

''அதானே பார்த்தேன்... எங்க விஜயலெக்ஷ்மியாவது வெட்கப்படறதாவது!''

எனக்கு ஏழு வருஷம் முன்பே வெட்கம் விட்டுப் போயிற்று... ரங்கா, யார் எங்கிருக்கிறார் என்பதுகூட அப்போது எனக்குத் தெரியாது. அப்பா இல்லாத வீட்டில் வேறு எந்தத் துணையுமில்லாத நேரத்தில் மூன்று வருட இடைவெளியில் இரண்டு தங்கைகளுக்கும் கல்யாணம் பண்ணி... வீட்டிலிருக்கிற கடைசி பித்தளை பாத்திரத்தைக்கூட பாலிஷ் போட்டு சீராய் கொடுத்து, அலுமினியப் பாத்திரங்களும் பீங்கான் கோப்பைகளும் வாங்கி வந்தேனே...அன்றைக்கே வெட்கம் விட்டுப்போய் விட்டது. அம்மா கடைசித் தங்கைக்கு உதவியாய் அவளோடு போய்விட்டாள். 'அடிக்கடி வந்து உன்னை பார்த்துக்கறேன்' என்றாள். அதற்கு அவசியமில்லை என்று தெரிந்தாலும் பொய்யை நிஜம் போல பேசினாள். அன்று மாலைதான் ராம்குமார் தூக்கமாத்திரைகள் சாப்பிட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தான். என் மூத்த தங்கை கற்பகம் எழுதின தொண்ணூத்தியாறு கடிதங்களை ராம்குமாரின் அப்பா படிக்கச் சொல்லி கொடுத்தார். கடிதங்களைப் படிக்க படிக்க நான் அதிர்ந்து போனேன். உடம்பு தேறி வீட்டுக்குப் போக மறுத்து பிடிவாதமாய் மூன்று நாள் சிறைவாசம் அனுபவித்து, தாடியும் பரட்டைத் தலையுமாய் சென்ட்ரல் ஜெயிலுக்கு வெளியே நின்றிருந்த ராம்குமாரை வீட்டுக்குக் கூட்டி வந்தேன்.

'உயிருடன் கலந்தாய் என்று
ஒரு முறை எனக்குச் சொன்னாய்.
கலந்தது நிஜமா என்று
என்னுயிர் பிரிக்கப் பார்த்தேன்.
பிரிக்கையில் தெரிஞ்சு போச்சு
என் உயிரும் காணோம் என்று!'

—சுவரில் சாய்ந்து கொண்டு ராம்குமார் இந்த மாதிரி நூறு கவிதைகள் சொன்னான். ஒவ்வொரு கவிதைக்கும் அழுதான். துவண்டு விழுந்தான். அவன் குழி விழுந்த தோள்களையும், விலா எலும்புகளையும் தடவித் தூங்கப் பண்ணுகையில் என் வெட்கம் போய்விட்டது. ஏழு வருஷம்! விலாசமில்லாத காதல் கடிதத்தைத் தூக்கிப் போகிற பட்டாம்பூச்சி மாதிரி ஏழு வருஷம்... தன் முதுகில் தூக்கிப்போன காதல் கடிதத்தை தானே உதறி எறிந்து விடுவதைப் போல, பறந்தது போதும் என்று பூச்சியாய் ஊர்வது போல, இன்று சுதந்திர சிறகு கறுத்து பூச்சி ரூபம் எடுத்தயிற்று. பூச்சிக்கு வெட்கம் என்ன...பயம்தான். எங்கயாவது இண்டு இடுக்கு கிடைக்காதா என்கிற ஜாக்கிரதைதான்... சொச்ச காலத்தையும் காயப்படாமல் கழிக்க வேண்டுமென்கிற பயம்தான். ஒளிந்து கொள்ளத்தான் இந்த மார்பும், மனிதரும். ரங்கா என்னை அணைத்துப் படுக்கையில் சரித்தார். நான் இருநூற்றி சொச்சத்து தடவையாய் வெட்கம் விட்டேன்.

பிறகு உடுத்திக் கொண்டேன்.

இப்போது வெட்கத்தை விடுவதும் கடமையாகி விட்டது. தயவாக இல்லாமல், தன்னிரக்கமாக இல்லாமல் — 'அரிசி கொடு, பருப்பு கொடு' என்கிற வியாபாரமாக இல்லாமல் — மீன் துள்ளத் துள்ள கொத்திக் கொண்டு போகிற பறவை மாதிரி மனசு துள்ளுகையில் அணைத்துக் கொள்ள ஆள் இருக்கும் நேரம் எப்போதாவது ஒரு முறைதான் நேருகிறது. எனக்கு ஒரே ஒரு முறைதான் நேர்ந்தது.

# 3

"என்ன காய் வாங்கிண்டு வரட்டும்?" —பாதி போட்ட சட்டையும், கையில் துணிப்பையுமாய் ரங்கா கேட்டார்.

தெருமுனையில் இருக்கிற காய்கறி கடையில் திரும்பத் திரும்ப கிடைக்கிற காய்கறி வகை ஐந்துதான் — உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், கத்தரி, வாழை, புடலங்காய்தான்.

மாற்றி மாற்றி நான்கு இரவுகள் வீடு வீடாய் விருந்து சாப்பிட்டு வாய்முழுக்க எண்ணெய் குழம்பிற்று.

"வெறும் அப்பளம் போருதா... நாலு நாளா சாப்பாடு அதிகமில்லையா?"

"இன்னும் நாலு நாள் உணக்கையா சாப்பிடேன்... இன்னும் மோர் சாதத்துமேல இருக்கற பாசம் விடலையா?"

"சரி; ஏதாவது வாங்கிண்டு வாங்கோளேன்;"



"என்ன வாங்கிண்டு வர... ஏதாவதுன்னு என்னன்னு சொல்லு?"

"எனக்குத் தெரியலை. எது வாங்கிண்டு வந்தாலும் சரி."

"கமான் விஜி, என்ன காய் வேணும் சொல்லு?"

சத்தியமாய் எனக்கு என்ன காய் சொல்வதென்று தெரியவில்லை. தினமும் சமைத்து இறக்குகிறவளுக்கு எந்த காய்கறி மீதும் பற்று இருக்காது என்று இவருக்குத் தெரியவில்லை... முன்பெல்லாம் கற்பகம்தான் காய் வாங்கிண்டு வருவாள். அப்போதும் இதேமாதிரிதான் சண்டை வரும். வாசற்படியில் நின்று, 'சொல்லித் தொலையேன்' என்று கத்துவாள். இந்த வீட்டிலிருந்ததுவரை கற்பகம் சமைத்தது இல்லை. ஆனால் ஆண்பிள்ளை போல அரட்டை அடிப்பாள். ஆணி அறைவாள். ரிக்ஷாகாரன் வாசலில் வைத்து விட்டுப் போகும் அரிசி மூட்டையை மாரோடு அணைத்துத் தூக்கி அடுக்களையில் வைப்பாள். அநேகமாய் எதன் மீதாவது உயரமாய் காலைத் தூக்கி வைத்துக் கொண்டுதான் நிற்பாள். அம்மா அரற்றினபோது, 'சரிதான் சும்மா கிட' என்று சொல்லி விட்டாள். "இப்படி நின்னா என்னடீ விஜி?' என்று என்னைக் கேட்டாள். 'நில்லேன்' என்று நான் பதில் சொன்னேன். இந்தத் திருவல்லிக்கேணியில் முதன் முதல் பேண்ட் போட்டுக் கொண்ட பெண் அவள்தான். கடைக்குப் போய் பேரம் பேசினதும், காலைத் தூக்கி நிற்கும் தடித்தனமும், நாகரீக உடையும் அவளை வேகமாய் மாற்றின. 'பால்ஸ்' என்று அவள் அடிக்கடி திட்டுகிற வார்த்தைக்கு எனக்கு முதலில் அர்த்தம் தெரியவில்லை. தெரிந்தபோது சிரிப்பு வந்தது. ஆண்களைத் திட்டுவதற்கென்றே பெண்கள் உபயோகப்படுத்தும் வார்த்தையாகப்பட்டது. தமிழில் இந்தமாதிரி பெண்கள் திட்டுவதற்கு வார்த்தை இருக்கிறதா தெரியவில்லை. ரங்கா சந்தோஷமாக இருக்கிறபோது இந்த வார்த்தையை சொல்லிப் பார்க்க வேண்டும்... எப்போதாவது ரகசியமாய் மனசுக்குள் நான் திட்டும் இந்த வார்த்தையை—கல்பா கற்றுக் கொடுத்ததை உபயோகப்படுத்திப் பார்க்க வேண்டும். ரங்காவின் பிரதிபலிப்பைக் கவனிக்க வேண்டும். வாய் நிறைய சிரித்தாலும் சிரிக்கும். 'ச்சீ...ச்சீ... அதெல்லாம் வேணாம். வெளிய யார் காதிலேயும் விழற மாதிரி சொல்லித் தொலைக்காதே' என்று மறுத்தாலும் மறுக்கும்.

'என்ன காய் சொல்லித் தொலையேன்' என்கிற மாதிரி வெளியே நின்றபடி கேட்கும் ரங்காவைப் பார்த்து இதைச் சொல்லிப் பார்க்கலாம்... ரங்கா இதுவரை கோபித்துக் கொண்டதில்லை. ஒரு வருஷப் பழக்கத்தில் இதுவரை ஒரு தடவைகூட முகம் சுளித்ததில்லை. என்னைப் பற்றி முன்பின்னாகக் கேள்விப்பட்டபோதுகூட முகம் கடுத்துப் பேசியதில்லை. இந்த கல்யாணம் தீர்மானமான பிறகு வழியில் மடக்கி காப்பி சாப்பிடக் கூப்பிட்ட ராம்குமாரை, 'இவன் லூஸ் ஆள், விலக்கி விடு' என்று சொன்னார். எப்படி விலக்க என்ற நான் மறுகினபோது, இரண்டேவார்த்தையில், 'நாங்கள் தனியே இருக்க விரும்புகிறோம் உங்கள் அனுமதியோடு...' ராம்குமார் இதற்குப் பிறகு காணாமல் போய் விட்டான்!

"இப்படி பொம்பளை மாதிரி கெஞ்சறவன் கிட்ட எப்படி ஸ்நேகமாக இருந்தே விஜி? ஸ்நேகிதன்னு வர்றபோது கொஞ்சம் தேர்ந்தெடுக்கணும். நச்சரிப்போ, புலம்பலோ இருக்கற ஆள் கிட்ட இருந்து — குறிப்பா, அந்தமாதிரி இருக்கற ஆம்பளை கிட்ட இருந்து விலகித்தான் இருக்கணும்... இவன் உன் ஸ்நேகிதன்னா நீ கொஞ்சம் வெட்கப்படணும்..."

தேர்ந்தெடுக்க எனக்கு என்றுமே தெரிந்ததில்லை. தெரிந்து செய்ய நான் என்றுமே நினைத்ததில்லை. காய்கறியோ, புடவையோ, வேறெந்த கடைச் சாமானோ, ஸ்நேகிதர்களோ நான் புத்தியைப் போட்டு உழப்பிக் கொண்டதேயில்லை... இந்த காய் வாங்கி இன்ன விதமாய் செய்து இன்றைக்குச் சாப்பிட வேண்டும் என்று நான் தீர்மானம் பண்ணியதில்லை. உருட்டி உருட்டி ஆராய்ந்து வாங்குவதும் செய்ய முடிந்ததில்லை. ஆனால் நிறைய பேர் இப்படி வாங்குகிறார்கள். தோளில் பையை போட்டுக் கொண்டு கடை கடையாய் அலைகிறார்கள். அடுத்த கடை காய்க்கும், இந்த கடை காய்க்கும் ஒப்பிட்டுப் பார்த்துப் பேசுகிறார்கள்... பேரம் பண்ணுகிறார்கள். இதை சாமர்த்தியம் என்கிறார்கள். ரஸனையோடு இதை சேர்த்துக் கொள்கிறார்கள். இந்த வாங்கி வந்த ரஸனை அடுப்பில் கொதித்து வாசனையாய் வருகிறபோதும், தட்டில் பரிமாறுகிற போதும் பரவசப்படுகிறார்கள். பண்டத்தை விரலால் அளைந்து சூட்டோடு வாயில் திணித்துக் கொள்கிறார்கள்... திணித்துக் கொண்டு தின்றதும் நொட்டை விடுகிறார்கள். 'உப்பு கொஞ்சம் தூக்கல். பருப்பு சரியா வறுபடலை...' —அபிப்பிராயம் சொல்கிறார்கள். நொட்டை விடுகிறது ஆணானாலும் — பெண்ணானாலும் உடனே அவர்களைப்பற்றி என்னுள் அசிங்கம் படர்ந்துவிடும்... இப்படி சாப்பிடுவது மகாபாவம் என்று தோன்றும். உணவை தூஷிக்கிறவன்தான் இப்படிப்பாராட்டுவான். 'அவ மாராக்காகவே அவளைக் காதலிக்கலாம்' என்று சொன்னால், பாராட்டாகவா எடுத்துக் கொள்ள முடியும்? பொம்மனாட்டியை மட்டும் இந்த உலகம் போகம் என்று ஒதுக்கி வைத்திருக்கிறது. உணவுகூட போகம்தான்! பெண்ணை அணுஅணுவாய் ரசிப்பது பாவம் என்றால், உணவை இப்படி ரசித்துப் புசிப்பதும்கூடப் பாவம்தான்... ஆனால் 'போஜனப் பிரியாள்' என்பது உயர்வாகி விட்டது. 'நான் ரசிச்சு சாப்பிடுவேன்' என்பது நல்ல குணமாகி விட்டது. உணவை ரசித்து தின்பவன் மூடன், அருவருக்கத்தக்கவன், ஆபாசம் மிகுந்தவன், கேவலமானவன், வாழ்க்கை அறியாதவன். நொட்டை விட்டு தின்பதின் அறிகுறி. இப்படிப் பார்த்துப் பார்த்து காய் வாங்குவது தான். இத்தனையும் சொல்லியும் ரங்கா பிடிவாதமாய் என்ன காய் என்று கேட்டால்தான் 'பால்ஸ்' என்று திட்ட வேண்டும். அப்போதுதான் இந்த செல்லமான இங்கிலீஷ் கெட்ட வார்த்தைக்கு அர்த்தம் இருக்கும்!

"காய் ஒண்ணும் அவசியம்னு எனக்குத் தோணலை ரங்கா... உங்களுக்கு அவசியம்னு தோணித்துன்னா ஏதாவது வாங்கிண்டு வாங்கோ..."

"நானும் காய் வாங்கப் போகலை விஜி! காலார நடக்கணும்னு தோணித்து. காய் வாங்கறது ஒரு சாக்கு... ஆனா என்ன காய் வாங்கறதுன்னு தெரியலை.. இதைத் தீர்மானம் பண்றது



நீயா இருந்துட்டா எனக்கு வேலை சுலபம். நான் எது வாங்கி வந்தாலும் எங்கம்மா குத்தம் சொல்வா. கேட்டுண்டு போறதே வழக்கமாயிடுத்து..."

வெற்றுப் பிடிவாதத்தை விட்டுவிட்டு சட்டென்று நிஜத்துக்கு இறங்குவது எவ்வளவு சுலபம்? உன் பிரச்சினை என்னவென்று முகத்துக்கு நேரே சொல்லிவிடுவது எத்தனை உத்தமம்? 'சொல்லித் தொலையேண்டி என்ன காய்னு' என்று நீ கத்தியிருந்தால் மொத்தமும் திசைமாறியல்லவா போயிருக்கும்!

"கத்தரிக்காய் வாங்கிண்டு வந்திருங்களேன்!"

"அதென்ன கத்தரிக்காய், உனக்கு ரொம்ப புடிக்குமா?"

"இல்லை ரங்கா... முனைக்கடையில ஐந்து காய்தான் இருக்கும். இப்ப மனசில தோணின காய் இதுதான். மத்தபடி ரொம்பப் புடிச்சுப் போக கத்திரிக்காயில என்ன இருக்கு?"

"வெரிகுட்...அப்ப கத்தரிக்காய்!" — ரங்கா செருப்பு ஓசைப்பட தெருவில் இறங்கினார்.

இப்படி காய் மாதிரிதான் சகலமும். புடவைகூட இப்படித்தான். புருஷ ஸ்நேகம்கூட இப்படித்தான். ஒருவேளை புடவை பற்றியும், பொங்கித் தின்பது பற்றியும் அதிகம் நினைக்காததால்தான் புருஷர்கள் பற்றிய ஒழுக்க சிந்தனையும் விட்டுப் போயிற்றா? இப்படி விட்டுப் போனது உயர்வான விஷயமாய் எனக்குள் கொஞ்சநாள் இருந்தது. சகலமும் துறந்த மாதிரி இருந்தது. இதில் கர்வப்பட ஏதுமில்லை என்று சொல்லிக் கொடுத்தவன் வில்லிங்ஸ்டன் — அமெரிக்கப் பிரஜை. சங்கீதம் கற்றுக் கொள்ள சென்னைக்கு வந்தவன். நாக்கு மலராமல், 'ஏன் பள்ளி கொண்டீரைய்யா...' —மழலையில் பாடி பலரை வியப்பில், சந்தோஷத்தில் ஆழ்த்தியவன்.

"மிஸ் விஜயலெக்ஷ்மி, அவர் ஏன் பள்ளி கொண்டாரென்று உங்களுக்குத் தெரியுமா?" — அவன் பாட்டுக்கு நான் பாராட்டியபோது என்னை பவ்யமாகக் கேட்டான். நான் பல முறை அந்தப் பாட்டைப் பாடியிருந்தாலும் என்னுள் இந்தக் கேள்வி எழுந்ததேயில்லை. இதை இங்கு காலம் காலமாய் பாடினவர்கள் யாரேனும் யோசித்திருப்பார்களா என்றும் தெரியவில்லை. "யோசிப்பதற்காகவோ, வாக்குவாதம் பண்ணி சிந்திப்பதற்காகவோ இங்கு பாட்டு இல்லை. பாட்டு இங்கே மயக்கம்! எத்தனை பொருள் பொதிந்திருந்தாலும் பொருளை விட்டு குழைய குழைய கிறங்குவதே சாஸ்வதம். சங்கீதம் போதையான விஷயம். சிந்தித்து அலுக்கிறபோது சங்கீதம் வைத்துக் கொள்ளலாம். சிந்திக்கவே கூடாது என்றுதான் இங்கே சங்கீதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சங்கீதம் பரமசுகம் என்கிறார்கள். பரமசுகம் என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை. இங்கே படைப்பு முழுதும் தவறு விஜயலெக்ஷ்மி... அமைதி என்பது இயற்கையில்கூட இல்லை. வெப்பத்தின் முழு ஆட்சியும், குளிரின் பரிபூரணமும் இங்கு இல்லை. பிரபஞ்சத்தின் பல்வேறு நிலைகளை இங்கே துளி துளி விட்டுவிட்டு, முடிந்தவர்கள் ஜெயித்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்ட இடம் இது. பெரிய விஷஜந்துக்களைக் கண்ணாடி தொட்டியிலிட்டு, அவை சண்டையிடுவதைப் பழங்கால மன்னர்கள் வேடிக்கை பார்ப்பார்களாமே...அப்படிப்பட்ட கண்ணாடித்தொட்டி இந்த உலகம்!

தொட்டியைத் திறக்கவும் முடியாமல், விஷங்கக்கிப்போராடுவதை பார்க்கவும் சகிக்காமல் கடவுள் அயர்ந்து தூங்குகிறாரோ என்று படுகிறது...''

''உங்களுக்கு அடுத்த அகாடமியில் இடம் கிடைக்காது வில்லிங்ஸ்டன்!''

''தெரியும். இதை வெளியே சொல்லலாகாது என்று தெரியும். சில விஷயங்கள் உணரப்பட வேண்டியவை மட்டுமே...''

## 4

இன்று ஏழாவது நாளாக ஆபீஸ் போகவில்லை. வீட்டில் உட்கார்ந்து செய்வதற்கும் ஒன்றுமில்லை. சில்லிட்ட சிகப்புத் தரையில் தலையணையை மாத்திரம் வைத்துக் கொண்டு பகல் வேளையில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தபோது — மஞ்சள் கயிறும், இரண்டு குண்டுமணிகளும், சூரிய பிரபை — சந்திர பிரபை எழுதிய தாலித் தகடும் கழுத்திலிருந்து தொங்கித் தரையைத் தொட்டுக் கொண்டிருந்தன. இதை ஆசையாய் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் பெண்களைப் பார்த்திருக்கிறேன். எனக்குச் சின்னதாய் முத்தமிட வேண்டும்போல் மட்டுமே இருந்தது. இரண்டுக்கும் அதிக வித்தியாசமில்லை. அது புருஷன்மீது அன்பு செலுத்துகிற ஒருவிதம்தான்... அவன் நினைப்பை நெஞ்சில் தேக்கிக் கொள்கிற சுகம்தான். இது சின்னங்கள்தான். எனினும் இந்தத் தங்கத் தகடுதான் ரங்கா. ரங்கா எனக்குச் சந்தோஷமானவராயிருக்கையில் இந்தத் தங்கத் தகடும் முத்தமிட வேண்டிய பொருள்தான்... நான் அதை மெல்ல முத்தமிட்டேன். 'ஐ லவ் யூ ரங்கா' என்றேன். விலுக்கென்று எழுந்து ரங்கா எங்கே என்று தேடினேன். ஹாலின் வலது கோடியில் டேபிள் ஃபேனை நெருக்கமாய் வைத்து கொண்டு ரங்கா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். இத்தனை நெருக்கமாய் ஆளை வைத்துக் கொண்டு இதைப் போய் முத்தமிடுவானேன்? மூன்று முறை புரண்டு ரெங்காவின் அருகில் போய் படுத்துக் கொண்டேன். ரொம்ப அயர்ந்து தூங்குகிறது... என் மாதிரி தூக்கத்தோடு சண்டை பிடிக்கிற ஜாதியே இல்லை இது! பரமசுகமாய் தூக்கத்தை அனுபவித்து உள்ளே வெகு ஆழத்தில் அமிழ்ந்து விடும். ஒரு சிணுங்கல், ஒரு புரளல்கூட இல்லாமல் தூங்கும். மாரில் கை வைத்தாலும், தலையை வருடினாலும், நெற்றியில் முத்தமிட்டாலும் உணர்வறியாது தூங்கும். எழுப்புவதற்குக் கொஞ்சம் உலுக்க வேண்டும். எழுப்பலாமா? எழுப்பினால் விலுக்கென்று எழுந்து உட்கார்ந்து கொள்ளும். ஸ்பிரிங் கதவு மாதிரி செயல்படும். எனக்கு ரெங்காவிடம் ரொம்ப பொறுமையாக இருப்பது தூக்கம்தான்! இது சலனமற்ற ஆண்... குடைந்து குடைந்து கேள்வி கேட்டு வருத்திக் கொள்ளாத ஆண். மனசு உழப்பலில்லாத குழந்தை. எனக்கு ரங்காவை எழுப்ப வேண்டும் போலிருந்தது. அதன் கையைத் தூக்கி மார்பில் படர விட்டுக் கொள்ள ஆசை வந்தது. அதன் உடம்போடு ஒண்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. இது காமம் இல்லை... 'இப்போ இந்த



க்ஷணம் என்மீது அன்பு செலுத்தேன்' என்கிற வேண்டுதல்... இப்படி ஒண்டிக் கொண்டு படுத்தால்தான் உடம்பு முழுக்க ரங்காவின் அன்பு படர்வதாய் ஒரு பிரமை. என்னை சமீபமாய் ஆட்கொண்ட உணர்ச்சி இது. இதற்கு முன்னே எனக்குத் தெரிந்த ஆண்களிடம் இதை உணரவில்லை. ரங்காவோடு பழக்கம் ஏற்பட்டபோதும் வந்ததில்லை. தாலி கட்டிக் கொண்டபின் இவ்விதமாய் ஓர் உணர்வு பொத்துக் கொண்டு வருகிறது...''வெறுன என்னைக் கட்டிக்கோங்களேன். வேற ஒண்ணும் வேணும்.'' —நேற்று ராத்திரிகூட ரங்காவிடம் இதைக் கேட்டேன். இரண்டு நிமிஷம் அவ்விதம் படுத்துக் கொண்டு விட்டு ரங்கா அலச ஆரம்பித்து விட்டது.

''ப்ளீஸ்... வெறுன படுத்நிண்டிருங்க ரங்கா!''

''அது கஷ்டம் விஜி... வெறுன படுத்திண்டிருக்கிறது ரொம்ப சிரமம். ஒண்ணு இடது பக்கமா போகணும்; இல்லை, வலது பக்கமா போகணும். இப்படி நடுமையமா நிக்கறது - அதுவும் ரொம்ப நேரம் நிக்கறது படுகஷ்டமான விஷயம். இதுக்கு ஒரு பழக்கம் வேணும்னு தோன்றது... இப்ப வேணும்னு சொல்லிடு. டக்குன்னு அந்தண்டை போயிடுவேன். பொண்ணு வெறும் அங்கவஸ்திரம்னு நெனைச்சு தோள்ல போட்டுக்கறது அநேகமா எந்த ஆம்பளையாலும் முடியாது...''

''எனக்கு இப்படி இருக்கறதுதான் ரொம்ப பிடிச்சிருக்கு ரெங்கா...''

''புரியறது. எல்லா பெண்களுக்கும் ஆம்பளை மேல் துணி மாதிரிதானே! துணி உடுத்திக்கிட்டா - விலகாத துணி உடுத்திக்கிட்டா ஜாக்கிரதையா இருக்கோம்னு ஒரு உணர்வு வர்றதில்லையா? விலகிட்டா நிறைய பேர் பதறிடறது இல்லையா? காபந்து தானே முக்கியம் பொண்ணுக்கு... அதுக்குதானே புருஷன்...?''

''என்ன ஆச்சு, கோவமா...?''

''சே...சே... இது ஒரு அபிப்பிராயம். ஒரு அஞ்சு நிமிஷம் வெறுன இருக்க முடியறதான்னு நானும் பார்க்கறேனே...''

நாலாவது நிமிஷம் தூங்கிப் போய்விட்டது. நான் மெல்ல கையை விலக்கி, போர்வையை இழுத்து அதன் தோள் வரை போர்த்தி, அதன் சுண்டுவிரலை மட்டும் பிடித்துக் கொண்டு வெகுநேரம் படுத்திருந்தேன்.

''ஏய்...எழுப்பக் கூடாது. டக்குன்னு தூங்கிட்டேன். ரொம்ப கஷ்டமாயிடுச்சா உனக்கு? ஸாரி, விஜி...''

விடிகாலையில் வேஷ்டி தடுக்கலும், தூக்கத் தள்ளாட்டமுமாய் பதறியபோது, அதன் இடுப்பை அணைத்துக் கொண்டேன்.

இப்போ எழுப்பலாமா ரங்காவை, ஸ்பிரிங் கதவாய் எழுந்து, இந்தப் பகலில் நேற்றைய இரவை காம்பன்ஸேட் பண்ண ஆரம்பித்து விடுவோமா... நான் முகத்தை வருடி, ''ரங்கா'' என்று மெல்ல அழைத்தேன். ஸ்பிரிங் கதவா...பீரங்கி உதிர்த்த ரப்பர் குண்டு மாதிரி எழுந்து கொண்டது. எழுந்த வேகத்தில் என் நெற்றியில் மோதி மல்லாக்காகத் தள்ளியது.

''என்ன...என்ன... என்ன விஜி?''

"கடவுளே, இது என்ன பதட்டம்?"

"மணி நாலாயிடுத்தா...பால் வந்திருக்குமில்ல?"

"இன்னும் மாடே வந்திருக்காது. அப்படியே பால் வந்தா நான் வாங்கிண்டு வரமாட்டேனா?"

"என்ன சொல்றே நீ...மணி ரெண்டரைதானா?"

"பன்னிரெண்டரை. அரைமணிக்கு முன்னாடிதான் தூங்க ஆரம்பிச்சேன். சும்மா ஒட்டிண்டு படுத்துக்கலாமேன்னு தான் கூப்பிட்டேன். குரல் குடுக்காம தொட்டா தூக்கிவாரிப் போடப் போறேதேன்னுதான் குரல் கொடுத்தேன். தொட்டு உலுப்பியிருக்கலாம்போல ஆயிடுத்து..."

"இதுக்கு ஏன் வருத்தப்படறே? மறுபடி எனக்குத் தூங்கறதா கஷ்டம்... ரா முழுக்க முழிச்சிண்டு உட்கார்ந்திருந்தாதான் சிரமப்படுவேன். என்ன வேணும் சொல்லு...ஒண்டிண்டு படுத்துக்கறதா...படுத்துக்கோயேன்!"

ரங்கா இழுத்து என்னை மடியில் சாய்த்துக் கொண்டார். பிடரியையும், கழுத்தையும், தோளையும் வருடிக் கொடுத்தார்.

"ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி மொத மொதல்ல உன்னைப் பாக்கறப்போ உன்னைக் கல்யாணம் பண்ணிப்பேன்னு நினைச்சுக்கூடப் பார்க்கவேயில்லை விஜி... ஏன், போன மாசம் வரைக்கும்கூட எனக்கு முழுநம்பிக்கையில்லை. அதிசயமாத்தான் நிக்கறது. உலகத்துல என்னோட ரெஸ்பான்ஸிபிலிட்டி ரொம்ப குறைஞ்சிட்ட மாதிரி தோணுது..."

"ரெஸ்பான்ஸிபிலிட்டி கூட ஆகும்னுல்ல சொல்வா..."

"இல்ல. குறையும். சமதையா சகலமும் தெரிஞ்ச பொம்மனாட்டியா இருந்தா ரெஸ்பான்ஸிபிலிட்டி நிச்சயம் குறையும். பாதி பொறுப்பு அவகிட்டே போயிடும். தூக்கி தோள்ல வச்சுட்டுப் போகணும்னாதான் ரெஸ்பான்ஸிபிலிட்டி சுமை, சோர்வு எல்லாம் வரும்..."

"பொம்மனாட்டியாவா ஏறி தோள்ல உக்காந்துக்கறா...? அஞ்சு வயசிலேர்ந்து பொண்ணைக் கொஞ்சி சீராடி கூட்டத்துல இடி படாம சாமி காட்டறேன்னு தோள்ல உக்காத்தி வச்சா, அப்புறம் கீழே இறக்கறதேயில்லை. பத்து பைசா கொடுத்து சைக்கிள் கத்துக்கப் போன்னு பையனை அனுப்பற மாதிரி பொண்ணை அனுப்பறதேயில்லை. தனிமை தெரியாத பொண்ணு, தனிமையை ஏத்துக்கத் தெரியாத பொண்ணு சுமையா இல்லாம எப்படி இருக்கும்?"

"எதுக்கு இப்ப சண்டைக்கு வர்ற...?"

"சண்டையா... உங்களோடையா? நானா? ஒரு நாளும் மாட்டேன்! ரங்கா, வளைச்சுப் போடணும்னாதானே சண்டை வரும்? என்னாலே யாரையும் வளைக்கவே முடியாது."

"வளைக்கவும் முடியாது; உன்னால வளையவும் முடியாது! சரியா?"

எனக்குக் கொஞ்சம் திக்கென்றிருந்தது. ரங்கா எந்த விஷயத்தைத் தொடுகிறார் என்று புரியாமல் இருந்தது.



"நான் எங்க வளையணும் ரங்கா? நான் ரொம்ப முரடா படறேனா உங்களுக்கு...?"

"நீயோ நானோ முரடு இல்ல விஜி... கொஞ்சம் முத்தல்! முத்திப் போறதுனாலே வர்ற சுபாவம். நாம ரெண்டு பேருமே வளைஞ்சு கொடுக்க வேண்டிய இடம் இனிமே நிறைய உண்டு. நமக்குக் குழந்தைகள் பொறந்துதுன்னா நாம ரெண்டு பேரும் மண்டி போட்டு வளைய வேண்டிய நிர்ப்பந்தம் நிச்சயமா வரும்... முதிர்ச்சி மூலமா நமக்கு வந்திருக்கிற தீர்மானத்தையெல்லாம் ஒதுக்கி வச்சுட்டு சாதாரணமா இருக்க வேண்டி வரும்."

"புரியலை ரங்கா..."

"ஒரு சின்ன எக்ஸாம்பிள் சொல்லட்டுமா... கிட்டத்தட்ட நம்ம மாதிரியே ஒரு 'லேட் மாரீட் கப்பிள்.' பத்து வயசில் ஒரே ஒரு பொண் குழந்தை. வீட்ல சாமி படம் கிடையாது. மாக்கோலம் கிடையாது. பண்டிகை கொண்டாடறதில்லே. உலகம் முழுக்க சுத்திட்டு வந்தவா ரெண்டு பேரும். குழந்தைக்கு முள்ளு கரண்டியும் கத்தியும், வெண்ணை தடவித் திங்கறதுக்கும், தனியா தானே போர்த்திண்டு படுத்துக்கறதுக்கும் சொல்லிக் கொடுத்தா. ஆனா குழந்தைக்கு இதெல்லாம் ஒட்டவேயில்லை. எனக்கு மூக்கு குத்தி விடுன்னு ஒரே பிடிவாதம்! புரண்டு புரண்டு அழுகை. அவ அம்மா மாட்டவே மாட்டேனுட்டா. நான் போயிருக்கச்சே வீட்ல இந்த ரகளைதான். நான் அந்தப் பெண் குழந்தையோட தலையை தடவிக் கொடுத்துப் பேசிப் பார்த்தேன். அவ ஸ்நேகிதியோட அம்மால்லாம் மூக்கு குத்திண்டிருக்காளாம். எல்லா ஸ்நேகிதியும் குத்திக்கப் போறாளாம். இந்தக் குழந்தை மட்டும் தனியா எப்படி நிக்கும்? பெரியவங்களோட கல்ச்சர் சேஞ்சை குழந்தை எப்படி புரிஞ்சுக்கும்? நான் அந்த அம்மாகிட்டப் பேசி வீடு மொத்தமும் மாறணும்னு சொன்னேன். மொள்ள மொள்ளமாறினாங்க..."

"நமக்குக் குழந்தை பொறக்குமா ரங்கா?"

"ஏன் சந்தேகம் விஜி?"

"எனக்கு முப்பத்தாறு வயசு."

"ஸோ வாட்? குழந்தை பொறக்க முடியாத வயசில்லையே இது... குழந்தை பொறக்கணும்னுதான் எனக்கு ஆசை."

"ரொம்ப ஆசையா ரங்கா?"

"நார்மலான ஒரு ஆசை."

"நம்ம கல்யாணத்தை ரெக்கக்னைஸ் பண்ற மாதிரியா?"

"நம்ம இருப்பை ரெக்கக்னைஸ் பண்ற மாதிரி... இன்னொரு ரங்கா, இன்னொரு விஜி இங்கே வேணுங்கற மாதிரி..."

"எனக்குக் கவலையா இருக்கே..."

"உடனே கவலைப்படணுமா? முதல்ல வேணும்னு ஆசைபடுவோமே... அதுக்கப்பறமில்லையா கவலையோ, சந்தோஷமோ... பொறக்காதுன்னு இப்பவே நினைச்சுப்பானேன்?"

நான் எழுந்து உட்கார்ந்து கொண்டேன். இதைப் பற்றி மிகவும் நம்பிக்கையோட இருக்கற வயசா இது? பதினெட்டு வயசில் கல்யாணமானவர்கள் மூணு வருஷம் வெறும்

வயிறோட இருந்தாலே பதைபதைத்துப் போவார்கள். முப்பத்தாறு வயசுக்கு நான் மௌள்ளவா கவலைப்பட முடியும்? உடனே கவலை ஒட்டிக் கொள்ளத்தான் செய்தது. லேசாய் ரங்காமீது கோபம் வந்தது... 'மடையா, இந்த ஆசைக்கு எவளாவது இருபத்தி அஞ்சு வயசுப் பொண்ணு பார்த்திருக்கக் கூடாதா?'

''இனி குழந்தைக்கு சான்ஸே இல்லேன்னு என்ன ஆகும், ரங்கா?''

''ரெண்டு பேரும் ரொம்ப படிப்போம். நெறைய ஊர் சுத்துவோம். விவாதம் பண்ணுவோம். சங்கீதம் கேட்போம். கேட்டதுல, படிச்சதுல குத்தம் கண்டுபிடிப்போம! அலுத்துப் போய் அடுத்தவீட்டு குழந்தைகளையும், மேலே தெரிகிற மேகத்தையும் பார்த்துண்டு கிடப்போம்...''

''நரகம்னு சொல்றேளா?''

''தெரியலை, விஜி... தெளிவா தெரியலை. இருட்டா தான் இருக்கு. ஒன்னு குறைஞ்சா வேற ஏதாவது வச்சு ஈடு கட்டுவோம். கல்யாணத்தன்னிக்கு எனக்குள்ள தோணின பயம் இது... நடக்காதுன்னு நானு நெனைச்சுண்டு இப்போ ஏற்படுத்தின பயம்தான் இது. இதைப்பத்தி யோசனை பண்ணுமை இருந்தா பயம் போயிடும். யோசிக்கறப்போ ஆசைதான் முதல்ல முட்டறது. ஆசை அதிகமா முட்டினு...'' – ரங்கா எங்கோ பார்த்தபடி பேச்சை நிறுத்தினுர்.

''ஆசை அதிகமா முட்டினு?'' – நான் கேட்டேன்.

''ப்ரேயர்தான்! ஆசைப்பட்ட உடனே, நிச்சயம் வேணும்னு தோணின உடனே, தோணின ஆசைக்கு வழிதெரியாதவுடனே கைகூப்பத்தான் தோணும்... கடவுளே துணைன்னுதான் சொல்லத் தோணும். படிச்ச புஸ்தகமும், புத்தி சொல்லிக் கொடுத்த நாஸ்திகமும் கைநழுவிப் போகும்...''

''ஏதாவது வேண்டிக்கோங்கறேளா, என்னை இப்போ?''

''நான் சொல்ல மாட்டேன்.''

''நீங்க வேண்டிக்கப் போறேளா?''

''வெட்கமாத்தான் இருக்கு...''

''அப்ப என்னதான் செய்வீங்க?''

''இப்போதைக்கு ஒண்ணும் தெரியலை. இன்னும் கொஞ்சம் பொறுத்து வேண்டிக்கலாம்னு மனசு ஒத்திப் போடறது.''

நான் இதுவரை வேண்டிக் கொண்டதில்லை. புரியாம செய்து கொண்டிருந்த கடவுள் வழிபாடுகூட என் இரண்டாவது தங்கை கல்யாணத்துக்குப் பிறகு நின்றுவிட்டது. 'விளக்கேற்று. கோலம் போடு. புதுசு கட்டிக் கொள். நமஸ்காரம் பண்ணு' – எல்லாம் அம்மாவின் கட்டளையாக இருந்ததே தவிர, என்னுள் பொங்கி என்றுமே செய்ததில்லை. ஒருவேளை, இவர் சொல்வதுபோல் ஆசை இல்லாததன் காரணமாக இருக்கலாம்... நான் ஆசைப்பட்டது ஒரே ஒரு இடம் – நான் விரும்பின ஒரே ஒரு ஆள் ஜான் ப்ரெட்ரிக் வில்லிங்ஸ்டன். சங்கீதம் வழியும் அந்த அமெரிக்க ஸ்நேகிதன் இன்று மாலை இங்கு வருவதாய் சொல்லியிருக்கிறுன்...



# 5

''நான் உள்ளே வரலாமா?''– கன்றுக்குட்டியின் குரலாய் வில்லிங்ஸ்டன் குரல் கேட்டது. குரல், முகம், குணம் எல்லாமே கன்றுக்குட்டிதான்! சிலீரென்று பொங்கும் குதூகலம். சட்டென்று அமைதியாகி அசையாமல் இருக்கும் சுபாவம். ஒரு மனிதர் மனசுக்குப் பிடித்து இழையத் துவங்கி விட்டால் சுவரில் முதுகைத் தேய்த்துக் கொள்கிற கன்றுக்குட்டிதான்! மணலில் தலைமுட்டி ஆட்டம் போடுகிற காளைக் கன்றுதான். நான்கு வருடம் முன்பு அகாடமி வாசலில் வில்லிங்ஸ்டனை 'முதன் முதலாய் சந்தித்தேன். தம்பூரா போட ஆள் தேடிக் கொண்டிருந்தான். பகல் நேரக் கச்சேரி. ஒரு மணி நேர சான்ஸ். புதுசாய் குடமில்லாத தம்பூரா கொண்டு வந்திருந்தான். நீளப் பெட்டியில் பிருடை அடித்து தந்திக்கம்பிகள் இறுகக் கட்டப்பட்டிருந்தன. வழக்கமாய் அகாடமியில் தம்பூர் போடுகிறவரைக் கொண்டுவந்து நிறுத்தினுர்கள். அவர் 'இதைத் தொட்டுப் பார்த்துவிட்டு இதை மீட்ட தனக்கு வெட்கமாக இருக்கிறது என்றுர். வில்லிங்ஸ்டனுக்கு கோபம் வந்து விட்டது! ''தொழில் ஆட்கள் யாரும் வேண்டாம். ரஸனை உள்ளவர் போதும். தம்பூர் மீட்ட நான் சொல்லித் தருகிறேன்'' என்றுன். அகாடமி தலைவர் தலையை சொறிந்து கொண்டு நின்ற போது நான் அங்கே போனேன்.

கூடியிருந்தோர் பேச்சிலிருந்து விபரம் தெரிந்து கொண்டு, மார்மீது சாய்த்து தம்பூரை மீட்டிப் பார்த்தேன்.

நாதம் கூடம் முழுவதும் பரவிற்று. வில்லிங்ஸ்டன் என்னை விழிஉயர்த்திப் பார்த்தான். 'நீங்கள் உதவுவீர்களா?' முகம் கேள்வி கேட்டது. 'சரி.' நான் தலையசைத்தேன்.

நூறு, நூற்று நாற்பது பேர் கூட்டம். தடலடியில்லாத அமைதியான சங்கீதம். குழையும் குரல். சொல் கொச்சையான உச்சரிப்பு. சுருதி மாறுது–கனமாய், வெல்வெட் தடவலாய் சாரீரம். 'ஓஹோ' என்ற கச்சேரியில்லை. ஆனுல் உள்ளே ஒரு நிம்மதி இருந்தது.

மேடையை விட்டு கீழிறிங்கியதும் கைகூப்பினுன்: ''அவசரத்தில் உங்கள் பெயர்கூட கேட்டுக் கொள்ளவில்லை. உங்களுக்கு நான் எவ்வளவு கொடுக்க வேண்டும்!'' ஜிப்பாவிலிருந்து பர்ஸை எடுத்தான்.

நானும் பதிலுக்குக் கைகூப்பினேன். பெயர் சொன்னேன். ''அடுத்த கச்சேரிக்கும் சான்ஸ் கொடுங்கள்!''

''நிச்சயம். தமிழ் சங்கத்திலும் பாடுகிறேன். இரண்டுக்கும் இப்போதே பணம் கொடுத்துவிடவா?''

''அடுத்த சான்ஸே வெகுமதிதானே! பணம் எதற்கு தனியே?''

வில்லிங்ஸ்டன் தீர்மானமாய் வற்புறுத்தினுன். ஐந்து ரூபாய் தாள் மட்டும் உருவிக் கொண்டு விடைபெற்றேன். தமிழ் சங்க நாள் குறித்துக் கொண்டேன்.

தமிழ் சங்க கச்சேரி முடித்த போதுதான், 'ஏன் பள்ளி கொண்டீர் ஐயா' விளக்கம் சொன்ஞன். தத்துவம் படித்தவஞம். ''இலக்கியம் அலுத்து இசைக்கு வந்திருக்கிறேன்'' என்ருன்.

ஆச்சரியமாய் போய்விட்டது.

''ஏன் இலக்கியம் அலுத்தது வில்லிங்ஸ்டன்?''

''யோசிப்பு இருட்டுக்குத்தான் இட்டுச் செல்கிறது மிஸ் விஜயலெக்ஷ்மி... தேடல் என் வரையில், முடிவுள்ளதாகவோ பயன் உள்ளதாகவோ இல்லை. வெறுமே இருப்பது சுகம். இயலாமையை மனிதன் ஒப்புக்கொள்வதுதான் நேர்மை. இந்த இயலாமையை முழுமனதாய் ஒப்புக்கொள்வதைத்தான் பலபேர் ஞானம் என்கிருர்கள். ஒப்புக்கொண்ட பிறகும் சும்மா இருத்தல் முடியுமா? அது இயல்பா? வெறுமே பரவிக் கொண்டிருக்க வேண்டியதாகிறது. ஒரு குளத்தின் அலைபோல முன்னும் பின்னும் போக இசை ஒரு சௌகரியம்.''

சங்கீதம்கூட ஞானமார்க்கம் என்கிருர்களே... மோக்ஷ சாதனம் என்கிருர்களே... பரிபூரணம் கிடைக்கும் என்கிருர்களே...''

''என்ருல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை!''

''பிறகு சங்கீதம் என்பது என்ன?''

''ஒரு நித்திரை. யோகநித்திரை. ஆழ்ந்த மயக்கம், போதை.''

''அவ்வளவுதாஞ?''

''நிச்சயம். சும்மா இருத்தல் என்பது இதன் மூலம் சிலருக்குக் கைகூடியிருக்கலாம். இடையனுக்குக் கால்நடைகளே உலகம். வேறுவித உலகத் துயர் எதுவும் தெரியாது என்பார்கள். அதுபோல சங்கீதம்.''

நாஞம் அவனும் மணிக்கணக்கில், நாள் கணக்கில் பேசியிருக்கிருேம். கலாக்ஷேத்ராவிலிருந்து திருவல்லிக்கேணி சந்து வரை நடந்தே வருவோம். கால்களை நீட்டி சுவரோரம் சாய்ந்து, நடந்த களைப்பில் கண்மூடி வில்லிங்ஸ்டன் உட்கார்ந்திருப்பான்.

''உன்னுடன் யாருமில்லையா வீட்டில்?''

''இல்லை.''

''சகோதரிகள்?''

''கல்யாணமாகி தனியே போய்விட்டார்கள்.''

''பெற்ருேர்?''

''தாயார் மட்டுமே உண்டு. அவள் இளைய தங்கையுடன் இருக்கிருள். தந்தை வெகுநாள் முன்பே காலமாகிப் போய்விட்டார்...''

''சரி...நான் கிளம்பட்டுமா?''

''ஏன்...?''

''உனக்குச் சிரமமில்லையா?''

''என்ன சிரமம்?''

''அண்டை வீடுகள் என் வருகைபற்றி பேச மாட்டார்களா?''



''அவர்களுக்கு இது புதியதில்லை!''

''பேசுவார்களே...''

''நிறைய.''

''வாடகை வீடு தானே இது?''

''ஆமாம். இருபத்தியேழு வருடமாக இருக்கிருேம். வெளியேற்றுவது சிரமம்.''

பின் பக்கத்து வீட்டு பாக்கியத்தம்மாள் உறைமோர் கேட்க வந்தாள். என் வீட்டுக்கு யார் வந்தாலும் அவளுக்கு உறைமோரோ, உப்போ தேவைப்பட்டு விடும்...!

''இவர்பாட்டு பாடறவர் தானே...?பேப்பர்லபோட்டோ பார்த்தேன். அமெரிக்காவா, இங்லண்டா?''

''நீங்களே கேளுங்களேன். தமிழ் தெரியும் அவருக்கு.''

''நான் மாட்டேன். பார்க்கவே பயம்மா இருக்கு... அம்மாடீ, என்ன உயரம்! இவன் பக்கத்துல போய் எப்படி நிக்கறது?'' —பாக்கியத்தம்மாள் சமையலறையில் நின்றபடி அவனை எட்டிப்பார்த்தாள்.

''இது பாக்கியத்தம்மாள். என் அண்டை வீடு. மிகவும் நல்லவர்கள்.'' — நான் அறிமுகப்படுத்தினேன். வில்லிங்ஸ்டன் வணங்கினுன். உறைமோர் சிந்த பாக்கியத்தம்மாள் கைகூப்பிவிட்டு, கால்கள் பின்ன ஓடியே போய்விட்டாள்.

''இப்படி பயப்படுபவர்களை அறிமுகப்படுத்துவானேன்?''

''இன்னும் பயமுறுத்தத்தான்!''

வில்லிங்ஸ்டன் வாய்விட்டு சிரித்தான். சிறிதுநேரம் பாடினுன். பாடச் சொன்னுன். சாப்பிட்டான். இரவு என் அறையிலேயே தூங்கினுன்.

அந்த முதல் வருகைக்குப் பிறகு என்னைப்பற்றி எந்த கேள்வியும் அவன் கேட்டதேயில்லை. அவன் வருகை எனக்கு இடைஞ்சல் இல்லை என்று தெரிந்த பிறகு உறவுகள் பற்றி பேசவேயில்லை.

தென்னிந்தியா முழுவதும் கோவில் கோவிலாக அவ
ளுேடு சுற்றியிருக்கிறேன். பழகின ஒரு வருடத்தில் அதிர்ந்து
பேசியதில்லை. மண்டியிட வைத்ததில்லை. 'நீ அவசியம் எனக்குத்
தேவை' என்று ஒரு குறிப்புகூட காட்டியதில்லை. எதிரே இருக்
கிறபோது இருப்பை மதிக்கிறவன்; இல்லாதபோது மறக்கிறவன்.
ரங்காவை அறிமுகப்படுத்தி என் திருமணம் பற்றி
அறிவித்ததும், ''லவ்லி...லவ்லி'' என்று பாராட்டின ஒரே ஆள்
வில்லிங்ஸ்டன்! ''திருமணத்திற்கு வருவதற்கில்லை. பிறகு சந்திக்
கிறேன்'' என்று சொல்லி விட்டான். போஸ்ட் கார்டில் தன்
வருகையைத் தெரிவித்து விட்டு, இதோ கதவைத் தட்டுகிருன்...

''நான் உள்ளே வரலாமா?''

வில்லிங்ஸ்டன் எங்கள் இருவர் கைகளையும் குலுக்கினுன்.
என் தோளை அணைத்துக் கொண்டான் நெற்றியில் முத்தமிட்
டான். அவரை இறுகத் தழுவிக் கொண்டான்.

பாயில் சம்மணமிட்டு அமர்ந்து, ''சந்தோஷமாய் இருக்கிறீர்களா?'' என்று கேட்டான்.

காப்பி கலந்து அவன் எதிரே வைத்தேன்.

ரொம்ப ஸ்நேகமான இறுக்கம் அங்கே நிலவியது. யாருடனும் எதுபற்றியும் பேச ஏதுமில்லை என்பதுபோல் ஒரு மௌனம் சுற்றிக் கொண்டது.

''உன் திருமணத்திற்கென ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன். ஏற்பாயோ...''

நான் அனிச்சையாய் அவன் ஜோல்னா பையைப் பார்த்தேன். 'சரி'யென்று தலையசைத்தேன்.

''பரிசுப் பொருளை வாங்கிக் கொள்வீர்களா ரங்கா... சில திருமணங்களில் பரிசு கூடாது என்று சொல்லியிருப்பார்கள். அப்படி ஏதும் உண்டா?''

ரங்கா சிரிப்புடன் இல்லையென்று தலையசைத்து, அதுவும் ஜோல்னா பையை ஒருமுறைப் பார்த்தது...

''பையில் ஏதுமில்லை விஜி... கலர் பேப்பர் போட்டு சுற்றி ரிப்பன் கட்டி ஏதும் எடுத்து வரவில்லை. அப்படி ஒரு பரிசு தர நான் விரும்பவில்லை. இன்று காலையில் மிகுந்த முயற்சிக்குப் பிறகு ஒரு சிறிய தமிழ் பாடல் எழுதினேன். உனக்கு அதைக் கொடுத்துவிட்டுப் போகிறேன். நான் பாடட்டுமா? ராகம் மோகனம் — தாளம் ஆதி. இயற்றியவர் ஜான் ப்ரெட்ரிக் வில்லிங்ஸ்டன். இனிய ஸ்நேகிதி விஜயலக்ஷ்மியின் நினைவாக...'' — ரேடியோ அறிவிப்பாளர் மாதிரி சொல்லிவிட்டு, தொண்டையைச் செருமி பாடலானான்...

''காற்று அசைவினிலே மரங்கள்
உன் கண்விழி போலாடும்
காலைக் குளிரினிலே உன் குரல்
மீண்டும் தாலாட்டும்
பச்சை வயல் மனது எல்லாம் நீ
பாதம் பதித்த இடம்
இயற்கை வளர்த்தவளே, என்னுள்
இச்சை அறுத்தவளே!''

—வில்லிங்ஸ்டன் பாடிமுடித்துக் கைகூப்பினான். வானத்தை நோக்கி யாரையோ இறைஞ்சுவது போல் பார்த்தான். நான் தவித்தேன். பரிசு தாளாமல் தள்ளாடினேன். கீழ்உதடை அழுத்திக் கடித்துக் கொண்டேன். கண்ணில் நீர் பொங்கிற்று. என் வலப் பக்கம் உட்கார்ந்திருந்த ரங்காவின் கையை இறுகப் பற்றிக் கொண்டேன். ரங்கா அதிர்ந்து போயிருந்தது. 'இதைப் பார்த்தியா ரங்கா... இது பண்ணிய காரியத்தைப் பார்த்தியா?' — எனக்குள் கேவல் பொங்கி பொங்கி எழுந்தது.

நான் அலமந்து போனது ரங்காவுக்கு புரிந்து போயிற்று. கண்மூடி உட்கார்ந்திருந்த வில்லிங்ஸ்டனை உற்றுப் பார்த்தது. ''யேசு மாதிரி இருக்கான் விஜி... யூத முகம் இவனுக்கு!''

எனக்குள் மகதலேனாவின் குணம் தோன்றிற்று. தலை முடியால் அவன் காலில் வாசனை தைலம் தடவி சரிய வேண்டும் போல் இருந்தது. அவிழ்த்துப் போட்டு படுத்துக் கொள்வதைவிட, மனசுக்குப் பிடித்த ஆணின் பாதங்களைப் பிடித்து விடுவதே சுகம் என்பது மகதலேனாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும்... மாறு காதலை — மரியாதையை இதைவிட எப்படி வெளிப்படுத்த முடியும்?



நான் மெல்ல நகர்ந்து வில்லிங்ஸ்டன் மடியில் தலை வைத்துக் கொண்டேன். வில்லிங்ஸ்டன் தலையை தடவிக் கொடுத்தான். ''சந்தோஷமாய் இரு விஜி...சந்தோஷமாய் இரு...'' என்று முணுமுணுத்தான். மெல்ல என்னை விலக்கினான். எழுந்தான். கைகூப்பினான். சிரித்தான். படியிறங்கி சப்தமெழாமல் வெளியே போனான்.

மதுவின் போதையோடு நாலு ஆண்களுடன் கூடிய அயர்ச்சி நிறைவு... 'அம்மா, இதுபோதும்' என்கிற சுகம் என்னுள் படர்ந்தது.

நான் பிறந்தது அர்த்தமுள்ளதுதான்.

# 6

எனக்கும் ரங்காவுக்கும் ஒரே ஆபீஸ். இறக்குமதி ஏற்றுமதிக்கு வசதிகள் செய்து தரும் கம்பெனி. ரங்கா கப்பல் சுங்கம் கவனிக்கிற அதிகாரி. நான் அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் அஸிஸ்டெண்ட்.

மறுநாள் இருவரும் ஆபீஸ் படியேறியபோது வாசலிலேயே நிற்க வைத்தார்கள். எல்லாரும் கூடி கைதட்டினார்கள். சந்தன மாலைகளைக் கொடுத்து மாற்றிக் கொள்ளச் சொன்னார்கள். திருமணத்திற்கு வரமுடியாதவர்கள் செய்யும் மரியாதையாம் இது!

''என்ன, ஆபீஸர் வீட்லயும் ஆபீஸரா... இல்லை, அஸிஸ்டெண்ட்தானா!'' — முற்றி முதிர்ந்தவர்களின் கேலி இது. எது பொருட்டுக் கேட்டாள் என்பது தெரியாது. ஆனால் எல்லாருக்கும் அவள் கேள்வி புரிபட்டதுபோல் சிரித்தார்கள். அந்நேரம் சிரிக்க வேண்டும் என்பதுபோல் எதிரொலித்தார்கள்.

''எல்லா அஸிஸ்டெண்ட்டும், ஆபீஸரும் வீட்ல க்ளாஸ் போர்தான்! ஒட்டடை அடிச்சு, கறிகா நறுக்கித் தராரோன்னோ...?'' —இந்த முறை யாரோ ஆண் குரல். மறுபடி கும்பல் சிரிப்பு.

ஆண் தன்னை திருமணம் இளக்காரம் பண்ணி விடுகிறது என்று திடமாய் நம்புகிறான். ஒட்டடை அடிப்பதும், கறிகாய் நறுக்கித் தருவதும், தட்டு அலம்புவதும் நாலாந்தர வேலைகள். நாலாந்தர வேலையைத் தொழிலாகக் கொண்டவன்கூட வீட்டில் ஆபீஸர் தோரணைக் காட்ட வேண்டும்... அதிகாரம் செலுத்துவதே ஆணுக்குக் குடித்தனப் பாங்கு!

சாப்பிட்ட பிறகு இருவரும் சேர்ந்து பற்று தேய்ப்பது எந்த வீட்டிலும் கிடையாது போலிருக்கிறது. ஆண் பற்று தேய்க்க உட்கார்ந்தால் பெண் அனுமதிப்பதில்லை. தட்டு கழுவி விடுதல், அலம்பி விடுதல் பெண் வேலை. ஆபீஸரானாலும் வீட்டில் இவைகள் அவளுடைய வேலை.

ரங்கா கூட்டத்தை மூன்று நிமிடத்தில் கலைத்து விட்டார்.

என் ஸீட்டுக்குப் போய் ஒரு ஃபைலைத் திறந்தவுடன், திட்டமிட்டதுபோல் இரண்டு பெண்கள் வந்தார்கள். மேஜையில்

கவிழ்ந்து கொண்டு முகத்தை ஆராய்ந்தார்கள்: என் இடுப்பைத் தடவினுர்கள். நான் பேசாமல் வியப்புடன் என்ன என்று கேட்டேன்.

''கூச்சம் போய்ட்டுதான்னு பார்த்தேன். போய்ட்டுது!''

பெண்களில் மிக ஆபத்தானவர்கள் இந்த ஜாதிதான்! முழுவிவரமும் சொல்லக் கேட்டு, வேறுபக்கம் போய் வேறுவிதமாய் விமர்சிப்பார்கள்.

''என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?'' — நான் நிதானமாய் ஆங்கிலத்தில் கேட்டேன்.

''கல்யாணம் முடிஞ்சதும் எல்லாரும் என்ன கேப்பா...: எல்லாம் நல்லபடியா முடிஞ்சுதா? அதானே...''

இது ஒரு பொய்யான கேள்வி. வெறும் அல்ப திருப்தி. பேசிப் பேசியே தீர்ந்து போய்விடுகிற குதூகலம். இதுபற்றிப் பேசுவதோ, படிப்பதோ பயனற்றது என்று இவர்களுக்குத் தெரியவேயில்லை. முகம் சிவக்க, விரல்கள் பின்னிக் கொண்டு இது பற்றி அதிகம் பேசி வருகிற பெண்களை நான் கவனித்திருக்கிறேன்... சதாநேரமும் இதுவே யோசனையாய் இருப்பார்களோ என்று பயப்பட்டிருக்கிறேன். ஒருவேளை, நேரிடையாய் அனுபவ முழுமை கிடைக்காத பொழுது இப்படி பேசுவது சற்று நிறைவைத் தருகிறது போலும்! இப்படி பேசிப் பேசியே அனுபவத்திலிருந்து விலகிவிடலாம் என்கிற எண்ணம் போலும்! நான் என்ன சின்ன குழந்தையா...? இரண்டுங்கெட்டான் வயசுப் பொண்ணு?

''இந்த மாதிரியெல்லாம் என்கிட்ட வந்து கேக்காத...: எனக்கு இதுபத்தி முழுக்க தெரியும்.''

''தெரியலேன்னு...''

''நானு தெரிஞ்சுக்கத்தான் விருப்பம். ப்ளீஸ்...தப்பா நெனைச்சுக்காதே. இதை விட்டுட்டு நாம ஏதாவது புடவை—ரவிக்கைன்னு பேசுவோமே...''பொசுக்கென்று இருவரும் நகர்ந்து,போய் விட்டார்கள் ஒருவேளை இதுபற்றி பேசினுல்தான் புடவை—ரவிக்கை பற்றி பேசுகிற அன்யோன்யமும் வரும்போல.

'இந்த புடவை உடுத்திண்டு, இந்த மாதிரி ஜாக்கெட் போட்டுக்கோ விஜி... அதுதான் உனக்கு பாந்தமா இருக்கும்!' — இந்த அறிவுரைகள் அந்தரங்க ஆலோசனைக்குப் பிறகுதான் வரும் போலிருக்கிறது! புடவை, ரவிக்கை பற்றிப் பேசலாம் என்று சொல்லி விட்டேனே தவிர, அது பற்றி பேசவும் தெரியாது எனக்கு. என் தங்கை கல்பாவுக்கு எப்போதும் ஆள் அடையாளம் காட்டும் விஷயமாய் புடவை—ரவிக்கைதான் இருக்கிறது... காலநேரம் குறிக்கும் விஷயமாயும் புடவை — ரவிக்கைதானிருக்கிறது. நாலைந்து பெண்கள் அவளைத் தேடிக் கொண்டு வருவார்கள். அரைமணி நேரம் பேச்சும் சிரிப்புமாய் கும்மாளமிட்டுக் கொண்டு போவார்கள். ''மஜந்தா கலர், செமி ஆர்கண்டி கட்டிண்டிருந்தாளே...அவ இந்த தெருல ஒரு பையனை லவ் பண்ரு!''

நான் யோசித்து யோசித்துப் பார்ப்பேன் எந்தப் பெண்ணென்று. புடவை மூலமாய் அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஆனல் நிறைய பெண்களுக்கு இது சாத்தியமாகிறது. கல்பா ப்ரௌன் ப்ளவுசுக்குக் கடை கடையாய் அலைவாள்: இணையாய் சட்டைத் துணி கிடைக்கவில்லை என்று பொங்கிப் பொங்கி வருந்துவாள்: வாங்கி தைத்ததைப் போட்டுக் கொள்ளும்போது நூறு பேரிடம் சந்தேகம் கேட்பாள். ஓர் ஆள் அதைப்பற்றி குறை சொன்னுலும் மாய்ந்து போவாள். உடைகள் பற்றின இத்தனை அலமலப்புக்குக் காரணமும் 'செக்ஸ்' பற்றிய கவலைதானே என்று அடிக்கடி தோன்றும். இது நல்ல ரஸனை என்று நிறைய பெண்கள் பொய் சொல்கிருர்கள். இத்தனை பார்த்துப் பார்த்து உடுத்திக் கொள்வதும் அவிழ்த்துப் போடத்தான் என்கிறபோது எனக்கு அருவருப்பாக இருக்கும். ஒற்றையாய் மார்பில் புடவை போட்டுக் கொண்டு, ''பஸ் ஸ்டாண்டில் இரண்டு பேர் மொறைச்சு மொறைச்சுப் பார்த்தான்டீ'' என்று கல்பா சொல்லும்போது பயத்தைவிட குதூகலமே தென்படும். இந்த தேசத்துப் பெண்கள் விடுதலை பெறவேயில்லை என்பதற்கு உதாரணம், வரிசையாய் முளைத்திருக்கிற புடவை கடைகள் தான்! இப்போதெல்லாம் கடைக்குப் போய்கூட புடவைகள் வாங்க வேண்டியதில்லை: ஆபீஸுக்கே வந்துவிடுகின்றன! உணவு இடைவேளையின்போது ஒரு பையன் மாதம் ஒருமுறை வருவான் முப்பது, நாற்பது புடவைகளை விற்று மாதத் தவணையில் பணம் வாங்கிக் கொண்டு போவான். ஆபீஸில் எல்லாரும் அவனிடம் கடன்பட்டிருக்கிருர்கள். என்னிடம் குசலம் விசாரித்தவளில் ஒருத்தி வாய்கூசாது பேசியதை ஒருமுறை கேட்டிருக்கிறேன்...

''யப்பா, எத்தனை டிசைன் டிசைனு வச்சிருக்கான்! அவன் கூட படுத்துண்டா ரெண்டு புடவை ஃப்ரீயா கொடுத்துடுவான் இல்ல...?''

மூன்று பெண்கள் அதை ஆமோதிப்பதுபோல் கிளுகிளுத்தார்கள். எனக்கு அந்தப் பேச்சும், பெண்களின் ஆமோதிப்பும் அதிசயமாய்பட்டது. இந்தப் பெண் இப்படி பேசினுள் என்று நான் வெளியே சொன்னுல் யாரும் நம்பவே மாட்டார்கள். நான் சத்தியமே செய்தாலும் என்னைத்தான் ஒருமாதிரியாகப் பார்ப்பார்கள். படுத்துக் கொள்கிற மரபு பற்றி எனக்கு அக்கறையில்லை. அந்த நோக்கம்தான் எரிச்சலாயிருந்தது. ஒருவேளை, பெண்களுக்குள்ளாகவே பெண்கள் இத்தனை வெளிப்படையாய் பேசுகிற சுதந்திரம் வந்துவிட்டதோ என்னவோ!

''இன்னிக்கு நீங்க புதுசா உடுத்திக்கிட்டு வருவீங்கன்னு நினைச்சேன்...'' — சற்று பயந்த சுபாவமுள்ள பெண் என்னை விசாரித்தாள். அவள் வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை பட்டு உடுத்திக் கொண்டு வருவாள். பெட்டியிலே வைத்து வீணுகப் போகிறதாம். வெள்ளிக்கிழமை ஒருநாள்தான் இதை உடுத்திக் கொள்ள முடிகிறதாம். பட்டுப் புடவையா வெள்ளிக்கிழமை வேண்டுமென்று சொல்லிற்று! வெள்ளிக்கிழமை மட்டுமே உடுத்திக் கொள்கிற புடவையை வாங்குவானேன்? பட்டுப்புடவை மத சம்பந்தமான விஷயமாகி விட்டது. மஞ்சள் கிழங்கு மாதிரி ஆகி விட்டது. உடை நாகரிகம் சுயவசதி மட்டுமில்லை. கற்போடு சம்பந்தப்பட்ட விஷயம். ''காலேஜ் போற போதெல்லாம் ஜீன்ஸ் போட்டுண்டிருந்தேன். கல்யாணமானப்பறம் விட்டுட்டேன்!'' —கொஞ்சம்கூட யோசனையில்லாமல் ஒரு பெண் பேசிற்று: நான்

தலையிலடித்துக் கொண்டதும் முகம் சுண்டிப் போயிற்று: இந்நேரம் நான் முகத்திலடித்தது போல இரண்டு தோழிகளிடம் பேசியது ஆபீஸ் முழுக்க பரவியிருக்கும். 'ஒண்ணும் போய் விசாரிச்சுடாதேம்மா! சிடுசிடுன்னு விழுருங்க. என்ன ப்ராப்ளமோ என்ன இழவோ... முப்பத்தாறு வயசுக்கு மேல கல்யாணம் பண்ணிண்டா இதுதான்!'—அபிப்பிராயங்கள் தூள் பறக்கும். உடலுறவு பற்றி என் அனுபவங்களைச் சொன்னால் இவர்கள் அத்தனை பேரும் ஓடிப் போகக்கூடும். நான் ரங்காவுடன் பலமுறை வெளியூருக்குப் போயிருக்கிறேன் — தங்கியிருக்கிறேன் என்று தெரிந்தபோது கல்பாகூட அதிர்ந்தாள். கற்பு பற்றின அவள் வரைமுறை விநோதமானது. பேசலாம். காப்பி குடிக்கலாம்: சினிமாவுக்குப் போகலாம். தொடலாம். ஆனால் படுத்துக் கொள்ளக் கூடாது. அவள் என் திருமணத்துக்கு வராத காரணமும் இதுதான். ''எனக்கு வரணும்னுதான் ஆசை. அவர் வேணாம்னுட்டார். கல்யாணத்துக்குப் போய் அங்கே ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆச்சுன்னு நாமும் பதில் சொல்லணுமில்லையா? ரெஜிஸ்டராவது பண்ணிக்கோடி...'' தன் சகாவின் மீது நம்பிக்கையில்லாதவளுக்குத்தான் சட்டத்தின் துணை வேண்டும். பத்திரிகைகூட இல்லாத கல்யாணம் என்கிறபோது அவளுக்குப் பயம் வந்தது:

இடைவேளைக்குச் சற்றுமுன் சரோஜினியிடமிருந்து போன் வந்தது.

''விஜி, நான் சரோஜி பேசறேன்: கல்பா வந்திருக்கா... கார் எடுத்துண்டு வந்திருக்கா. இன்னிக்கு சாயந்திரம் உங்க வீட்டுக்கு நாங்க வரலாம்னு இருக்கோம். வரலாமான்னு கேக்கச் சொன்னா. உங்களுக்கு ஏதாவது ப்ரோக்ராம் உண்டா... இன்னிக்கு ஈவினிங் நாங்க வரலாமா?''

''நீ எங்கேயிருந்து போன் பண்ற...?''

''எதிர் கடைலேர்ந்து.''

''கல்பா பக்கத்துல இருக்காளா?''

''வீட்ல இருக்கா. அவ ஆறு மணிக்குள்ள திரும்பணுமாம். அவ வீட்டுல யார்கிட்டயும் சொல்லாம வந்திருக்காளாம். அரைமணி பார்த்துட்டுப் போகலாமான்னு கேட்டா.''

''உங்க வீட்டுக்காரர் என்ன சொல்றார் சரோஜி?''

''அவர் என்ன சொல்வார்... அவரும் வரேங்கறார். கார் இருக்கே, சௌகர்யமா போய்ட்டு வந்துடலாம்னு சொன்னார்.''

கல்பா எப்போதும் இப்படித்தான். அயிரை இட்டு விரால் வாங்குவாள்! தனக்கு விருப்பமில்லை — ஆனால் பிறர் பொருட்டு வந்தேன் என்று சொல்பவள். என் வீட்டுக்குள் நுழைந்தவுடன், 'சரோஜினியோட குழந்தைகள்ளாம் உன்னைப்பார்க்கணும்னு பிடுங்கித்து. அதனாலதான் கூட்டிண்டு வந்தேன்' என்று பட்டுக் கொள்ளாதது போல பேசுவாள். மற்றவர்களிடம் போய், 'கல்யாணத்துக்கு எங்களை சரியா கூப்பிடலை. என்ன இருந்தாலும் கூடப்பொறந்தவளாச்சேன்னு மனசு கேக்காம போய் பாத்துட்டு வந்தேன்'னு பொய் சொல்லுவாள். எல்லா காரியத்துக்கும் அவளால் பொய் சொல்ல முடியும். குழப்பிக் கொள்ளாமல் பொய் சொல்ல முடியும்.



''வாங்களேன்: நாலரை மணிக்கே வந்துடறேன்: இரண்டு பேரும் வாங்கோ!''

நான் அவரிடம் சொல்லிவிட்டு நாலரை மணிக்கு வீட்டுப் படியேறினேன். ரங்கா ஆபீஸ் முடிந்ததும் உடனே வந்துவிடுவதாகச் சொல்லியிருந்தார். நான் உள்ளே நுழைந்த பத்தாவது நிமிடத்தில் சரோஜினியும், குழந்தைகளும், அவள் கணவனும் உள்ளே நுழைந்தார்கள். சரோஜினி தோளைக் கட்டிக் கொண்டாள். கன்னத்தை இழைத்தாள். தோளில் முகம் புதைத்துக் கொண்டு என் தாலிக்கயிற்றைத் தடவினாள். கயிறை எடுத்து என் புடவைக்கு மேலே படரவிட்டாள்; இழுத்து நேராக்கினாள்.

''ரொம்ப சந்தோஷமா இருக்குடி விஜி... நீ சந்தோஷமா இருக்கியா?'' — கண்கலங்கக் கேட்டாள்.

நான் அவளை அணைத்துக் கொண்டேன். சரோஜினி புருஷன் பாஸ்கரன் நமஸ்காரம் செய்தான்: குழந்தைகளை இழுத்து நமஸ்காரம் செய்யச் செய்தான்.

''கல்யாணத்துக்கு வரலேன்னு கோவிச்சுக்க வேணும்... போக வர முன்னூறு ரூபா செலவாயிடும். போய்ட்டு வந்தா எதுவும் வாங்கிக் கொடுக்க முடியாது. அதுதான் வரலை...'' — இறைஞ்சும் குரலில் பேசினான். துணிப்பையிலிருந்து புடவையும், ரவிக்கையும், பூவும் எடுத்து வைத்தான்.

''எதுக்கு இதெல்லாம்...: எனக்குப் புடவை வாங்கித் தரணும்னு கட்டாயமா என்ன...?''

''கட்டாயம்தான். எங்க கல்யாணத்தை நீங்க பண்ணி வெச்சேள். உங்க கல்யாணத்துக்கு நாங்க வரமுடியாதபடி போயிடுத்து. இந்தப் புடவைகூட இவளுக்கு டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் பிரெஸெண்ட் பண்ணினது. நாங்க ரவிக்கைத் துணி மட்டும்தான் வாங்கினோம்.''

-பாஸ்கரனின் பேச்சு என்னை நெகிழ்த்திற்று. பாஸ்கரன் வெளிப்படை. ஆனால் சாமர்த்தியமில்லாத கோழை. இவர்கள் கல்யாணத்துக்கு வேஷ்டி—சட்டை முதல், இவன் அம்மாவுக்கும் சகோதரிகளுக்கும் புடவை — ரவிக்கை முதல் நான்தான் வாங்க வேண்டியிருந்தது. தனியே இவர்களைக் குடித்தனம் வைத்து சுயமாய் நிற்கச் செய்ய நான்தான் செலவழிக்க வேண்டியிருந்தது. பாஸ்கரனுக்கு சர்க்கார் உத்தியோகம். அவன் சம்பளம் போறாமல் சரோஜினி ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் நூற்றைம்பது ரூபாய்க்கு லோல்பட்டுக் கொண்டிருக்கிறாள். இரண்டு குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வசதியாய் அம்மாவைத் தன்னுடன் வைத்துக் கொண்டிருக்கிறாள். அங்கே அம்மா இருப்பதற்கு நான் இன்னமும் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.

''அம்மா எப்படி இருக்கா சரோஜினி?''

''அப்படியேதான். உன் பேச்சை எடுத்தாலே சிடுசிடுங்கறு... மத்தபடி அவ இருக்கறது எனக்கு உதவிதான்.''

''கல்பா வரலியா...?''

எங்களை இறக்கிவிட்டுட்டு அத்தையைக் கூட்டிண்டு வர
போயிருக்கா...''

என் அத்தை நாலு தெரு தள்ளியிருந்தாள்.
அவளையும் கல்பா ஏன் துணைக்குக் கூட்டிக்கொள்ள
வேண்டும் என்று புரியவில்லை.

'அத்தை வீட்டுக்குப் போனேன். அக்காவைப் பார்
கணும்னு ஆசைப்பட்டா. பாவம், தள்ளாத வயசு. கொண்டுபோ
வுட்டுட்டு வந்தேன்' என்று சமாதானம் சொல்லும் வசதி இதி
கிடைக்கலாம்...

''கல்பா உனக்கு வெள்ளிக் குத்துவிளக்கு வாங்கியிரு
காடீ!''

— சரோஜினி பெருமையுடன் சொன்னாள். ஒருவேளை
அத்தைக்கு அந்த வெள்ளிக் குத்துவிளக்கைக் காண்பிப்பதற்காகவு
போயிருக்கலாம்! கல்பாவும்—அத்தையும் படியேறும்போது மண
ஐந்தாகி விட்டது. குழந்தைகள் நிலைகொள்ளாமல் கும்மாளமடி
துக் கொண்டிருந்தார்கள். கல்பா உள்ளே நுழைந்தவுடன் குழந்தை
களை ஆங்கிலத்தில் அதட்டினாள். நான் அணைத்துக் கொண்
வுடன் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

''குழந்தைகளுக்கு யார்கிட்டயாவது பயம் இருக்கணு
மில்லையா, அதுதான்...''

''நாம பயந்து பயந்து வாழறது போறுதா? குழந்தை
களை வேறு பயமுறுத்தணுமா...'' — நான் சற்று இடக்காகவே
பேச்சை ஆரம்பித்தேன்.

''என்ன பண்றதுடீம்மா... பயந்துதான் ஆகவேண்
யிருக்கு. பெரிய இடத்துல வாழ்க்கைப்பட்டா அதுக்கேத்தப்ப
நடந்துக்கத்தான் வேணும்.

''நமக்கு சரின்னு படறகாரியம்மத்தவங்களுக்குச் சரின்
படாது இல்லையா... என் சூழ்நிலை மத்தவாளுக்கு எங்
புரியறது? மாமனார் — மாமியாரை மீறவும் முடியாது. உன்
யும் விடமுடியாது. திருட்டுத்தனமாதான் வந்திருக்கேன். ஆ
எங்காத்துக்காரர் ஜெம்... உன்னைப் பார்க்கப் போறேன்னு சொ
னேன். வள்ளிசா இருநூற்றைம்பது ரூபா கொடுத்தார். உன்
நான் பார்க்கப்போறேன்னு எனக்கு மட்டுமா கஷ்டம்... அ
ருக்கும்தான் கஷ்டம். அவரையும்தான் வைவா. நல்ல புருஷனு
காக இதெல்லாத்தையும்தான் பொறுத்துக்க வேண்டியிருக்கு...

'நீ புருஷனுக்காகவா பொறுத்துக் கொள்கிறாய் கல்பா
காரும், பங்களாவும், காசுமாலைக்காகவுமில்லையா பொறுத்து
கொள்கிறாய்! ராம்குமாரை சுத்தமாக மறந்து போனாயா? ஆ
பொருளாதாரச் சின்னமாகப் பார்த்தவளல்லவா நீ...' இ
வெள்ளிக் குத்துவிளக்கு வேண்டாமென்று எப்படிச் சொல்வ
அதைவிட முக்கியமான விஷயம், அத்தையின் வரவை எதிர்கொ
வதுதான்.

அத்தை உள்ளே நுழைந்ததும்,

''நீ மட்டும்தான் இருக்கியாடீ பொண்ணே... அவ
வரலியா இன்னும் வீட்டுக்கு? இல்ல...வந்து போயிண்டிருக்கா
அக்கம்பக்கத்துல சொல்லிட்டயோன்னோ கல்யாணமாயிடு



துன்னு...''—உரத்த குரலில் பேசினாள். கொடியில் தொங்கும் சட்டைகளைப் பார்த்துவிட்டு, 'இருக்கார் போலிருக்கே' என்று தனக்குள் பேசிக் கொண்டாள்.

எந்த மனக்கசப்பும் இல்லாமல் இந்த மூவரையும் திருப்பி அனுப்பி வைக்க வேண்டுமே என்கிற கவலை என்னை உடனே பற்றிக் கொண்டது. எப்போதும் என் கவலை மனித மனங்களைப் பற்றியே தான். இவர்கள் சுலபமாய் நோக வைப்பார்கள்... சுலபமாய் நொந்து போவார்கள்.

'தேடிச் சோறு நிதந்தின்று
பல சின்னஞ்சிறுகதைபேசி
வாடி மிக உழன்று—பிறர்
வாடப் பல செய்கை செய்து...'

யம்மா...!எவ்வளவு துல்லியமாய் மனிதர்களை அவன் எடை போட்டிருக்கிறான்!

வாசலில் ஆளரவம் கேட்டது. ரங்கா முகம் மலர உள்ளே நுழைந்ததும் சட்டென்று பேச்சு கலகலப்பு அமுங்கி ஒரு பேரமைதி படர்ந்தது.

# 7

பதினைந்துக்குப் பதினைந்து ஹாலில் மூன்று பெண்கள் அமர்ந்திருக்க ரங்காவுக்கு நிற்பதுகூட கஷ்டமாக இருந்தது போலும்! இது இது இன்னார் என்று அறிமுகம் செய்தபோது ரங்கா மலர்ச்சியோடும், கூச்சத்தோடும் கைகூப்பினார். குழந்தைகளின் தலையை வருடிக் கொடுத்தார். என் அத்தை சோபாவில் சரிந்திருக்க, இரண்டு தங்கைகளும் போர்த்திக் கொண்டு நிற்க—ரங்கா பின்னை கட்டியபடி, பிடரியைத் தடவியபடி, முகவாயைத் தேய்த்தபடி நின்றிருந்தார். அறிமுகப்படுத்தியவுடனே பேச நட்புதான் சிறந்த இடம். படிப்போ, பழக்கவழக்கமோ, தன் பதவி பற்றியோ விவரமாக இங்கே கூச்சமில்லாமல் பரிமாறிக் கொள்ள முடியும்... உறவுகளிடத்தே — அதுவும் உறுத்தலாய் இருக்கிற உறவுகளிடத்தே தசலம் தாண்டிப் பேசவே முடியாது. பிடிக்காது போனால் பிரியலாம் என்கிற வசதி நட்பில் உண்டு. உறவில் இல்லை. இது 'தொடரும் கதை' என்கிறபோது நெருக்கம் பற்றி ஜாக்கிரதை வந்துவிடுகிறது. அத்தை அங்கு நிலவிய நீண்ட மௌனத்தை கலைக்க உதவி செய்தாள்:

''ஏண்டி விஜி, இதுதானே உங்க ஆத்துக்கார்? இல்லே, வேற யாரானுமா... நீ சொன்னது சரியா காதில விழலே?'' அத்தை கேலி செய்கிறாளா? நான் பயந்தேன்.

''ஆமாம் அத்தை. இதுதான் அவர்.''

''வெறும நின்னுண்டிருக்காரே அதான் கேட்டேன்...''

ஆம்; அத்தை கேலிதான் செய்கிருள். சரோஜினி பொங்கி வந்த சிரிப்பை நகம் கடிப்பதுபோல் நிறுத்திக் கொண் டாள்.

''மன்னிச்சுக்கோங்க அத்தை... இதோ நமஸ்காரம் பண்ணச் சொல்றேன்.''

''அடியே, நமஸ்காரம் பண்றதுக்கா கேக்கறேன்... இப்ப பண்ணுட்டி என்ன, நான் கிளம்பறச்சே பண்ணத்தான் போறேன்! மாப்பிள்ளையா சமத்தா கால்மேல் கால் போட்டுண்டு உக்காராது இத்தனை கூச்சப்படருளே...ஒருவேளை, தேடிண்டு வந்தவாளோன்னு தோணித்து...''

அத்தை இடக்கு சுலபத்தில் புரியாது. அவள் உதைப் பதெல்லாம் ஊமைக்காயமாகத்தான் படும். ரங்காவுக்கும் புரிய வில்லை. என்ன என்று என்னைக் கண்களால் வினவினர்.

''கொஞ்சம் கூச்சசுபாவம்தான் அத்தை... திடும்னு நீங்க மூணு பேரும் வந்து நிக்கறச்சே எனக்கே கொஞ்சம் கலவரமாத் தான் இருக்கு. அவருக்கு இருக்காதா?''

''கலவரப்படுவானேன்! கொள்ளையா, கொலையா, திருட்டா, தகிடுதித்தமா... கல்யாணம் தானேடீ பண்ணிண்டிருக் கேள்? கல்யாணமே பண்ணிக்காதவளெல்லாம் மாரை நிமித் திண்டு நடக்கறதைப் பார்த்ததில்லையா? பூவா பிஞ்சா இருக்க றப்போ நடந்திருக்க வேண்டிய கல்யாணம்... நன்னு மனசு கனிஞ்சு பண்ணியிருக்கேள். இதுக்குக் கால் மாத்தி வெக்கப்படுவானேன்? உக்காந்துக்கச் சொல்லு.''

ரங்கா உடனே உட்கார்ந்து விடுவாரோ என்கிற பயம் எனக்கு வந்தது. உடனே உட்கார்ந்துவிடக் கூடாது; உடனே அத்தை அதற்கும் ஏதாவது சொல்வாள்.

'அவரே உக்காந்துட்டார். நீங்கள்ளாம் ஏண்டி பொண் ணுகளா நிக்கறேள்!' — கூச்சமின்றி கிண்டலடிப்பாள்.

''நமஸ்காரம் பண்ணிடறேம்...''—நான் வேகமாய் உள்ளே புகுந்தேன். அவரின் வலப்பக்கம் நின்று கிழக்குமுகமாய் அத்தையை நமஸ்கரித்தேன்.

அத்தை வலக்காலை உயரே தூக்கிக் கொண்டாள். பட்டு விடப் போகிறேமே என்கிற மாதிரி பயந்தாள். ''பகவானே ரெண்டு பேரும் க்ஷேமமா இருக்கணும். மனசு ஒத்து கடைசிவரை குடித்தனம் பண்ணணும். அடுத்த வருஷமே கொழுக் மொழுக் குன்னு ஒரு புள்ளை பொறக்கணும்...முப்பத்தாரு, முப்பத்தேழாம் உனக்கு? என்ன வயசு உனக்கு... சட்டுன்னு ஒன்னு பெத்துக்கோ. நம்ம குடும்பத்துல பொம்மனாட்டிக்குத் தள்ளிதான் நிக்கும். உங் கம்மாவுக்கு நாற்பத்திரண்டிலகூட ஒருதடவை தங்கிடலையோ... அவதான் வேண்டாம் வேண்டாம்னு கைய காலை உதறிண்டா மூஞ்சிய மூடிண்டு டாக்டர்கிட்ட ஓடினா. நீ அப்படியெல்லாம் ஒண்ணும் பண்ணிடாத... குழந்தை பெத்துக்கற ஆசை உன் டோன்னே? ஆசை இருக்கணும். அது ரொம்ப முக்கியம். ஆசை இல்லாம பெத்துக்கிறது மகாபாவம். உங்காத்துக்காரரும் கண் ணுக்குத் திடகாத்திரமானவராத்தான் தெரியருர்..., ஆசையோட தான் கல்யாணமும் பண்ணிண்டிருக்கார். இதுக்கும் ஆசைப் படுங்கோ. எத்தனை நாள் உழட்டிண்டே இருப்பேள்...''



''ரங்கா, சித்த பூ வாங்கிண்டு வரேளா...'' இதற்குமேல் அத்தை பேச்சை இவர் தாங்கமாட்டார். அத்தைக்கு லஜ்ஜை கெட்டுப்போன வயசு. இப்படி அத்தையே தன்னை சொல்லிக் கொள்வது வழக்கம்! ஆனல், எப்போது கெட்டுப்போக்கினள் என்றுதான் சொல்லுவதில்லை. அவளுக்குத் திருமணமான மறு நாளே தொலைத்து விட்டாள் என்றுதான் எனக்குத் தோன்றியது... சற்றுக் கோழையான புருஷனை அடைந்த பெண்களுக்கு லஜ்ஜை சீக்கிரம் விட்டுப்போய்விடுமோ என்றும் தோன்றியதுண்டு.

ரங்கா அவசரமாய் நகர்ந்தார்.

கல்பா வாய்விட்டுச் சிரித்தாள். ''தயவுசெய்து எங்க வீட்டுப் பக்கமெல்லாம் வந்துடாத அத்தை! என் மாமனர்—மாமி யார் உன் பேச்சைக் கேட்டா உடனே பொறந்தாத்துக்கு அனுப்பிச் சுடுவா... கெட்டஜாதிப் பொண்ணுன்னு என்னைத் தீர்மானம் பண்ணிடுவா...''

''நிம்மதியாச்சு! பேசாம ஆம்படையானை இழுத்துண்டு வந்துடு. இவ மாதிரி ரெண்டு ரூம் சமையலறையா வீடு பார்த் துக்கோ. ராத்திரி எப்ப வரும்னு கன்னத்துல கைவெச்சுப் பார்த்திருண்டிருக்க வேணும் பாரு! நீ இன்னும் மாமியாரை நமஸ்காரம் பண்ணினப்புறம்தானே மாடிக்குப் போறே?''

''நோ... நோ. அதெல்லாம் எப்பவோ நிறுத்தியாச்சு!''

''ஏண்டி... போப்படாதுன்னுட்டாளா?''

'''போறும், நமஸ்காரமெல்லாம் வேணும்'னுட்டா.''

''அவளுக்கு அலுத்துப் போயிருக்கும். பல்லு இல்லாம வெறும் ஈரால எத்தனை குதப்ப முடியும்? வாய்தான் புண்ணாகும்...''

''அத்தை, போறுமே இப்படிப் பேசறது.''

''சரி போறும். மேற்கொண்டு என்ன பண்ணப் போற? உங்கம்மாவைக் கொண்டுவந்து இங்க வெச்சுக்கப்போறியா — இல்லை, சரோஜினி குழந்தைகளுக்குக் காவலாதான் இருக்கப் போருளா?''

''அம்மாவை நான் வரவேண்டாம்னு சொல்லலை, அத்தை... வான்னும் கூப்பிடலை. அவளா வந்தா மாட்டேன்னும் சொல்ல மர்ட்டேன்.''

''கூப்பிடாம வருவாளா...? நீ வான்னு கூப்பிட்டாத் தான் வந்து போயிண்டாவது இருப்பா. சரோஜினி குழந்தைகளை விட்டுட்டு அவளாலயும் இருக்க முடியாது. குழந்தைகளும் அவளை விட்டுட்டு இருக்காது...'' ஒருமுறை சரோஜினியை அப்ருவலுக் காக அத்தை ஏறிட்டு நோக்கினள்.

''அம்மாவுக்கு எங்கு இஷ்டமோ அங்குஇருக்கட்டுமே... அவளை வரவழைக்கறது ஒண்ணும் கஷ்டமில்லை. கல்யாணம் பண் ணிண்டுட்டேன்னு காசு அனுப்பறதை நிறுத்திட்டா, அவ உங் கிட்டதான் வருவா!''

''நான் ஏன் காசை நிறுத்தறேன்? என் கல்யாணத் துக்கும் அம்மா காசுக்கும் சம்பந்தமே இல்லை அத்தை!''

''அப்ப சரி. அவ சரோஜினிகிட்டயே இருக்கட்டும்.'' மறுபடியும் சரோஜினியை ஏறிட்டுப் பார்த்தாள்.

எனக்குள் லேசாய் ஒரு வெறுப்பு மிதந்தது. இங்கு இவர்கள் விஜயமே திட்டமிடப்பட்டதோ என்று தோன்றியது. ஒரு தடவைக்கு நாலு தடவையாக ஒத்திகை பார்த்துக் கொண்டு தான் இங்கு வந்திருக்க வேண்டும்... அத்தனை பேச்சும் உள்ளார்த் தம் கொண்டதாகப் பட்டது. வெளிப்படையாய் பேசாத இவர் கள் சாமர்த்தியத்தை இவர்களே மெச்சிக் கொள்கிறபோது கோபம் வந்தது. என்னாலும் இப்படிப் பேசமுடியும். அப்படி பேசத் துவங்குகிற போதெல்லாம் உள்மனசு வெந்துபோகும். 'ச்சீ... ச்சீ' என்று இப்படி சாமர்த்தியத்தை மனசு பின்னுக்குத் தள்ளும்.

ஆனால், சரோஜினிக்கு இந்த சந்தேகம் வர நியாயம் இருக்கிறது. அம்மாவுக்கு நான் முதல் தேதி கொடுக்கிற நூற்று ஐம்பது ரூபாய், வாடகைப் பணமாம்... ஏழாம் தேதி பாஸ்கரன் சம்பளம் வந்ததும் அம்மாவிடம் அந்த காசு கொடுக்கப்படுமாம். மொத்த நூற்றம்பதும் தருகிறாளோ—இல்லை, ஐம்பது அவள் கை செலவுக்கு மட்டும் தருகிறாளோ தெரியவில்லை. ஆகமொத்தம் என் காசு சரோஜினிக்கு முக்கியம்!

சரோஜினியின் இந்தக் கவலையை கல்பா பெரிசுபடுத்தி யிருக்கலாம்... இதை அத்தைக்குச் சொல்லி அவளை இப்படி பேச வைத்திருக்கலாம். சரோஜினி வேண்டுமென்பதை நேரே கேட்க வெட்கப்பட்டிருக்கலாம். சரி போகட்டும். அவரவர் வெட்கம், அவரவர் மனம், புத்தி.

''சரி. அந்த விஷயம் முடிஞ்சது. உன் விஷயம் சொல்லு. நீ எப்படி இருக்கே? உன் அகமுடையான் கிட்ட முழுக்க எல்லாத் தையும் சொல்லியிருக்கையா... உங்க அப்பா பத்தி அவனுக்குத் தெரியுமா? என்னடா அத்தை கிண்டி கிண்டி பேசறாளேன்னு நினைக்க வேண்டாம். அந்தப் பிள்ளை உறவா போயிடுத்து... வாசல்ல வெளில பார்த்தா சௌக்கியமான்னு கேட்கும்படி வரும். நானு சொல்லாட்டாலும், அவ கேட்டா நான் கிடந்து முழிக்கப்படாது. பட்டும்படாதுமா ஏதாவது சொல்லிட்டு, சரியோ தப்போன்னு திண்டாடப்படாது. ஏதாவது மறைச்சு வச்சியோ சொல்லு... அதுக்கேத்தப்படி நாங்களும் மறைக்கணும். ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம்னு சொல்வா! நல்லபடி நடக்கிற கல்யாணத்துக்கே ஆயிரம் பொய் அலெளட். டக்குன்னு தாலி கட்டிண்டு வந்திருக்கே. நாங்க தயாராயிருக்கணுமோன்னோ....''

என்னுள் சீற்றம் கிளர்ந்தது.

''பொய் எதுவும் நான் சொல்றதில்லை அத்தை...''

''அப்பா பத்தி தெரியுமா?''

''என்ன தெரியணும்?''

''ஓடிட்டான்னு தெரியுமா...?''

''அப்பா ஓடினாளா? விலகிட்டா... வடக்க காசிலோ, கங்கோத்திரில இருக்கா... தனியா இருக்கா.''

''அது நாலு வருஷம் முந்தின கதை! இன்னிக்கு அட்ரஸ் என்ன? 'கேர் ஆப்' கங்கையா, பிளாட்பாரமா தெரியலையே...?''



''தெரியவேண்டாம்!''

''அப்படி சொல்லு... உங்கப்பனைப்பத்தி பேசலை. அப் புறம்...?''

''அவருக்குத் தெரியவாண்டாம்னு சொல்லலை... நம்ம யாருக்குமே அவர் பத்தி தெரியவாண்டாம்! மத்தபடி ரங்கா கிட்ட நான் ஒண்ணும் மறைக்கலை.''

''என்ன சொன்னான் அதுக்கு?''

''சரின்னார்.''

''வேறென்ன சொல்றது? சரின்னுதான் சொல்லமுடியும். அப்புறம் உன்னைப்பத்தி தெரியுமா? ஏன் தங்கைக்குக் கல்யாணம் பண்ணிட்டு நீ பண்ணிக்கறேன்னு கேட்கலையா?''

''கேட்கலை. அவரும் நாலு தங்கை, இரண்டு தம்பி கல்யாணத்துக்குப் பிறகுதான் பண்ணிருக்கார்.''

''சரி. ஆம்பளை அப்படி பண்ணிக்கலாம். பண்றவரைக்கும் முன்ன பின்ன இருக்கலாம்...''

பெண் அப்படி இருக்கக்கூடாது. அப்படி இருந்து திருமண மானால் அது சிறக்காது. பெண் சரித்திரம் உடையவள். அவள் சரித்திரம் அவள் முதுகிலேயே எழுதப்படும்! அடிக்கடி படித்துப் பார்க் கப்படும். இன்றைய நடத்தைக்கும் – நேற்றைய செயலுக்கும் முடிச்சுப் போட்டு இலக்காய் விழுபவள் பெண்தான். காமாந்தகன் ஞானியாய் மாறும் வாய்ப்பு ஆணுக்கு மட்டுமே உண்டு! கொள்ளைக் காரன் ஆழ்வாராவது ஆணுக்கு மட்டுமே சாத்தியம்! மன்னிப்பும், பரிசிலனையும், புதுப்பித்துக் கொள்ளலும், படம் போடலும், மாறு தலும் ஆணின் ஏகபோக உரிமை. தாஸிக்கு ஞானம் கிடைத்ததே யில்லை. மாதவி மழித்துக் கொண்டாலும் போதவில்லை. மணி மேகலைக்குத்தான் மதிப்பு. பெண் பசும்பால். துளி கலப்படம்கூட கூடாது. அப்படியானால் ஆண் என்ன ஜாடி ஊறுகாயா... புளிப்பு பிடித்தாலும் வெயிலில் உலர்த்தி அடைத்துக் கொள்ள முடிந்த பொருளா...?

''சொல்லுடீம்மா... கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர்! நாளைக்குக் குழந்தைகள் பிறந்து அதுகள் அப்பா இல்லாம வேதனைப்படப்படாது பார்...''

—அத்தை ஈட்டியாய் சொருகினாள்.

நான் வலியில் கோபமடைந்து நிமிர்ந்தேன்:

''தெரியும் அத்தை...அவர் வந்தவுடனே நீங்களே கேட் டுத் தெரிஞ்சுக்கலாம். இவரையும் இரண்டு வருஷமா எனக்குப் பழக்கம்.''

''அப்படியா? எனக்குத் தெரியாது. நான் அவன்கிட்ட இதை கேக்கப்போறதில்லை. நாளைக்கு என்னைப் பார்த்து நீங்க ளாரும் சொல்லலையேன்னு கேக்கப்படாது....''

''கேக்கமாட்டா.''

''கேட்டாலும் தெரியாதுன்னுதான் சொல்லணும்.''

கல்பா குறுக்கிட்டாள். ''எங்க மாமியார் மடக்கி மடக்கி கேட்டா... இன்னும் தெரியாதுன்னுதான் சொல்லிண்டிருக்கேன். நமக்கு தெரியாதது எல்லாம் அவாளுக்கு எப்படியோ தெரி ஆறு

யறது! இவர் பேர், ஊர், ஆபீஸ், உத்தியோகம் எல்லாம் எனக்கு
முன்னாடி அவாளுக்குத் தெரிஞ்சிருக்கு. இன்னும் என்ன தெரியு
மோன்னு பயம் வேறவரது. நம்மாத்து பேச்சை எடுக்கிறபோ
தெல்லாம் செத்துச் செத்துப் பொழைச்சிண்டிருக்கேன்..."

எனக்குள் அலுப்பும் வேதனையும் பொங்கின. இவர்கள்
என்ன பெண்கள்! சகமனுஷி மனதை சற்றும் புரிந்து கொள்ளாத
ஜென்மங்கள். உனக்கு இப்படி ஒரு வாழ்க்கையா? இப்படி ஒரு
கல்யாணமா? இப்படி ஒரு புருஷனா? என்று ஏன் ஆதங்கப்படுகிறார்
கள்... பெண் என்பவள் சக்தி, தெய்வம், தாய் என்று எவன்
சொன்னான்? இவர்களில் யார் தாய், எவள் தெய்வம், எவள் சக்தி
ரூபம்? லஜ்ஜை கெட்ட அத்தையா, அலட்டிக் கொள்ளும்
கல்பாவா? தன் சுயநலமே முதல் என்று சுற்றும் சரோஜினியா?
உங்களை யார் வணங்குகிறார்கள்? எவர் போற்றுகிறார்கள்? கரம்
கூப்பி எவர் பணிகிறார்கள்? மூன்று வருடம் முன்பு இந்த தெருவில்
ஒருவன் பெண்களைச் சுற்றினான். போகிற வருகிற பெண்களையெல்
லாம் நமஸ்கரித்தான். 'பராசக்தி' என்று குரல் கொடுத்துத்
தொழுதான். அவனைக் கல்லால் அடித்துநொறுக்கினார்கள். பைத்தியம்
என்றார்கள். பிச்சை என்று அவனை அழைத்தார்கள்...

"உங்களுக்கு ஏன் பிச்சைன்னு பேரு?" — அவன் நெற்றி
ரத்தத்தைத் துடைத்துக் கட்டு போட்டு ஒருநாள் கேட்டேன்.

"எங்க அம்மாவுக்கு பகவான் போட்ட பிச்சை நான்...
ஸ்வாமியா பார்த்து எங்கம்மா கஷ்டம் போக என்னை அனுப்பிச்சார்.
நான் பிறந்த மூணும் மாசம் எங்க அம்மா கஷ்டம் போயிடுச்சு...
எனக்குப் பால் கொடுத்துட்டு தூங்கினபடியே செத்துப் போய்ட்
டாளாம். பாட்டி சொல்லுவா. அந்த மூணுமாசம்தான் அடிவாங்
காம அல்லல்படாம இருந்தாளாம். பாட்டி சொல்லுவா. எனக்கு
என் அம்மா ஆசையா வெச்சபேர் பிச்சை. இராப்பிச்சை, பகல்
பிச்சையெல்லாம் இல்லை. நான் எப்பவுமே 'பிச்சை.' இருபத்தி
நாலு மணி நேரமும் பிச்சை. எனக்கு படிப்பே வரலை. எப்பவும்
பிச்சை கேட்டுண்டே இருக்கணும் எனக்கு. பெரிய பாத்திரத்துல
சாதம் வைச்சு யாராவது கைநிறைய தள்ளினா போறும் எனக்கு.
சாப்பிடவே வேண்டாம். வயிறு நிறைஞ்சுடும். சாதம் போடற
பொம்மனாட்டிய பாத்தா அம்மா அம்மான்னு மனசு தேறும்... சில
சமயம் வாய்விட்டுப் புலம்பிடுவேன். அதான் பைத்தியம்னு சொல்
விடறா... கல்லால அடிச்சுடறா."

சட்டென்று உள்ளே ஒரு சிநேகஜலம் புரண்டு தளும்பி
கண் ஏறி விளிம்பு கட்டிற்று.

பிச்சையைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது... அவ
னுக்குச் சாதம் போட வேண்டும்போல் பரபரத்தது.

அந்தப்பிச்சை இங்கே சாப்பிட்டிருக்கிறான். குளித்து ஈரத்
துண்டோடு மாத்ருபஞ்சகம் சொல்லியிருக்கிறான். என் கழுத்தைக்
கட்டிக் கொண்டு தூங்கியிருக்கிறான்.

எனக்குப் பிச்சையை உடனே பார்க்க வேண்டும்போல்
இருந்தது.



# 8

ரங்கா பூ பந்தும், வெற்றிலையும், பழங்களுமாய் உள்ளே
நுழைந்தார். குழந்தைகளுக்கு பிஸ்கட் பொட்டலம் கொடுத்தார்.

"உங்க குழந்தையைக் கூட்டிண்டு வரலையா?" — கல்பா
வைப் பார்த்துக் கேட்டார். இது சம்பிரதாயமான கேள்விதான்.
ஆனால் கல்பா அதிகமாய் வெட்கப்பட்டாள். 'என்னடி இது
என்கிட்ட பேசிண்டு' என்பது போல பார்த்தாள்.

'கல்பா, இயல்பாய் இரு, ப்ளீஸ்.' நான் மனதுக்குள்
கூவினேன். கூவும்போதே ஒருவேளை இதுதான் கல்பாவின் இயல்போ
என்று நினைத்தேன்.

"குழந்தையை இங்கெல்லாம் கூட்டிண்டு வரமுடியுமா?
படியேறினவுடனே நேரா போய் அவன் தாத்தாகிட்ட நான்
பெரியம்மாவைப் பார்த்தேன்னு சொல்லிடுவான். ஏழு வயசுப்
பையனை இழுத்து வச்சிண்டு ரெண்டு கிழமும் மாத்தி மாத்தி
கேக்கும். இங்கு நடந்தது அத்தனையும் கிரகிச்சுக்கும். அவன் சொல்
லாததையெல்லாம் குழந்தை சொன்னான், குழந்தை சொன்னான்னு
ஒண்ணுக்கு நாலா பேசும்... அதென்னமோ அவாளுக்கு நான் இங்க
வரதே பிடிக்கலை..."

ரங்கா திரும்பி என்னைப் பார்த்தார்.

"அப்படி என்ன கோபம் விஜி மேல?"

"கோவம்னு இல்லை. அந்த வீட்டு நியதிகள்லாம் வேற.
பொம்மனாட்டி சுதந்திரமா இருக்கேன்னு சொன்னா அவாளுக்குப்
புரியாது. உடனே கெட்டபேர்தான் வச்சுடுவா..."

"நீங்க சுதந்திரமா இல்லைன்னு சொல்றேளா?" — ரங்கா
புன்முறுவலுடன் கேட்டார்.

"சுதந்திரமில்லாம என்ன... வேணுங்கறதைச் சாப்பிட
லாம். சாப்பிடறதுக்கோ, உடுத்திக்கறத்துக்கோ அவா ஒண்ணும்
சொல்றதில்லை. காசு செலவழிக்கறதைப்பத்தியும் கேள்வியில்லை...
இன்னும் ரெண்டு புடவை எடுத்துக்கோ, இன்னும் முந்நூறு செல
வழின்னுதான் சொல்றா. ஆனா மனுஷா சுத்தமா இருக்கணும்..."

"சுத்தமா இருக்கறதுன்னா...?" — ரங்காவின் குரலில்
லேசாய் கோபம் தெரிந்தது.

"ரங்கா, எதுக்கு ப்ளீஸ்..." நான் திகிலுடன் பார்த்
தேன். அத்தை சுலபமாய் பேச்சில் புகுந்தாள்:

"அது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. அது வீட்டுக்கு வீடு
மாறும். ஆளுக்கு ஆள் மாறுபடும். ஒருத்தருக்கு சோப்பு போட்டு
தேய்ச்சுண்டா புடிக்கும். இன்னொருத்தருக்குச் சீயக்காய்த்தூள்தான்
புடிக்கும். குளிக்காட்டி என்ன குத்தம்னும் சிலபேர் கேக்கலாம்.
இது அவா அவா இஷ்டம். எது சுத்தம்னு எழுதியா வச்சிருக்கு...?
எங்க விஜி மனசு சொக்கத்தங்கம். அது எனக்குத் தெரியும். இவ
ஆம்படையானுக்கு அப்பா — அம்மாவை மீறமுடியாது. அதை

வெளிய சொல்லிக்க முடியாம இவளும் கொண்டாட வேண்டியிருக்கு...''

''அவா ஒண்ணும் கெட்ட மனுஷா இல்லை அத்தை...'' — கல்பா சீற்றத்துடன் பேசினாள்.

''கெட்டவான்னு சொன்னேன்...சீயக்கா தேய்ச்சுக்குளிக்கறது கெட்டதா என்ன? கொஞ்சம் பழங்காலத்து வழக்கம். நாளைக்கே சட்டுன்னு இவ ஒரு குழந்தை பெத்துண்டு இடுப்பில புள்ளையும் — இடப்பக்கம் ஆம்படையானுமா போனா மதிச்சு கூப்பிடத்தான் வேண்டியிருக்கும். 'அதோ போறாளே அவதான் எங்க அக்கா'ன்னு நீயும்தான் சொல்வே...'அவாளும்தான் கேட்டுக்குவா, நீ கல்யாணம் பண்ணின்டா மட்டும் போறுது. சட்டுன்னு குழந்தை பெத்துக்கோ. வேண்டாம் வேண்டாம்னு விடாதே. எதுக்கோசரம் இல்லைனாலும் ஊர் வாய நச்சின்னு அடைக்கறதுக்கு, என்னைவிட — உங்காத்துக்காரரைவிட உன் குழந்தையாலதான் முடியும். சரோஜினியும் ஆசைப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணின்டா. ஆனா இன்னிக்கு யாருக்காவது ஞாபகம் இருக்கோ... அவ 'லவ்' பண்ணி தடுமாறினப்போ தெருவே சிரிச்சுது. இன்னிக்கு ஒரு சிலும்பல் உண்டோ? ஆளுக்கொரு குழந்தையா தூக்கிண்டு பாஸ்கரனும் சரோஜினியும் போகும்போது, சௌக்கியமான்னுதான் கேக்கத் தோன்றுகிறது. இதோ பாருங்கோ மாப்பிள்ளை! ஊரும் - உறவும் முன்னே பின்னேதான் பேசும். உள்ள வந்து எட்டிப் பார்த்துக் கெக்கலிக்கும். 'உங்க மருமாளுக்கு இன்னிக்குக் கல்யாணமாமே'ன்னு என் தெருவும்தான் கேட்டது.வெறும் ஆம்படையான்— பொண்டாட்டி ஆயிட்டா மதிப்பு வராது. தாலிக்கயிறும் வெள்ளி மெட்டியும் போறுது. நீங்க வேறுபட்டு போகமாட்டேள்னு ஊரும் உறவும் உங்க குழந்தைய வச்சுண்டுதான் நிச்சயம் பண்ணனும்... சமத்தா குழந்தை பெத்துக்க ஏற்பாடு பண்ணுங்கோ. இது பகவான் செயல். ஸ்வாமிய வேண்டிக்கோங்க. ஆத்துக்குப் போனவுடனே நான் மஞ்சத் துணியில காசு முடிஞ்சு வச்சிடப்போறேன்'.. சட்டுபுட்டுன்னு இவளுக்கு ஒரு குழந்தை பொறக்கணும்னு வேண்டிக்கப் போறேன். உங்களுக்கு நம்பிக்கை இருக்கோ இல்லையோ, எங்க ஆத்து பொண்ணுக்காக நீங்க வேண்டிக்கணும். இந்த மாசம் ஒரு விளக்கு பூஜை நடக்கும். முப்பது ரூபா கோயில்ல குடுத்தா பூஜைல கலந்துக்கலாம். விஜியை பூஜை பண்ணச் சொல்லுங்கோ. நிச்சயம் குழந்தை பிறக்கும். நான் வரேண்டியம்மா... இருட்டறதுக்குள்ளே வீடு போய்ச் சேரணும். எனக்குக் கண்ணு தெரியாது. இனிமேயாவது வந்து போயிண்டிருங்கோடி பொண்டுகளா... அந்தக் குழந்தை தனியா தவிச்சது போறும். உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணிட்டு கடனையடைக்க உழைச்சது போறும். காசா பணமா கொடுக்க வேண்டாம். மனுஷா கூட வந்து நின்னாலே தைரியம்தான். உனக்கெப்ப தோணினாலும் எங்க ஆத்துக்கு வாடி... அத்தை ஏதாவது சொல்வாளோன்னுதானே இதுவரைக்கும் வராம இருந்தே...? மனசுக்குப் பிடிச்சவனைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிகுடித்தனமும் வச்சாச்சு. இனி வர்றத்துக்கு என்ன? மாப்பிள்ளையையும் கூட்டிண்டு வா...''

அத்தையின் சூட்சுமம் எல்லையற்றது. அவள் பேச்சு ராமபாணம்! ஒரே வீச்சில் ஏழு ஆச்சா மரங்களை... சரோஜினியையும் — கல்பாவையும் அவரவர் இடத்தில் நிற்க வைத்து, எனக்கு



அப்ரூவல் கொடுத்து, அவரையும் மதித்து, தன்னையும் கௌரவப்படுத்திக் கொண்டாள்.

அத்தை எழுந்தாள். நான் பரபரப்புடன் உள்ளே ஓடி பீரோவைத் திறந்தேன். முன்னமே அவளுக்கு வாங்கி வைத்திருந்தப் புடவை, ரவிக்கைத்துண்டை எடுத்து வந்தேன். தாம்பாளத்தில் வெற்றிலைப்பாக்கும் மஞ்சளும், நெற்றுத் தேங்காயும், புடவையும் வைத்துக் கொடுத்தேன்.

''அடியே, எனக்கென்ன திடும்னு புடவை...?''

''கல்யாணத்துக்கு வருவேள்னு வாங்கி வச்சேன். ஆனா வீட்டுக்கு வந்திருக்கேளே விசாரிக்க... நான் ஏதாவது கொடுக்க வேணுமா?''

''இன்னும் கொடுக்கற மனசு போகலையாடி உனக்கு! கூடப் பொறந்தது எப்படிப் போகும்? நான் ஒரு அசடு. ஒரு மஞ்சள் கிழங்குகூட இல்லாம வந்திருக்கேன் பாரு. ஆத்துக்கு மறக்காம வாடி விஜி...''

அத்தை புடவை வாங்கிக் கொண்டு ஆசீர்வாதம் செய்தாள். சரோஜினி புடவையை வாங்கிக் கொண்டாள். பிரித்துப் பார்த்தாள்.

கல்பா, ''எனக்கெதுக்கு இதெல்லாம்... நான் எப்படி எடுத்திண்டு போறது? நான் குங்குமம் மட்டும் எடுத்துக்கறேன்'' என்றாள்.

''மரியாதை பண்றதை வேண்டாங்காதே... உங்க மாமனார் கிட்ட ஏதாவது சொல்லு. என்ன சொல்றதுன்னு உனக்குக் கத்துக்குடுக்கணுமா என்ன...?''

''எங்க மாமனார் கஷ்டமான ஆசாமி அத்தை!''

''அந்த மாதிரி மூணு மாமனாரை சமாளிப்பே! எடுத்துக்கோ சொல்றேன். எனக்குத் தெரியும் உன்னைப் பத்தி...'' —அத்தை சொன்னதும், கல்பா முகச்சுளிப்புடன் புடவையை எடுத்துக் கொண்டாள். அதை சரோஜினியின் கையில் திணித்து, காதோடு ஏதோ சொன்னாள்.

ஒருமுறை புரட்டி புடவையையும் கலரையும் பார்த்து உறுதி செய்து கொண்டாள். நான்கு நாட்கள் கழித்து நிச்சயம் சரோஜினியிடமிருந்து எடுத்துக் கொண்டு போவாள்.

''அம்மாவுக்கு ஒண்ணும் வாங்கலையா விஜி?''—சரோஜினி கேட்டாள்.

''வாங்கியிருக்கேன். வரட்டும் தரேன்...''

''அது சரி. வராதவாளுக்கு வரிசை என்ன... உங்க அம்மாவை வரச் சொல்லு.''

''அம்மாவுக்கும் உள்ளுக்குள்ள ஆசை இருக்காதா?'' —சரோஜினி மெல்லப் பேசினாள்.

''புடவைன்னா எல்லா பொம்மனாட்டிக்கும்தான் ஆசை. அந்த விஷயத்துல மட்டும் வயசு விவஸ்தையே இல்லை!'' — அத்தை சுருக்கென்று பதில் சொன்னாள்.

''அதைச் சொல்லலை அத்தை... விஜியைப் பார்க்கணும்னு அம்மாவுக்கு மட்டும் ஆசை இருக்காதா? ஊர் வாய்க்குப் பயந்துண்டுதான் ஒட்டாம இருக்கா...''

''ஆமாம்; அம்மா கொஞ்சம் மானி...''

''நிறுத்துங்கோடி! அப்படி என்ன இவ மானங்கெட்ட காரியம் பண்ணிட்டா? இத்தனை நாள் கல்யாணம் பண்ணிக்காம இருந்ததா? இல்லை, இப்பப பண்ணிண்டதா...உங்களுக்குப் பொம்ம ஞட்டி உக்கார்ந்தாகுத்தம். நாப்பது வயசுல உங்கம்மா புள்ளையாண் டதும் உங்கப்பா ஓடிப்போனதும், இந்தப் பொண்ணு அம்மாவை நர்ஸிங்ஹோம் கூட்டிண்டு போய் காசு குடுத்துக் கலைச்சுண்டு வந்ததும் எனக்குத் தெரியும்... இருபத்தியோரு வயசுப் பொண்ணை வச்சுண்டு உங்கம்மா குழந்தை பெத்துக்கலாம். இவ விட்டேத் தியா நின்ஞ அது மானங்கெட்டத்தனம். நீ ஒரு வாயில்லா பூச்சிடீ! சூடு போட்டாப்பல சொல்லு. போட்டாதான் உறவு உறவா இருக்கும். விட்டுக்கொடுத்திண்டேயிருந்தா ஏறி தொண் டைல மிதிக்கும். இவ அம்மா மானியாம்! அழைச்சுண்டு போய் உங்காத்துல ஒரு வாய் சோறு போடேன்...''

''பார்க்க வந்ததே தப்பு!'' — சரோஜினி தலையைக் குனிந்து முணுமுணுத்தது என் காதிலும் விழுந்தது.

ஹாலில் உள்ள அத்தனை பேரையும் விட்டுவிட்டு என் நினைவு எங்கோ வெளியில் அலைந்தது...

அன்று அம்மா தன் நிலையை விளக்கி குழாயடியில் முகத் திலறைந்து கொண்டு அழுதபோது எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. யாரைக் கேட்பது என்று தெரியவில்லை. ரொம்ப மக்குத் தனமாய் ஒரு மருந்துக் கடையில் கேட்டேன்.

ஆள் யாருமில்லாதபோது நிதானமாய் ஒவ்வொரு வார்த்தையாய் உச்சரித்தேன்:

''இங்க 'டி அண்ட் ஸி' பண்ற டாக்டர் யாருன்னு தெரி யுமா உங்களுக்கு?''

அந்த கடையில் மூன்றுபேர் நின்றிருந்தார்கள். வயதான ஓர் உதவியாளர்—கல்லாப் பெட்டியில் எதிரும் புதிருமாய் இரண்டு இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நான் பேசியதும் ட்யூப்லைட் அறுந்து விழுந்ததைப்போல் அதிர்ந்தார்கள். நான் என்ன கேட் கிறேன் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புவதுபோல முகத்தைக் கூர்மையாக வைத்துக் கொண்டார்கள்.

நான் மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

மூவரும் ஒருவரையொருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள். 'தெரியாது' என்று பதில் சொன்ஞர்கள்.

''யாராவது ஒரு டாக்டரைப் பாருங்க; அவங்க சொல் வாங்க'' என்று பதில் சொன்ஞர்கள்.

'சரி' என்று நான் திரும்பியதும் சிரித்துக் கொண்டார் கள். எந்த டாக்டரைக் கேட்கலாம் என்று நான் யோசனை செய்த போது—கல்லாப்பெட்டியில் இருந்த இளைஞன் வெளியே வந்தான். நான் திரும்பி அவனைப்பார்த்து, ''இந்த தெருக்கோடீல ஒருடாக்டர் இருக்காரே, அவரைக் கேட்கலாமா?'' என்றேன். அவன் முகத்த லிருந்த சிரிப்பு நகரவில்லை. பின் கையைக் கட்டி கீழ்உதட்டைக் கடித்தப்படி சற்றுநேரம் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். இவன் என்ன யோசிக்கிருன் என்று தெரிகிறது. எனக்காகத்தான்



நான் கேட்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிருன். நான் எங்கோ தட்டுக்கெட்டுப் போய்விட்டதாக யோசனை செய்து கொண்டிருக்கிருன். இவன் இப்படித்தான் யோசனை பண்ண முடியும்! என்ஞல் இதைத் தடுக்க முடியாது என்பதும் நிச்சயம். இந்தச் சின்னசின்ன அவமதிப்பிற்கப்பால் எப்படியாவது என் வீட்டு கஷ்டம் நீங்க வேண்டும்... எனக்கு அவமானம் என்று அம் மாவை இப்படியே விட்டுவிடுவதில் என்ன லாபம்? அம்மா இப்படி கேட்கமாட்டாள். கேட்டு அவமானப்படமாட்டாள். பட்டால் என்ன தவறு? அவள் படுகிற வேதனையை நான் பட முடியாது. அவளுக்கு இருக்கும் வலியை நான் வாங்கிக் கொள்ள முடியாது. ஆஞல், அவ மானத்தை வாங்கிக் கொள்ளலாமில்லையா? அவமானம் என்பது என்ன... கல்லா, களிமண்ணு... முழுங்க முடியாத பொருளா? தலையிலேற்றி வைத்துவிட்டால் தொப்பென்று விழுந்துவிடமுடியுமா? நடக்க வேண்டுமெனில் சுமக்கத்தானே வேண்டும்! சுமை என்று தெரிந்துவிட்ட பிறகு உதறி எங்கே ஓட முடியும்? அவன் என்னேடு வாருங்கள் என்று சொல்லி நான்கு தெரு தள்ளி சின்னச் சந்தில் உள்ள நர்ஸிங்ஹோமைக் காட்டிஞன். என்னை அறிமுகம் செய்து வைத்தான். 'டி அண்ட் ஸி' எனக்கில்லை. என் அம்மாவுக்கு என்று சொன்னதும் ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தான். கைகூப்பி மன்னிப்பு கேட்டான்.

''என் பேர் நாகப்பன். அது நம்ம கடைதான். உங் களுக்கு வேற எதும் உதவி வேணும்ஞ கேளுங்க'' என்ருன். நான் என் பெயரையும், வேலை பார்க்குமிடத்தையும் சொன்னேன்.

அம்மாவுக்கு 'டி அண்ட் ஸி' முடித்து நாலுமாசம் கழித்து, ஒரு வார பத்திரிகையில் 'நீங்கள் சமீபமாய் அதிசயப்பட்டவிஷயம் என்ன?' என்று வாசகர்களைக் கேட்டிருந்தார்கள். நான்கு பேர் எழுதியிருந்ததை வெளியிட்டிருந்தார்கள். நூறு ரூபாய் சன்மானம் கொடுத்திருந்தார்கள். அந்த நாலில் ஒன்ருய் நாகப்பனுடைய கட்டுரையும் போட்டோவும் வந்திருந்தன. விஷயம் என்னுடைய தாயிருந்தது. நான் நாகப்பனுக்கு போன் செய்து பாராட்டினேன். நாகப்பன் பணிவாய் நன்றி சொன்ஞன். நான்காம் நாள் ஒரு சின்னக் கடிதம் கொடுத்தான். 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று அதில் எழுதியிருந்தது. என்னை முதலில் நேசித்த, அல்லது நேசிப்பதாய் சொன்ன நபர் அந்த நாகப்பன்தான்!

# 9

ஆஞல், அத்தைக்குத் தெரியுமோ தெரியாதோ சரோ ஜினிக்குத் தெரியும்; கல்பாவுக்குத் தெரியும்; அம்மாவுக்குத் தெரியும். அண்டை அசலில் சிலருக்கு லேசுபாசாய் தெரியும். அத் தைக்கும் தெரிந்திருக்கலாம். தெரிந்தும் தெரியாதது மாதிரி நாடக மாடியிருக்கலாம்....

நான் நாகப்பனோடு சினிமா போனதும், சனிக்கிழமை பிற்பகல் தவறாமல் ஊர் சுற்றினதும் தெரிந்து வீடு ரகளைப்பட்டது!

''கல்லைத்தூக்கிப் போட்டுடுவே போலிருக்கேடி!''—அம்மா இலையில் சோறு போட்டபடி புலம்பினாள்.

''நீ அவனைக் காதலிக்கிறாயா... உண்மையைச் சொல்.'' — எச்சல் கையை நீட்டியபடி கல்பா பேசினாள்.

இன்னும் எப்பவாவது அந்த நீண்ட எச்சல்கை என் கனவில் வருவதுண்டு.

எனக்கு உடனே பதில் சொல்லத் தெரியவில்லை. உள்ளுக்குள்ளே எனக்கு நானே கேட்டுக் கொண்ட பிறகும் பதில் வரவில்லை.

நாகப்பனை பிடித்துப் போயிற்று என்பது வாஸ்தவம்.... லவ் லொட்டை லொசுக்கு எதுவும் வரவில்லை!

நேசிப்பதாய் கடிதம் கொடுத்து விட்டானே தவிர கண் முழுவதும் பயம்தான் தெரிந்தது. இரண்டு நாள் பயப்படட்டும் என்று பதில் சொல்லாது வந்து விட்டேன். நான்கு நாள் கழித்து ஆபீஸுக்குப் போன் வந்தது: ''ஏங்க அந்த லெட்டர் வச்சிருக்கீங்களா...?''

''ஏன் நாகப்பன், லெட்டர் திரும்ப உங்களுக்கு வேணுமா?''

''லெட்டர் வாணாங்க. பதில்தான் வேணும்!''

''அப்ப பதில்தானே கேக்கணும். உங்க லெட்டரை ஏன் கேக்கறீங்க?''

''பதில் எழுதறதாயிருந்தா இந்நேரம் எழுதியிருப்பீங்க.. பதில் வரலை. கோபப்பட்டா இந்நேரம் நாலுபேர் கிட்ட காட்டி கலாட்டா செய்திருக்கலாம். அதுவும் செய்யலை. ஒருவேளை, என் மாதிரி லெட்டர்ல எழுதி கமிட் பண்ணிக்க முடியலையோ என்னவோ? அதனாலதான் நான் எழுதிய கடிதாசை திருப்பிடுங்கன்னா பதில் நெகடிவ்னு எடுத்துக்குவேன். நான் ஆண்பிள்ளை, டக்குன்னு நாலுக்கும் துணிஞ்சு எழுதிடலாம். உங்களுக்கு அப்படி முடியாதில்லை... அதான் கேட்டேன்.''

நான் நீண்டதாய் ஒரு கட்டுரை எழுதினேன். கட்டுரை மூலம் என்னுடையதில்லை. ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியுடையது. தமிழ்ப்படுத்தி எழுதினேன். நாகப்பனிடம் படிக்கக் கொடுத்தேன். 'ஐயன்மீர், காதல் என்பது என்ன... கவிதையும் கதைகளும், சிற்பமும் ஓவியமும் பொங்கிப் பொங்கிச் சொல்கிற அந்த வார்த்தை... அதற்கு என்ன அர்த்தம்? நாம் ஆராய்வோமா?'

நானும் நாகப்பனும் ஆராய்ந்தோம்!

கனவில் உளறியவனைத் தட்டி எழுப்பி முகம் துடைக்க ஜில்லென்று ஜலம் கொடுத்ததும், பரவசமாய் விழித்துக் கொள்வானே அதுபோல நாகப்பன் விழித்துக் கொண்டான்.

கனவுகள் மட்டுமில்லை; தூக்கமும் சுத்தமாய் போய் விட்டது அவனுக்கு! முகத்தில் கடினமும், கண்களில் தீவிரமும், சொற்களில் சிக்கனமும் வந்துவிட்டன.

''இன்னிக்கு சினிமா வேண்டாம் நாகப்பன்!''

''சரி.''



''இன்னிக்கு சினிமா போகலாமா நாகப்பன்?''

''சரி.''

இருபத்தியொரு வயசு பெண்ணுக்கு இப்படி ஒரு துணை அல்லது காதலன் அல்லது ஆண் ஸ்நேகிதன் கிடைப்பது சிரமம். இந்தநிலையில்தான் அம்மா என்னைப் பார்த்து, 'கல்லைத்தூக்கிப் போடப்போறியா?' என்று கேட்டாள். கல்பா எச்சல்கை நீட்டினாள்:

அந்தநேரம் நான் ஒரு சிறு தவறு செய்தேன்.

மறுபடி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியை துணைக்கு அழைத்தேன். கல்பாவிடமும் படிக்கக் கொடுத்தேன். நாகப்பனை மட்டும் தான் நான் லவ் பண்ணணுமா? லவ் என்பது ஒரு நபரை நேசிக்கத்தானா..? சுயமா தெளிவா பேசறவா எல்லாரையும் லவ் பண்ண முடியாதா?

இது அதிகம். என் வீட்டுக்கு மிக அதிகம். அம்மா, கல்பா இருவருக்கும் என் புத்தி புரியவில்லை. நானும் அலட்டிக் கொள்ளக் கூடாத இடத்தில் அலட்டிக் கொண்டு விட்டேன். விஷயம் எதிர் மறையாயிற்று.

அம்மா சட்டமாய் போய் நாகப்பன் தந்தையிடம் விஷயம் சொல்லி கவலைப்பட்டிருக்கிறாள். புருஷன் இல்லாத வீடு என்று புலம்பியிருக்கிறாள். அந்த இடம் என் வீட்டைவிடமோசம்...

''கடைக்கு அனுப்பிச்சு வியாபாரம் கத்துக்குடுத்தா, சுயவாளித்தவமா பண்றே? செட்டிப்பிள்ளை வட்டம் தாண்டப் படாதுடா... அடுக்குச் சீரும், அறுவது பவுனுமா பொண்ணு வளர்ந்துகிட்டு இருக்கு. பாப்பாத்தி பின்னாடி சுத்தறியே...''

இரண்டே மாதம் – கடையில் ஆள் மாற்றி, நாகப்பனை வேறு கடையில் வேறு வியாபாரத்தில் உட்கார வைத்து, புத்தகங்களைப் பிடுங்கி தெருவில் எறிந்து, தேவகோட்டை பக்கத்தில் கல்யாணமும் முடிந்து போயிற்று!

நாகப்பன் தேவகோட்டையிலிருந்து ஒரு கடிதம் எழுதினான்:

'உங்கள் நிலை இன்று என்ன என்பது எனக்குத் தெளிவாய் தெரியவில்லை. வழக்கம்போல் மௌனமாய் இருந்து விட்டீர்கள். என் நிலை, இறுகிப்போன நிலை. வெள்ளைக் குதிரையில் ஏறி, தேவகோட்டையிலிருந்து மெட்ராஸுக்கு விரட்டி வந்து, உங்களை சிறையெடுக்கும் மனோநிலை நிச்சயம் இல்லை. எனக்கு ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியை அறிமுகப்படுத்தாது இருந்தால், படிக்கும் அறிவை தூண்டாது இருந்தால் – பரவசமான காதல் பாட்டுகளும், சினிமாவும், கதைகளும் மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தால், குதிரை ஏறிவருவது சாத்தியமாயிருக்கும்... பதட்டமும், விருப்பும் அதிகரித்து உங்களை அடையச் செய்திருக்கும்.

'என்னை நீங்கள் மாற்றியது உங்களை நான் இழக்கும்படி செய்து விட்டது. இதில் எனக்கு வருத்தமில்லை. ஒரு வெறுமை உண்டு. எனக்கு மனைவியாகப் போகிறவளை நேற்று பார்த்தேன். அப்பாவியாய் இருக்கிறாள். அவளைப் பார்க்கும் நேரம் அவள் மீதும் அன்பு சுரந்தது.

'சீர்வரிசைப் பண்டங்கள் பற்றி சச்சரவு வந்தபோது, என்னையும் மீறி 'சும்மா இருங்கள்' என்று சத்தமிட்டு விட்டேன்.

அதிக சீருக்கு ஆசைப்படாத மாப்பிள்ளை இங்கு அதிசயம். பெரிய வீட்டுப் பெண்பிள்ளைகள் வந்து வந்து என்னை விநோதமாய் பார்க்கிறார்கள். அந்த புதுமணப் பெண்ணை அதிர்ஷ்டக்காரி என்கிறார்கள். எனக்குள்ளும் லேசாய் சந்தோஷம் படர்ந்தது.

'மரபை மீற பயமில்லாது போனாலும், இந்த மரபு மனித நேயத்தை, இனிய சுபாவத்தை காயடிக்காது போகவேண்டுமே என்று கவலைப்படுகிறேன்.

'நானே திருமணம். உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். இது உருகல் இல்லை. என்னை மாற்றின உங்கள் பெருங்குணம், கைதூக்கிவிட்ட புத்திசாலித்தனம் என்னை நெகிழ வைக்கிறது. அப்பா ஆறுதலாய் சற்றுமுன் தட்டிக் கொடுத்தார். விலக்கினேன். விஜயலெஷ்மி, என்றேனும் ஒரு நாள் உங்களை மனசு குளுமையுடன் நிறைவுடன் வணங்க வேண்டும். இனி எனக்கு நீங்கள் தேவையில்லை. நானே சுயமாய் தனியாய் வளர முடியும். நெருடல் இன்றி தயக்கமின்றி நாம் சந்திக்க முடியும் என்று நம்புகிறேன்.'

எனக்குக் கடிதம் பிடித்திருந்தது. கல்பாவிடம் காட்டிய போது 'பாஸ்டர்ட்' என்று பல்லைக் கடித்தாள்.

''நல்லவேளை, நீ ஏமாந்து போகலேடீ'' என்றாள்.

''ஏமாந்து போனது நீயும் அம்மாவுந்தானே!''

''ஏன் நாங்க ஏமாந்து போனோம்? உனக்கு நல்லதுதானே செய்தோம். நாகப்பன் மறுபடி மெட்ராஸ் வந்தா பேசுவியா?''

''பேசுவேனே.''

''சினிமா போவியா?''

''நல்ல படமா இருந்தா போனாலும் போவேன்!''

''வாண்டாண்டீ...''

''ஏன்?''

''ஊர் ஒருமாதிரி பேசும்.''

''என்ன பேசும்?''

''உன்னை அவன் வப்பாட்டியா வெச்சிண்டிருக்கான்னு சொன்னாலும் சொல்லும்...! பேசாம கட் பண்ணு.''

''என்ன...?''

''உனக்கு உலகம் தெரியாதுடி விஜி!''

அந்த க்ஷணம்நான் உலகம் தெரிந்த கல்பாவை மனசுக்குள் அறுத்தேன்.

பெண்கள் புதிரானவர்களாம்! இல்லை. ஒருநாளும் இல்லை. அவர்கள் லோகாயதமானவர்கள். வெறி எர்த்தி. சர்வ ஜாக்கிரதையாய் இருக்கிற பெண்களைக் கண்டு ஆணும் பயப்படுகிறான். சீறிவரும் புலியைவிட பொந்துக்குள் புகுந்துவிட்ட பாம்பு தான் பயங்கரம். எனக்கு குடும்பம்—உறவு, காதல் பற்றிய பிடிப்பெல்லாம் அறுந்துபோக துணை செய்தவள் கல்பாதான்!

நிஜமாய் எதிரே நிற்கும் புலியைவிட, நானை இது தாக்கும் என்று பொந்துக்குள் மறைந்துவிட்ட பாம்பை நினைத்துக் கொண்டே தினம் தினம் சாகிற பயம் என்னுள் செத்துப் போயிற்று.

எதுவும் வருகிறபோது எதிர்கொள்ளுதல் பலம் மிக்கது; சுவாரஸ்யமானது. அதற்கு உடனே ஒரு தீர்வு உண்டு.



க்ஷணநேரத்தில் நன் இதைக் கற்றுக் கொண்டேன். என் மனமென்ற தென்னைமரம் வளைந்து சூரியனை நோக்கி திரும்பிற்று. ஊர் 'முடத்தெங்கு' என்று என்னை அழைத்தது. தினம் தினம் புது சூரியன். புதிய உலகம்.

கல்பாவும் என்னை விட்டு இன்னும் வேகமாய் விலகத் தலைப்பட்டாள். தனக்கு நல்லபடியாகக் கல்யாணம் ஆகவேண்டுமே என்று கவலைப்பட்டாள். தானே வலை விரித்தாள். வீழ்த்தினாள். இரையோடு புக்ககம் போனாள். ரொம்ப அடக்கம், சாது என்கிற தாய் அங்கே வேஷம் போட்டாள்.

அது அலுத்துப் போகிறபோது என்னைத் தேடி வருவாள். இன்று வருகையும் அப்படித்தான் போலிருக்கிறது.

''ஏய், மனசு விட்டு கேக்கறேன். வில்லிங்ஸ்டன் பத்தி உங்காத்துக்காரருக்குத் தெரியுமா?''— தோளைப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

அம்மா... என்ன அன்பு...! கல்பாவின் மன நாக்கில் ஜொள் கொட்டுவதை உணர்ந்தேன். உள்ளே சிரித்தேன்.

'பாவம்டி கற்பகம் நீ' என்றுதான் தோன்றிற்று.

''ஏன் கேக்கற கல்பா?''

''என்னை ராம்குமார் பத்தி என் புருஷன் கேட்டார். சத்தியமா அவனைத் தெரியாதுன்னு சொல்லிட்டேன். ஆனா இன்னி வரைக்கும் அவர் அதை நம்பலை...''

''நான் பொய் சொல்ல மாட்டேன்னு உனக்குத் தெரியாதா கல்பா? எனக்கும் ரங்காவுக்கும் ஒளிவு மறைவு ஏதுமில்லை.''

''ஆச்சரியமா இருக்கு. நான்தான் பெரிசா கணக்குப் போட்டு ஏமாந்துட்டேனோன்னு படறது. கார், பங்களா, நகை எல்லாம் இருக்கு. மனசுல நிம்மதியில்லை. பொய் சொல்லிண்டே இருக்க வேண்டியிருக்கு. இங்க வரப்பகூட பொய்தான் சொல்லிட்டு வந்தேன்.''

''சரி.''

''இன்னும் விட்டேத்தியாதான் பேச முடியுதா என்கிட்ட.''

''இல்லியே!''

''ஒட்டலையா?''

''நான் யாரோடதான் ஒட்டினேன்?''

''எனக்கும் அந்த வித்தை தெரியாது போச்சு! ரொம்ப குழைஞ்சுட்டு இப்போ அவஸ்தை படறேன். நா வரட்டுமா விஜி... ஆல் த பெஸ்ட்!''

அத்தையுடன், சரோஜியுடன் கார் ஏறிப் போனாள்.

## 10

''உங்க அத்தை பிரமாதமான ஆள் விஜி...எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''சமயம் தெரிஞ்சு பேசுவா.''

''அனுபவ அறிவு ஜாஸ்தி போல இருக்கு...''

''அவ அனுபவங்கள்லாம் அப்படித்தான். பளிச் பளிச்சென்று பேசத்தான் பயன்படும்.''

''ஒரு தெளிவு இருக்கு இல்ல...''

''எதிர்த்துக் கேள்வி கேக்காதவரையில் தெளிவுதான்!''

''அத்தையை உனக்குப் பிடிக்காதா?''

''பிடிக்குமே...''

''ஏன் குத்தலா பேசற?''

''பிடிச்சுதுன்னு உடனே உயரத் தூக்கி வச்சுப் பாராட்டணுமா? அத்தை யாருன்னு எனக்குத் தெரியும். அவ சூழ்நிலைக்கு அவ இப்படித்தான் இருப்பாங்கறதும் தெரியும். அவ அவளோட இயல்போட இருக்கறபோது பிடிக்காம போகுமா?''

''இயல்போட இருக்கறது பாராட்டப்பட வேண்டிய விஷயமில்லையா...?''

''அப்படி ஆயிடுத்து. இயல்பா இருக்கறது அதிசயமா போனதினாலே பாராட்ட வேண்டியிருக்கு.''

''அப்ப எதைத்தான் பாராட்டணும்?''

''தன் இயல்பை புரிஞ்சிண்டு மேலே நகர வேணுமா?''

''சரோஜினியைக்கூட எனக்குப் புடிச்சிருக்கு விஜி... பாஸ்கரன் சங்கோஜமான ஆள். சம்பிரதாயமாய் வந்து உட்கார்ந்து கைகுலுக்கிட்டுப் போயிட்டாரே!''

''அதுக்கு வேற ஒண்ணும் தெரியாது, ரங்கா!''

''அதுவும் இயல்பு தெரிஞ்ச ஆளா?''

''இல்லை. எதுவுமே தெரியாத ஆள்! தன் இயல்பு பத்தின பிரக்ஞை எதுவும் இல்லாம இருக்கிற மனிதன். தாண்டி விடறது, அடக்கி ஆள்றது இரண்டும் சுலபம்.''

''நான் எப்படி விஜி?''

நான் மௌனமாய் பாத்திரங்களை எடுத்து வைத்தேன்.

''சொல்லேன். நான் எப்படி?''

''இப்படிக் கேட்டா பதில் சொல்றது சிரமம்.''

''ஏன்?''

''உங்க மனசுக்குப் பிடிச்ச பதிலா எதிர்பார்த்துக் கேக்கறேள்... பதில் சொல்றதும் சிரமம். கேட்டுக்கறதும் கஷ்டம்.''

''எப்பச் சொல்லுவே?''

''சொல்லவே மாட்டேன்!''

''ஏன்?''

''நீங்க எப்படி இருந்தா என்ன? எனக்கு இது முக்கியமில்லை. என்னால் எதையும் அனுசரிச்சுப் போகமுடியும்.''

''அது உன் இயல்பா?''

''ஆமாம்.''

''கஷ்டமான இயல்பில்லையா?''

''எனக்குன்னு ஒரு குறிக்கோளும் இல்லை. அதனால அனுசரிச்சுப் போறதுல கஷ்டம் இல்லை. 'எய்ம்' இருந்தாதானே தொலைவும், நடக்கிற கஷ்டமும்... வழில வர சிரமமும் பெரிசா தெரியும்.''

''சரி. அது முன்னாடி சமாச்சாரம். இன்னம்கூட 'எய்ம்' இல்லேங்கறது நல்லதா?''



''இன்னம் கூடன்னா?''

''கல்யாணத்துக்குப் பிறகு கூட.''

''கல்யாணத்துக்குப் பிறகு என்ன 'எய்ம்?'''

''குழந்தை பெத்துக்கறது...''

நான் சிரித்தேன்: ''ஆசையாயிருக்கா ரங்கா, குழந்தைக்கு?''

''உனக்கு இல்லையா விஜி?''

''இல்லை ரங்கா...'' – மெல்லிய குரலில் சொன்னேன். ''இதென்ன நை நைன்னு... இந்தப் பேச்சுக்குக் கவலைப்பட்டால் முடிவு ஏது?''

''அப்ப, வேண்டாம்னே வச்சுடுவோம்!''

''ச்சேச்சே... வந்துதுன்னா சரி, வரலேன்னாலும் சரி!''

''புடவை ரவிக்கைக்கு ஆசைப்படாம இருந்தது சரி... எப்படிக் குழந்தை–குடும்பம்கூட ஆசையற்றுப் போகும்? தெரியலையே...''

''ஆசையைப் பிரிச்சுப் பிரிச்சு இதுல வேண்டாம், அதுல வேண்டாம்னு வச்சுக்க முடியுமா? பிரிச்சு வச்சுண்டா போலியாயிடாதா?''

''மனுஷா மேல நம்பிக்கை போயிடுத்து இல்ல உனக்கு?''

''நோ. ஒரு நாளும் இல்லை.''

வால் முளைத்தாலும் அறுத்துக் கொள்ள வேண்டும். முளைத்த வாலை மறைத்துக் கொள்ள வேண்டும். வாலற்ற நரிக் கூட்டத்து நடுவே நாமும் வாலற்ற நரியாய் இருப்பதும் சிரமம்தான்! ஆனால் இந்த ச்சிரமம் என் வரையில் மட்டும்தான். காட்டிக் கொண்டால் பலபேரின் கவனம் ஈர்த்தால் ரங்காவுக்கு கஷ்டம் வரும். ரங்காவும் ஆசைப்படுகிற ஜாதி. குத்துவிளக்கு ஏந்திய இன்னொரு பெண்தான் ரங்கா! புடவை-ரவிக்கை போடவில்லையே தவிர, ரங்காவும் மனசுக்குள் பெண்தான்! என்னைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பதே உத்தமம். இது இந்த சிந்தனை எனக்கு ஏன் வாய்த்தது? ஏன் சாதாரண பெண்ணாய் இல்லாது போனேன்? என் அனுபவம் வேறுஎவர்க்கும் இல்லாததாலா? எனக்கு நேர்ந்தது கல்பாவுக்கு நேர்ந்தால் இப்படிக்காயமாட்டாளா? தனக்கு இல்லையே என்பதால் கோபமா?

என்னை மாற்றியது யார்? நாகப்பனா? வில்லிங்ஸ்டனா? ராம்குமாரா? பிச்சையா? ரங்காவா? இல்லை, என்னுள் கிளர்ந்த நானேயா? இது ஒட்டுமொத்தமும் சேர்ந்து இன்றைய எச்சமா...?

அப்படியெனில், 'நாகப்பனே நமஹ' என்றுதானே சொல்ல வேண்டும். சொல்லுவோமா?

'நாகப்பனே நமஹ!'

'என் விரல்களை மெல்ல முத்தமிட்டு குளிர்வாய் பேசின இளைஞனே, என்னால் உந்தப்பட்டு என்னிலும் உயர்வானவனே போற்றி!'

'வில்லிங்ஸ்டனே நமஹ!'

'இசையில் கரைந்து மீண்டு இசையை விலக்கி, எதுவரினும் சரி என்ற தன்மைக்கு நகர்ந்து, அன்பைச் சொல்வது மட்டுமே வேலையாகிப்போன நண்பனே போற்றி!'

'ராம்குமாராய நமஹ!'

'கரைந்தொழுகி பெண் உடம்பை காதலென்று கனவு கண்டு, என் நிர்வாணம் தெரிந்து...'

''இங்க எல்லா விஷயமும் குட்டிச்சுவர்னு நினைக்கறதுனாலே இப்படி தோண்றதா?''

''நா அப்படி ஒண்ணும் கமெண்ட் அடிச்சதில்லையே...''

''ஆசையிருந்தா, ஆசை வந்துதுன்னா பொறுப்பு சுமக்கணும். பொறுப்பு சுமக்காம இருக்கறதுதான் ஆசையாயிடுத்து இல்லையா?''

''என்ன திடீர்னு எம்மேல கோபம்?''

''கோபமில்லை விஜி... குழந்தை 'வந்துதுன்னா வரட்டும்: வராட்டி சரின்னு சொல்றது நியாயமில்லையே...''

''விவரணையா சொல்லட்டுமா...? ஆசைப்பட்டா பொறுப்பு ஏத்துக்கணும். பொறுப்பு ஏத்துக்க பயந்து ஆசைப்படாம இருக்கேன்றது விதண்டாவாதம். பொறுப்பு இல்லாமலா இரண்டு தங்கைக்குக் கல்யாணம் பண்ணினேன்? ஆசைப்பட்டா வளைக்கத் தோணும். வளைக்க முடியாத ஆசையாயிருந்தா மனசு அல்லல்படும். மனுஷாளால முடியாத காரியமா போய் கடவுள், ப்ரேயர்ன்னு வரும். கேட்டது கிடைக்கலேன்னா இடிஞ்சு போகும் அமைதி இருக்காது. யாரையாவது குத்தம் சொல்லத் தோணும். அதுக்கும் ஆள் கிடைக்கலேன்னா, தன் தலைல தானே அடிச்சுக்க ஆத்திரம் வரும். ரிலேஷன்ஷிப் கெட்டுப் போகும். யாருமே சரியான உறவு இல்லைன்னு கோபம் வரும்... கோபம் மறுபடி மறுபடி உறவைக் கெடுக்கும். நல்ல உறவு வேணும்னா ஆசைபடாம இருக்கிறது முக்கியம். சரியா?''

''ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியா?''

''இதை யோசிக்க கிருஷ்ணமூர்த்தி வேணுமா? தானா உட்கார்ந்து யோசனை பண்ணினா எல்லாருக்கும் வரும்...''

''நான் உன்னைக் கல்யாணம் பண்ணிண்டது குழந்தைக்கு ஆசைப்பட்டுன்னு சொன்னா?''

''சரி.''

''அப்போ உறவு சரியாதா...? அனுசரிச்சுப் போறது அலுப்பாயிடாதா? எத்தனை நாளைக்குப் பணிஞ்சு இருக்கறது... போறும்னு தோணாதா?''

''இது நியதி. ரோடு போட்டாச்சுன்னா நடுவுல கோடு போட்டு வலப்பக்கம் இடப்பக்கம்னு பிரிச்சுதான் இருக்கும். நான் வலப்பக்கம் போவேன்னு முரண்டுபிடிக்கலையே... இடப்பக்கம் தனியா நடந்தேன். இப்ப உங்களோட நடக்கிறேன். ஸ்பீடா போன்னா ஸ்பீடா போறேன். மொள்ள போன்னா மொள்ள போறேன். எனக்கு'எய்ம்' இல்லைன்னு சொன்னது இதுபத்திதான்.''

''குழந்தை பெத்துக்கறது ஆள் வளைச்சுப்பண்ற காரியமில்லையே!''

''இல்லை.''

''அத்தை சொன்ன குத்துவிளக்குப்பூஜை பண்ணேன்.''

நான் வியப்புடன் ரங்காவைப் பார்த்தேன். அருகே நகர்ந்து அவரைத் தடவிக் கொடுத்தேன்: ''இத்தனை ஆசையா குழந்தைக்கு...''

ரங்கா விழிடியர்த்தி என்னைப் பார்த்தார்.



''சரி, பண்ணினா போச்சு: இதுக்கு இத்தனை சுத்தி வளைக்கணுமா?''

''தாங்க்யூ விஜி!''

நன்றி சொல்வதை மற என் புருஷனே!

# 11

**கோ**வில் மண்டபம் மாதிரி தூண்களுடன்கூடிய அகலமான கல்யாண சத்திரம். கிழக்கு நோக்கி மரப்பீடம் போட்டு கலசங்களும், கடவுள் சிலையும் வைக்கப்பட்டிருந்தன. நிறைய பெண்கள் முழங்கை உயர குத்துவிளக்குடன் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள். எல்லாரும் கடவுளுக்குப் பயப்படுகிறவர்கள். கணவனுக்குப் பயப்படுகிறவர்கள். பிள்ளைக்கு அடங்குபவர்கள். பிறர் பேச்சு பொறுக்காதவர்கள். இதில் பிறர் பேச்சு பொறுக்காமல் இருப்பது மிக முக்கியமான குணம்.

ஓர் இளம் வயது பெண் சிராய் உடுத்திக் கொண்டிருந்தவள், குத்துவிளக்கை பதவிசாய் பிடித்து மெல்ல மெல்ல அசைந்து நடந்தபடி சுற்றி உள்ளவர்களை நோட்டமிட்டுவிட்டு, கண்களை அடக்கமாய் தாழ்த்திக் கொண்டாள்.

'அப்பா! எப்படி மகாலெட்சுமி மாதிரி இருக்கா' என்று அவள் தன்னைத்தானே வியந்து கொள்பவளைப் போல தோன்றினாள். அவளை யாரோ தொட்டுப் பேசியபோது 'ஹாங்' என்று பயந்தவள் போல குத்துவிளக்கை இறுக்கிக் கொண்டாள். அவள் தலையைத் தடவிப் பேசியதும் வெட்கத்தில் நிலம் நோக்கினாள். இந்த வெட்கம் நிஜம்தானா? இயல்பா? பெண்ணின் குணமா?

'நான் நோக்கின் நிலம் நோக்கும்; நோக்காக்கால் எனை நோக்கி மெல்ல நகும்.'

திருவள்ளுவர் பொய் சொல்வார்ரா? எனக்கு வெட்கமே வருவதில்லையே... இது தவறா? கெட்டுப்போன குணமா? நானும் வெட்கப்படுகிறேன். பொய் சொன்னால் வெட்கப்படுகிறேன். கடிந்து பேசிவிட்டு வெட்கப்படுகிறேன். என் அறியாமைக்கு வெட்கப்படுகிறேன். இப்படி வெறுமே வெட்கப்படுவது எங்ஙனம்...? நான் எதில் சேர்த்தி? இங்கே சரியான வித்து யார்? நானா, அவளா? வெட்கம் என்பது பயத்தின் வெளிப்பாடா? அவளுக்குப் பயம் எதிர்காலம் பற்றியா? எதிர்காலம் சுபிட்சமாய்தான் அமைய வேண்டும் என்கிற பிடிவாதமான ஆசையா? அதன் பொருட்டு தான் குத்துவிளக்குப் பூஜையா? பூஜைக்கு வரிசையாய் பெண்கள் உட்கார்ந்தனர். கல்பா எதிர்மூலையில் உட்கார்ந்திருந்தாள். சரோஜினி என் வரிசையிலேயே நான்கு பெண்கள் தள்ளி அமர்ந்திருந்தாள். குங்குமம் எதிரே பரப்பி, 'நமஹ' சொல்லும்போது, குங்குமத்தை விளக்குக் காலடியில் தூவ வேண்டும்....

நான் என் எதிரே எரியும் தீபத்தை உற்றுநோக்கினேன். ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு சுடர். முன்நெடி சுடர் இந்நேரம்

இல்லை: மாறிக் கொண்டே இருக்கிறது — மனிதர்களைப்போல், உலகம்போல், பிரபஞ்சம்போல் மாறிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு விநாடியும் உடலும் மனசும் மாறுகின்றன. நேற்றைய விஜி வேறு; இன்றைய விஜி வேறு. இதில் நிஜமான விஜயலெக்ஷ்மி எது...? தெரியாது.

'நேத்திக்கு நாலு பேரோட படுத்திண்டியே... இன்னிக்கு குத்துவிளக்குப் பூஜை பண்றயே' என்று என்னை நானே கேட்டுக் கொள்ள முடியாது. இன்று உள்ளபடியே என்றும் இருப்பேன் என்று சொல்லவும் முடியாது...மாறுதல் இயற்கை. மாறுதல்தான் உலகம். ஆனால் மாறாமல் இரு என்றுதான் எல்லாரும் சொல்கிறார்கள். பொருள் என்று ஏதுமில்லை. மாறுதலே பொருள் என்றால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

மாறுதலே சாசுவதம் எனில் எதிர்கால பயம் போய் விடாதா? நேற்றுடன் இன்றை ஒப்பிட்டுப் பார்க்கையில்தானே நல்லதும் கெட்டதும், பயமும் பயமற்றதும் வருகின்றன....

'நமஹ...நமஹ' என்றசொல் வரும்போதெல்லாம் குங்குமம் போட்டேன்.

அது சரி: மாறுதல் என்பது சுடர் மாதிரி. கணத்துக்குக் கணம் எனக்கும் உண்டென்றால் ஞாபகசக்தி எதற்காகா...? கல்பனாவையும் — சரோஜினியையும் அடையாளம் கண்டு 'ஹலோ' சொல்வது எதன் பொருட்டு? எவ்விதம்? ஞாபகசக்தி தவறோ? ஒன்றின் தொடர்பாய் ஒன்று மாறுதலாகி விடுகையில் முந்தின நிமிஷத்தின் எச்சம் இந்த நிமிஷத்திலும் இருக்கிறது. பிறகு மெல்ல மெல்ல காய்ந்து உதிர்ந்து போகிறது. பத்து வருடம் கழித்து கல்பாவை எனக்கு அடையாளம் தெரியாது...

'அடியே, நீ கல்பாதானா?' என்று கூவும்படி ஆகும். உடல் மட்டுமா? மனசும் புத்தியும்கூட கல்பாவுக்கு மாறிப் போயிருக்கும். அப்போது கல்பா வேறுவிதமாய் இதமாய் பேசக் கூடும். நாளை நிச்சயம் மாறுவாள் என்கிற கல்பாவிடம் இன்று எப்படி துவேஷம் காட்டுவது... இன்றைய கல்பாதான் நாளைக்கும் என்று எப்படி நம்ப முடியும்? எனவே மனிதர் மீது — மாறும் மனிதர் மீது, உலகம் மீது நம்பிக்கையோ அவநம்பிக்கையோ எவ்விதம் சாத்தியம்? அவநம்பிக்கை - நம்பிக்கை இல்லாத நிலையில் கடவுள் வழிபாடு, குத்துவிளக்குப் பூஜை எதற்கு....?

எழுந்து விடலாமா? நான் குங்குமம் போடுவதை நிறுத்தினேன். இப்படி ஒட்டாது போகையில் வரும் நிலை சிரமம்தான்... கும்பலோடு கும்பலாய் கரைய முடியாமல் ஓடும் கால்களுக்கு நடுவே சிக்கிச் சீரழிவது கஷ்டம்தான்...

எழுந்தால் அத்தனை பேர் கவனமும் திரும்பும். 'பாதில போறாளே, மகாபாவி' என்று கூட்டம் சபிக்கும்.

'எல்லா உடம்பும் ஒன்றே என்று அறிந்தவனே போற்றி!'

'பிச்சையே நமஹ!'

'பராசக்தியே, பராசக்தி என்று தெரு பெண்களை வணங்கி, பெண் அணைத்து முத்தம் கொடுக்க பொருள் சக்தியில்லை, சக்தி வடிவமில்லை என்று பித்து தெளிந்தவனே போற்றி!'



என்னிடமிருந்து இவர்களும், இவர்களிடமிருந்து நானும் தெரிந்து கொண்டோம். தெளிவு பெற்றோம். யாரை நாங்கள் வணங்குவது?

பூஜை முடியும் நேரம். எதிர் மூலையில் 'ஹோ' என்று கூச்சல் கேட்டது. அந்தப் பக்கம் பெண்கள் எழுந்து நின்றார்கள். என் பக்கம் உள்ளவர்களும் விதிர்த்து எழுந்தார்கள். நின்றவர்கள் மறைத்தபடியினால் எனக்கு எதுவும் தெரியவில்லை.

நான்கு பெண்கள் தள்ளி நின்ற சரோஜி கூறினாள்: ''கல்பா... கல்பா... கல்பாவுக்கு சாமி வந்துடுத்து!''

நான் எழுந்தேன். குங்குமத்தைக் கீழே உதறிவிட்டு கல்பாவை நோக்கி நடந்தேன். சூழ்ந்திருப்பவர்களை விலக்கினேன். கல்பாவை இரண்டு பேர் தாங்கியிருக்க, கல்பா கைகூப்பி கண் செருக உதடு துடிக்க முகம் சிவக்க, தலை பறக்க சுழன்றாள்... உடம்பின் ஒவ்வோர் அங்குலமும் விதிர்த்துப் போட்டது: அவள் முகம் முற்றிலும் மாறி காணப்பட்டது.

இது என்ன, கல்பாவுக்குள் நடப்பது என்ன? கடவுளா? கல்பாவுக்குள் கடவுளா... கடவுளை கல்பா தாங்குவாளா?

'எல்லாருக்கும் குங்குமம் கொடு. எல்லாருக்கும் குங்குமம் கொடு. க்ஷேமமா இருப்பேள். பூஜை பண்றவாளுக்கு முழுபலன் கிடைக்கும். க்ஷேமமா இருப்பேள். விடாது பண்ணுங்கோ. வருஷம் தவறாம பண்ணுங்கோ...'

யாரோ 'ஆகட்டும்' என்றார்கள். பணிந்தார்கள்.

கடவுள் கட்டளையா இது! எங்கும் பிரகாசமானது விரும்புவது இதையா? கல்பா என்ன ஆயிற்று உனக்கு? ஏன் இப்படி உன்னை வருத்திக் கொள்கிறாய்? நேரே நில் கல்பா... கல்பாவைப் பலர் நமஸ்கரித்தார்கள். கல்பாவை தாங்கியிருந்த அவள் மாமியார், அவளை வேறொருவரை தாங்கச் சொல்லி விட்டு முன்வந்து கல்பாவை நமஸ்கரித்தாள். 'தாயே பரமேஸ்வரி' என்றாள். கல்பா மாமியாருக்குக் குங்குமம் தூவினாள். நிமிஷத்தில் அடங்கிப் போனாள்.

மாமியாரை மண்டியிட இந்த ஆட்டமா? அவளுக்குள் உன்னைப்பற்றி மரியாதை வர உபாயமா? இது வேஷமா? உன் உள் மனசு எண்ணம் சாமியாடிற்றா? கல்பா நீ உன்னை கொன்று கொண்டிருக்கிறாய். பயமுறுத்தல் தரும் பணிவு சுலபத்தில் உடையும்.

''நீ குங்குமம் வாங்கிக்கலையா?'' — சரோஜினி என்னிடம் உள்ளங்கை குங்குமத்தை நீட்டினாள்: ''நா பயந்தே போயிட்டேண்டி... எப்படி பதறித்துப் பார் அவ உடம்பு?''

எனக்கு கல்பா பற்றி வருத்தமாய் இருந்தது. புருஷன் குழந்தைகள் செல்வம் அந்தஸ்து இதற்குப் பிறகும் நீ தேடுவது என்ன? லோகாயதம் எதுவும் ஏன் நிறைவு தரவில்லை உனக்கு? குழந்தை பிறந்தால் மாறிவிடுமா உலகம்... உன் குழந்தை இந்த உன் தோற்றம் கண்டு பயந்துபோக மாட்டானா? மாமியார் மண்டியிட்டால் மாறிவிடுமா உலகு?

சரோஜினியின் புருஷன் பாஸ்கரன் வேகமாக எங்களை நோக்கி வந்தான்:

''கிளம்பு சரோ...எனக்கு இந்த பூஜையெல்லாம் கஷ்டமே

யில்லை: இதெல்லாம் மரியாதையா செய்ய வேண்டிய விஷயம்ரு சாமி வரது, பூதம் ஆடறதுல்லாம் நல்லது இல்லை...''

''உனக்கு ஏன் இஷ்டமில்லை பாஸ்கரன்?''

''கலவரமாயிருக்கு... அநாவசிய கலவரம். அரைமணி கழிச்சு இவளுக்கு சாமி வந்தா எனக்கு ராத்தூக்கம் போய்டும். பொண்டாட்டி பொண்டாட்டியா இருக்கணும்! சாமியா இருந்தா சாப்பிடறது, தூங்கறது எல்லாம் கஷ்டம்.''

''வாஸ்தவம் பாஸ்கரன்... சரோஜினி எப்படியும் உன்னை மிஞ்சிடக் கூடாதுன்னு பயமா உனக்கு?''

''என்னை மிஞ்சிட்டு என்ன செய்யப்போறு சரோஜினி? நா சமைச்சு அவ சாப்பிடப் போருளா? இப்படி சாமியாடி நல்லது வேண்டாம். என்னுடைய இரண்டு ரூம் குடித்தனம் போதும். இரண்டு குழந்தைகள், என் வருமானம் போறும். எனக்கு சரோஜினி சரோஜினியாதான் வேணும். சாதாரண வாழ்க்கை போறும்.''

''சாமி வந்தா பொண்டாட்டியா இல்லாது போயிடு வாளா?''

''எப்படி சாமியாடற பொண்ணை தோள்ல சாச்சுக்க முடியும்...? பொண்ணு பொண்ணு இருக்கணும். சாமியாடினுலும் கஷ்டம். ஆசாமிகளோட சுத்தினுலும் கஷ்டம். எனக்கு சரோஜினி உங்களைப் பாக்க வர்றதும் இஷ்டமில்லை. கற்பகத்தோடு பேசறதும் இனி பிடிக்கலை. நீங்க அதீதம். அந்தப் பொண்ணு இன்னொரு அதீதம். எனக்குத் தாங்காது. என் குழந்தைகளுக்குத் தாங்காது... சரோஜினி, வா போலாம்.''

துணிப்பையில் குத்துவிளக்கைச் சுருட்டிக் கொண்டு தெருவில் இறங்கி சரோஜினி புருஷனுடன் நடந்தாள்.

எனக்குக் குழம்பிற்று.

# 12

''என்ன பூஜை முடிச்சாச்சா?'' — ரங்கா கதவைத் திறந்தார். ''மனசு நிம்மதியாய் இருக்குமே... வெத்து நம்பிக்கைதான். ஆனு ரொம்ப ஆரோக்கியம்...'' — தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

''கல்பாவுக்கு சாமி வந்தது...''

''அப்படி என்ன சொன்னு?''

''எல்லோரும் க்ஷேமமா இருப்பாளாம்!''

''அப்படியா?''

''என்ன அப்படியா?''

''ஏன் அது நல்ல வார்த்தைதானே!''

''நல்ல வார்த்தைதான். எப்படி சாத்தியம்? எல்லாரும் எப்படி சௌக்கியமா இருக்க முடியும்? இயல்புக்கு விரோதமில்லையா? வெறும் ஆசை வார்த்தைதானே... சாமிக்கு ஆசை உண்டா? புலி சௌக்கியமா இருக்க, மான் சாகவேண்டாமா?



பாம்பு உயிர்வாழ தவளை சாகவேண்டாமா? ச்சே... சகலமும் பொய்யா இருக்கு. பெரிய பெரிய பொய்யா வெட்கமில்லாம சொல்லிண்டு... பொய்யை ஏத்துண்டு...''

''என்ன ஆச்சு உனக்கு விஜி?''

''இனிமே இந்த பூஜையெல்லாம் வேண்டாம் ரங்கா!''

''சரி பூஜை வேண்டாம். வேறென்னென்ன வேண்டாம், லிஸ்டு போடு...''

''குழந்தைகூட வேண்டாம் ரங்கா!''

''விஜி, நெஜமாதானு?''

''வாஸ்தவம்தான்.''

''ஏன் விஜி?''

''இவ்வளவு குழப்பமா இருக்கிற உலகத்துக்கு இன்னொரு ஜீவன் வந்து நம்மை மாதிரியே அலைக்கழியணுமா?''

''நெஜமாவே குழந்தைகள் மேல பிரியம் இருந்தா குழந்தை பெத்துக்கக்கூடாது ரங்கா...''

''கம் ஆன், என்ன குழப்பம் உனக்கு?''

''குழப்பமில்லை ரங்கா, ஒரு தெளிவு...

''ஒரே குடும்பம், ஒரே வித்து, ஒரே வளர்ப்பு... நாங்க மூணு பேரும் மூணு விதம்!

''இங்கே ரூல்ஸ்ன்னு ஒண்ணு போட்டிருக்கு. அதை மீறிட்டு மறுபடி மரப்புக்குள்ள எட்டிப்பாக்கற நான்—

''மரபுக்குள் சௌக்கியம் கருதி உள்ளே பூந்துண்டு வெளியே மீற முடியலையேன்னு தவிக்கிற கல்பா—

''மீறுவது - மீறும இருக்கறது இரண்டையும் யோசனை பண்ணும, இழுத்த இழுப்புக்குப் போய், அப்பப்ப செய்ற காரியத்துக்குச் சமாதானம் சொல்ற சரோஜினி—

''...இந்த மூணு பேர் புத்தியும், உங்க புத்தியும், உலக புத்தியும் என் நினைவை தாக்காதா, குழப்பாதா?

'''பூஜை பண்ணு'-ஒருத்தர். 'பண்ணுதே'ன்னு ஒருத்தர். 'பண்ணினு நல்லது. பண்ணுட்டாபோனு போறது'ன்னு ஒருத்தர்... குழந்தை குலைஞ்சுட மாட்டானு? திசையே தெரியாத நமக்கு குழந்தை பிறந்து எங்கு போகும்? எப்படி நடக்கும்? இந்த கும்மிருட்ல விடறதுக்கா குழந்தை... எதையெடு குழப்பம், எதையெடு சந்தேகம். ச்சே... வெறுப்பா இருக்கு.''

''ஸோ...''

''ஸோ... குழந்தை வேண்டாம் ரங்கா... வேணும்னு, ஒண்ணு செய்யலாம்...''

''என்ன?''

''எங்காவது பிறந்த குழந்தையைத் தத்து எடுத்துக்கலாம்... சாப்பாட்டுக்கு இல்லேன்னு தவிக்கறதைக் கூட்டிண்டு வந்து சாப்பாடு போடலாம். சாதம் போட்டு வளர்க்கலாம். அது பிறந்தாச்சு. இனி வளர்ச்சியைத் தடுக்கமுடியாது. வளர ஜலம் ஊத்துவோம்... வெப்பமோ - விஷக்காத்தோ, அது உறிஞ்சி—அதை ஏத்துண்டு வளரட்டும்.''

''அவ்வளவு வெறுப்பா வாழ்க்கை மேல...''

''வெறுப்பு தத்து எடுத்துக்குமா? இது லவ் ரங்கா... நிஜமான நேசம். குழந்தை கேள்வி கேட்டா பளிச்சுன்னு பதில்

சொல்லத் தெரியுமா உங்களுக்கு? தீர்மானமா ஏதும் தெரியுமா? தெளிவுபடுத்த வலிவுண்டா? சோற்றுப்பாடே கதியென்றால் ஞானமும் தெளிவும் எண்ணிக்கு வரும்? எந்த புராணம், எந்தக் கடவுள் உசத்தி? எல்லாம் குறைபட்டிருக்கு. இன்னும் தேடறதா சொல்றது, மறுபிறவி வேண்டாம்ன்னு கதறிக் கதறி சொல்றது... இந்த கதறலுக்கு என்ன அர்த்தம்? இது தப்பான இடம். இது பனிஷ்மெண்ட் ஏரியா. அப்படித்தானே! பனிஷ் பண்ண குழந்தை பெத்துக்கவா? பாவம் இல்லையா?''

''சரியான கோழை நீ விஜி!''

''அப்ப, வீரம் எதுன்னு சொல்லணும்...: கோழைத்தனத்தையே வீரம்ன்னு லேபிள் ஒட்டிக் காட்டக் கூடாது! ஏன் உங்களுக்குப் பிறந்த குழந்தையைத்தான் நீங்க லவ் பண்ண முடியுமா? வளர்க்க முடியுமா? உண்மையான குழந்தை ஆசை இப்படித்தானா?''

''அந்தமாதிரி வளர்க்கிற ரெஸ்பான்ஸிபிலிட்டிகூட எதுக்கு? சும்மா இருக்கலாமே...''

''எப்படி சும்மா இருக்க முடியும்? வாடின பயிருக்கு ஜலம் ஊத்தற காரியம்தான். மத்தபடி மண் குணம், தாவர இயல்பு. ஜலம் ஊத்தி மாத்த முடியாது. ஜலம் ஊத்தாம வளரவும் வளராது.''

''டக்குன்னு கிழவியாய்ட்டா விஜி!''

''எப்பவோ ஆய்ட்டேன் ரங்கா! கிழத்தனம் மனசுல விழுந்தாச்சு. இருக்கறதை சரி பண்ணலாம்னுதான் ஔவையார் கிளம்பினா. கிழவி வரம் கேட்டா. இங்கே வரம் கேட்க சாமியில்லை. உங்களைக் கேட்கறேன். நமக்குக் குழந்தை வேண்டாம் ரங்கா...''

ரங்கா மௌனமாய் போய் நாற்காலியில் சரிந்து உட்கார்ந்தார்.

நான் குத்திட்டு சுவரோரம் அமர்ந்தேன்.

எதிர்வீட்டுக்கு பெயிண்ட் பூச்சு நடந்து கொண்டிருந்தது. வசதிக்குப் பிறகுதான் ரசனை. திடமான இருப்புக்குப் பிறகுதான் நகாசு வேலை. ஓட்டை வீட்டுக்கு பெயிண்ட் பூசி என்ன பயன்...?

கண்களை மூடிக் கொண்டேன். மறுபடி மலைப்பாதை, சுனை நீர், குளிர் காற்று உள்ளே தோன்றிற்று. வரிசை வரிசையாய் நகர்ந்த கல்யாணமுருங்கை மரங்கள் தோன்றின.

சிவந்த பூ, பச்சை இலைகள், தொலைவிலிருந்து பெரும் பசுமையையும், மலர்ச்சியையும் காட்டும் மரம்... இழைக்கத் தாங்காது. காற்றை எதிர்த்து நிற்காது. காய் தராது. கனியாது. பசேலென்று நிற்கும் மனித வாழ்க்கை மாதிரி.

★





# ஜெயகாந்தன்

'ஆனந்த விகடன்' அலுவலகத்தில் திரு. பார்த்தசாரதி என்ற இளைஞர், அப்போது வாசகசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பழைய புத்தகங்களையும் – புதுப் புத்தகங்களையும் பிரித்து அடுக்கிக் கொண்டிருந்தவர், ஒரு சிறுகதைத் தொகுப்பைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்.

''ஸார்! இந்தச் சிறுகதைகளைப் படித்துப் பாருங்களேன்! இவை வித்தியாசமான முறையில் அமைந்திருப்பதைப்போல எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் நிச்சயமாக இவற்றை ரசித்துப் பாராட்டுவீர்கள்!'' என்றார். அந்தப் புத்தகத்தின் தலைப்பு – 'ஒரு பிடி சோறு.' அதை எழுதியவர் ஜெயகாந்தன்.

புத்தகத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு கதையும் என்னைச் சிந்திக்க வைத்தது. புத்தகம் முழுவதையும் படித்து முடிக்கும் வரையில் வேறு எந்த வேலையிலும் மனம் பதியவில்லை. துணிச்சலான கருத்துக்களை, அவருக்கே உரிய தனியான நடையில் வெகு லாகவமாகக் கையாண்டிருந்தார் ஜெயகாந்தன். அவரை எப்படியாவது 'ஆனந்த விகடனி'ல் எழுதும்படி செய்ய வேண்டும் என்று ஆவல் எனக்கு உண்டாயிற்று. பத்திரிகையில் முழுப்பொறுப்பை ஏற்றிருந்த திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களின் அனுமதியுடன் அவரைச் சந்தித்துப் பேசினேன்.

'ஆனந்த விகடனில் எழுதுங்கள்' என்று அந்த அலுவலகத்திலிருந்து ஓர் உதவி ஆசிரியர், அழைப்புடன் வந்து நின்றால், அந்த எழுத்தாளர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக் கொள்வார் என்றுதான் எல்லாரும் நினைப்பார்கள். ஆனால் ஜெயகாந்தன் அப்படி எழுதச் சம்மதிக்கவில்லை. ''என்னுடைய சிறுகதைகளை நீங்கள் துணிந்துபோட மாட்டீர்கள். போட்டாலும் உங்கள் பத்திரிகையின் சௌகரியத்திற்கு ஏற்றபடி 'எடிட்' செய்து போடுவீர்கள். அதற்கெல்லாம் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். எனக்கு இந்த வாய்ப்பு வேண்டாம்'' என்று ஒதுங்கிக் கொள்ள முயன்றார் ஜெயகாந்தன்.

அந்த நல்ல எழுத்தாளர் எழுதக் கூடிய வாய்ப்பை 'ஆனந்த விகடன்' இழந்து விடக்கூடாது என்று நான் எண்ணினேன். அவருடைய நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டேன். மற்றவர்களைவிட அதிகமாகச் சன்மானம் செய்து கொடுப்பது, அவருடைய தனித்தன்மை வெளிப்படும்படி சிறுகதைகளை அவர் சுதந்திரமாக எழுத இடம்கொடுப்பது, அவருடைய எழுத்துக்களை அவருடைய சம்மதம் இன்றி 'எடிட்' செய்வதில்லை...இப்படிப் பல நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டேன்.

ஜெயகாந்தன் 'ஆனந்த விகடனி'ல் எழுதத் தொடங்கினார். அந்தச் சிறுகதைகளைப் படித்தவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். அவருடைய எழுத்துக்கள் எல்லா வாசகர்களுடைய கவனத்தையும் கவர்ந்தன. வாசகர்கள் பலரிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்தன. ஒருசில கண்டனக் கடிதங்களும் வந்தன. இது நாங்கள் எதிர்பார்த்ததுதான். ஜெயகாந்தனின் சிறுகதைகளில் போலிச் சம்பிரதாயங்களை உடைத்து எறியும் துணிச்சல் இருக்கும். மேலோட்டமான ரசனைகள் உள்ளவர்கள் மத்தியில் இது பெரும் சலசலப்பை ஏற்படுத்திற்று.

அப்போது ஆசிரியர் வாசன் வாராவாரம் ஒருமுறை ஆசிரியர் குழுவைக் கூட்டி விவாதிப்பார். எல்லாரும் அவரவர் கருத்துக்களை வெளிப்படையாக எடுத்துச் சொல்லலாம். அப்படி ஒரு கூட்டத்தில், ஆசிரியர் குழுவைச்சேர்ந்த திரு. ஸ்ரீதர்



## துணிச்சலுக்கு மறுபெயர் ஜெயகாந்தன்!
## தன்னம்பிக்கைக்கு மறுபெயர் ஜெயகாந்தன்!
## தமிழ் சிறுகதைகளுக்கு மறுபெயர் ஜெயகாந்தன்!

மிருந்த மனத்தாங்கலுடன் ஜெயகாந்தனின் கதைகளைக் கண்டித்துப் பேசினார். "ஜெயகாந்தனின் சிறுகதைகளில் தவறான, ஒழுக்கக்கேடான கருத்துக்கள் வெளிவருகின்றன. அவற்றைப் படிக்கவே பெண்கள் கூசுகிறார்கள். 'ஆனந்த விகடனை' வழக்கமாக வாங்கிப் படிக்கும் குடும்பங்களில் பெரியவர்கள் வெள்ளிக்கிழமை வந்தாலே மனங்கலங்கும் நிலை ஏற்பட்டு விட்டது!" என்று கொஞ்சம் காரசாரமாகவே தாக்கிப் பேசினார். நேர்மை, ஒழுக்கம், நியாயம் இவற்றுக்கெல்லாம் தானே காவலர் என்ற தற்பெருமை கொண்டவர் அவர். போலிவேதாந்தம் பேசுவது தவிர, இலக்கியத் தரமான கதைகளை மதிப்பிடத் தகுதி இல்லாதவர். கொள்கைகளைப் பற்றியும், ஜெயகாந்தனின் சிறுகதைகளைப் பற்றியும் அந்தப் போலிமனிதர் ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொண்டு சண்டை போட்டது எனக்கு வியப்பாக இருந்தது.



ஆசிரியர் வாசன் எல்லாருக்கும் சுதந்திரம் கொடுப்பவர். எல்லாருடைய கருத்துக்களையும் பாரபட்சமின்றிப் பரிசிலனை செய்பவர். அதனால், "இதுவரை வெளிவந்த ஜெயகாந்தனின் சிறுகதைகளை எனக்கு அனுப்பி வை!" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். கதைகளை அனுப்பி வைத்தேன். எனக்குச் சிறிது கலக்கமாகவே இருந்தது. மறுநாள் வாசன் என்னிடம் 'போன்' மூலமாக, 'ஜெயகாந்தனை நான் சந்திக்க விரும்புகிறேன்' என்று வேறு சொல்லிவிட்டார். என்னுடைய கலக்கம் மேலும் அதிகமாயிற்று. ஆனால், தொடர்ந்து நடந்த நிகழ்ச்சி என்னை மனம் நெகிழ்ந்து வியக்கச் செய்துவிட்டது!

என்னை அழைத்து, "ஜெயகாந்தனின் கதைகளைப் படித்தேன். பண்போடு நயமாக எழுதியிருக்கிறார். அவரைத் தொடர்ந்து எழுதச் செய்ய வேண்டும்!" என்று சொன்னார் ஆசிரியர் வாசன். நேரில் அவரைச் சந்தித்த ஜெயகாந்தனிடமும் அவரை மிகவும் பாராட்டி, தொடர்ந்து எழுதும்படி கேட்டுக் கொண்டார். ஆசிரியர் வாசனின் பாரபட்சமற்ற மதிப்பீடும், கருத்தாழமும் இதில் தெளிவாக வெளிப்பட்டது. போலிவேதாந்தம் பேசியவரின் முகமூடியும் இதில் கிழித்தெறியப்பட்டது!

இப்படி ஒரு பிரச்சினைக்கு உள்ளான அவருடைய சிறுகதை 'அக்கினிப் பிரவேசம்' என்பது. "எனது கதையின் முடிவை மாற்றியும், அந்தக் கதாபாத்திரத்தின் உயிரையே முடித்தும், அதேதலைப்பில் கதைகளை எழுதியவர்களுக்குத் தமிழ் நாட்டின் பெரும் பத்திரிகைகள் ஊக்கம் தந்தன. அந்த அத்துமீறல்களையெல்லாம் நான் மிகப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருந்தேன். அதன்பிறகு — அதன் முடிவை மாற்றி — நான் சொல்லி வந்த கருத்துக்களை மாற்றிக் கொள்ளாமல், நான் ஒரு நாவலை எழுத-அந்த 'அத்துமீறல்'களும், எனது 'அக்கினிப் பிரவேசமும்' காரணமாக இருந்ததால், அவர்களுக்கும்கூட நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்!" என்று பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார் ஜெயகாந்தன். அப்படி உருவான படைப்புத்தான் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவல். அதில் நாம் மறக்கவே முடியாத பாத்திரமாக அமைந்தவள்தான் கங்கா.

ஜெயகாந்தனின் எழுத்தில் உள்ள வேகம் அவருடைய மேடைப் பேச்சுக்களிலும் இருக்கும். தனது கொள்கைகளை எடுத்துவைக்க, எந்தச் சந்தர்ப்பமானாலும் — எவர் முன்னிலையிலும் தயங்க மாட்டார். பெரியாரை எதிர்த்து அவர் முன்னிலேயே, அவர் திருச்சியில் மேடையில் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். திருமதி இந்திரா காந்தியை எதிர்த்து 1971-ம் ஆண்டு தேர்தல் கூட்டங்களில் அவர் பேசியதையும் கேட்டிருக்கிறேன்.

தன்னுடைய தனிச் சிறப்பை எடுத்துச் சொல்லிக் கொள்ள அவர் தயங்க மாட்டார் 'அன்று புதுமைப் பித்தன் - இன்று ஜெயகாந்தன்!' என்று அவர் தனது திறமையைப் பற்றி அடித்துச் சொல்லிப் பேசுவார். 'தமிழ்ச் சிறுகதைகளின் உலகில் இந்த அரை நூற்றாண்டு காலத்தில், உலகின் தரத்துக்கு உகந்த சிறுகதைகளை எழுதி, தமிழையும் - தங்களுடைய தரத்தையும் உயர்த்திக் கொண்ட எழுத்தாளர்கள் ஒருசிலர் உண்டு. அவர்களில் நானும் ஒருவன்' என்று தனது அனைத்திந்திய நூல் வரிசை புத்தகத்தின் மதிப்புரையில் எழுதி இருக்கிறார் அவர்.

காஞ்சிப் பெரியவர்களைச் சந்திக்க வேண்டும் என்று அவர் பெரிதும் விரும்பினார். அவர்களுடைய ஆசிகளைப் பெற நானும் ஜெயகாந்தனும் சென்னையில் புறப்பகுதியில் இருந்த திரு.எஸ்.வி.சுப்பையாவின்தோட்டத்துக்குப் போனோம். அங்கே அவர் காஞ்சி முனிவரின் முன்நின்று மெய்ம் மறந்து, மனம் உருகிப்போன நிகழ்ச்சி இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. அன்றிலிருந்து அவருடைய வாழ்க்கையிலேயே ஒரு புதிய மாறுதல் உண்டாயிற்று. சுவாமிகளை ஒரு பாத்திரமாக வைத்து அவர் எழுதிய நாவல், தமிழ்ப் புத்தக வெளியீட்டில் பிரமிக்கத்தக்க சாதனையையே ஏற்படுத்திற்று.

ஜெயகாந்தனும், நானும், பாபு கிருஷ்ணசாமியும் சேர்ந்து உருவாக்கிய 'ரசனா' என்ற திரைப்பட 'கிளப்,' தரமிக்க வெளிநாட்டுப் படங்களை, உயர்ந்த ரசனை உள்ள மக்களுக்காகத் தனிப்படத் திரையிட்டுக் காண்பித்தது. அந்தச் சமயத்தில் வெளியான ஜெயகாந்தனின் முதல் திரைப்பட முயற்சியான 'உன்னைப் போல் ஒருவன்' படமும், உயர்ந்த ரசனை கொண்ட மக்களின் பாராட்டைப் பெற்றது. ஜனாதிபதியின் பரிசும்—பாராட்டும் அந்த மிகச் சிறந்த எளிய முயற்சிக்குக் கிடைத்தது.

ஜெயகாந்தன் எழுத்தாளர் என்ற முறையில் சாகித்ய அகாடமி பரிசு பெற்றவர். அவருடைய 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவல் திரைப்படமாக உருவாக்கப்பட்டபோது, அனைத்திந்திய அளவில் புகழ் பெற்றது. பல மொழிகளிலும் அவருடைய எழுத்துக்கள், மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவு எல்லாத் துறைகளிலும் பெருமையும் புகழும் பெற்ற எழுத்தாளர்கள் வெகுசிலரே. தமிழுக்கு அப்படி ஒரு ஜெயகாந்தன் கிடைத்தது, தமிழுக்குப் பெருமை.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக என்னுடன் நெருங்கிப் பழகி வரும் நண்பர் அவர். எங்களுக்குள் கருத்துவேறுபாடுகள் நிறைய உண்டு. அதேபோல எண்ண ஒற்றுமைகளும் பலவிதத்தில் உண்டு. இவை எதுவும் எங்களுடைய நட்பைப் பாதித்ததில்லை. என்னுடைய குடும்பத்தில் ஒருவராக இடம்பெற்றவர் அவர். "ஜெயகாந்தன் என்னுடைய மூன்றாவது மகன்!" என்றே எனது தாயார் சொல்வது வழக்கம்.

துணிச்சலுக்கு மறுபெயர் ஜெயகாந்தன்!

தன்னம்பிக்கைக்கு மறுபெயர் ஜெயகாந்தன்!

தமிழ் சிறுகதைகளுக்கு மறுபெயர் ஜெயகாந்தன்!